பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-116

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்


மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 17<br>Vol : 17 | இதழ் : 10<br>Issue : 10 | www.ncbhpublisher.in | ஜனவரி 2025<br>January 2025 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |





வரலாற்று நாயகர்
ஆர்.நல்லகண்ணு
- எஸ்.காசி விஸ்வநாதன்



சலபதி எனும்
போக்கறு பனுவற் பித்தர்
- அ.கௌதம்ராஜ்




## சோதனைக் குடுவைக்குள் குட்டிப் பிரம்மாக்கள்

- நெல்லை சு.முத்து


15.12.2024 அன்று மதுரையில் என்சிபிஎச்சின் லெனின் தேர்வு நூல்கள் 12 தொகுதிகள் வெளியிடப்பட்டன. இதில் இ.கம்யூ மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், வெ.இறையன்பு, என்சிபிஎச் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், மா.கம்யூ மாநிலச் செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம், இ.கம்யூ மாநிலச் செயற்குழு உறுப்பினர் T.ராமசாமி மற்றும் என்சிபிஎச் முதுநிலை விற்பனை சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.





# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 130/-




₹ 690/-




₹ 330/-



கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 17 இதழ் - 10 - ஜனவரி 2025*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

ஆசிரியர் குழு
க.சந்தானம்
பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு
*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
சந்தா தொகையை
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1. காஸ்ட்ரோவிடம் கற்போம்!
ஆசிரியர் குழு.................... 04

2. வரலாற்று நாயகர் ஆர்.நல்லகண்ணு
எஸ்.காசி விஸ்வநாதன்.................... 07

3. தமிழ்ச் சமூக வரலாறு: முருகன் குறித்த உரையாடல்
பேராசிரியர் வீ. அரசு.................... 10

4. சலபதி எனும் போக்கறு பனுவற் பித்தர்
அ.கௌதம்ராஜ்.................... 15

5. கனங்காத்திரமான ஒரு நூல்
தெ.மதுசூதனன்.................... 19

6. சோதனைக் குடுவைக்குள் குட்டிப் பிரம்மாக்கள்
நெல்லை சு.முத்து.................... 23

7. கலை இலக்கியம் சார்ந்த வழக்குகளைப் பேசும் நூல்
உதயை மு.வீரையன்.................... 31

8. சிங்கப்பூர்த் தமிழ் நூல்களின் தோற்றமும் வளர்ச்சியும்
புதுமைத்தேனீ மா.அன்பழகன்.................... 37

9. மூன்று பெண்களும் மூன்று கதைகளும்
சுப்பிரமணி இரமேஷ்.................... 41

10. பெருங்கவிஞர் கவிநேசன் அபிவைத் தாஜுத்தீன்
உ. அலிபாவா.................... 47

11. வீராயி காவியமும் தமிழ்ஒளியின் சமூகச் சிந்தனைகளும்
ஜெ.ராஜா.................... 57

12. சூழலை உட்கிரகிக்கும் தாயுமானவள்
ம.சோனியா.................... 61

13. அம்பறாத்தூணியில் அசைச்சொல்
சி.சங்கீதா - முனைவர் பா.இராஜ்குமார்.................... 65

14. Exploring Dalit Consciousness and Resistance in Meena Kandasamy's Poem Touch
P.Lakshmanan & Dr.S.Balasundari.................... 70

தலையங்கம்




# காஸ்ட்ரோவிடம் கற்போம்!

‘காஸ்ட்ரோ’ என்ற பெயரைக் கேட்கிறபோது ‘கம்பீரம்’ கண்முன் நிற்கிறது. தனித்துவம் மிக்க தலைவர். உலகப் புரட்சியாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய தோழர். ‘ஆளும் வளரணும் அறிவும் வளரணும்’ என்ற பட்டுக்கோட்டையின் கவிதை வரிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

அவரது சொற்பொழிவுத்திறன் உலகறிந்தது. அவரது அசாத்தியத் துணிச்சல் அமெரிக்காவையே அலற வைத்தது.

இலட்சியத்தில் உறுதியும் நிர்வாகத்திறனும் அவரின் அணிகலன்கள்.

இவரது அசாத்திய வளர்ச்சிக்கும் மேம்பட்ட ஆளுமைக்கும் எத்தனையோ காரணங்கள் இருந்திருக்கின்றன. அன்றைய உலக அரசியல், சமூகச்சூழல், கியூப நாட்டில் மாற்றத்திற்கான தேவை என்பன போன்ற பல புறக்காரணங்கள் இருந்த போதிலும் அவருடைய அறிவு வேட்கையும் புத்தக வாசிப்பும், சுய சிந்தனையும், அயராத உழைப்பும் மாறுபட்ட அணுகுமுறையும் முக்கியக் காரணங்களாக இருந்துள்ளன.

இவற்றுள் ‘புத்தக வாசிப்பு’ பிரதான இடத்தைப் பெறுகிறது. வாசிப்பை ஒரு வேலைபோல் அல்லாமல் வேள்வியாக மேற்கொண்டிருந்தவர் காஸ்ட்ரோ.

நிகரகுவாவின் புரட்சியாளரும், புரட்சிகர விடுதலை முன்னணி என்ற அமைப்பின் நிறுவனர்களில் ஒருவருமான தொமாஸ் போர்ஹே 1992இல் காஸ்ட்ரோவிடம் மேற்கொண்ட ஒரு நீண்ட நேர்காணல் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. அந்நேர்காணல் மூலம் கியூபப் புரட்சி பற்றியான அரிய செய்திகள் பல வெளிப்பட்டதோடு காஸ்ட்ரோவின் வித்தியாசமான சில பழக்கவழக்கங்கள் மற்றும் பண்புகளும் வெளியாயின.

இந்நேர்காணல் 1992இல் ஸ்பானிஷ் மொழியில் நூல் வடிவம் பெற்றது. பின்னர் மேரிடாட் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அந்த ஆங்கில நூலை புதுடெல்லியிலுள்ள பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ் நிறுவனம் வெளியிட்டது. அந்நூல் 'காஸ்ட்ரோ நேர்காணல்கள்' எனும் தலைப்பில் தமிழில் அமரந்தா அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு புதுமலர் பதிப்பகத்தால் 2002இல் வெளியாயிற்று.

இந்நூலில் 'புத்தகங்களும் வாசிப்பும்' என்ற தலைப்பில் தனி அத்தியாயமே உள்ளது. அதில் காஸ்ட்ரோ தனது வாசிப்புப் பழக்கம் பற்றி விரிவாகவும் ஆழமாகவும் பதிவு செய்துள்ளார்.

'கியூப எழுத்தாளர்கள் எழுதிய எண்ணற்ற புத்தகங்களை வாங்கினோம். கியூபப் புதுக்கவிதை எனும் கடலிலும், இலத்தீன் அமெரிக்காவில் பரவலாக அறியப்படாதிருக்கும் உருவகக் கதை எனும் நதியிலும் நீந்தினோம்.'

'வாழ்நாள் முழுவதும் எத்தனை முடியுமோ அத்தனை புத்தகங்களைப் படித்து வந்திருந்த போதிலும், படிப்பதற்கு நேரம் போதவில்லை என்ற குறை எனக்கு எப்போதும் உண்டு. நூலகங்களையும், புத்தகங்களின் பட்டியலையும் பார்க்கும் போதெல்லாம் என் வாழ்நாள் முழுவதையும் படிப்பதிலும் கற்பதிலும் செலவிட முடியவில்லையே என்று வருந்துவேன்.'

'அனைத்துவகை இலக்கியங்களையும் நான் படித்திருக்கிறேன். படித்தவற்றுள் எனக்கு அதிகமாகப் பிடித்தது வரலாற்று நூல்கள். கியூப வரலாறு, உலக வரலாறு, பலரது வாழ்க்கை வரலாற்று நூல்கள் அனைத்தையும் நான் படித்துவிட்டேன்.'

'உயர்நிலைப் பள்ளியில் இருக்கும் போதே நான் இலக்கியத்தில்-அதாவது செவ்வியல் ஸ்பானிய இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருந்தேன்'

'நான் சிறையிலிருந்த 1953 முதல் 1955 வரை இரண்டாண்டு காலம் தான் எனக்குப் படிக்க அதிக நேரம் கிடைத்த காலம்.'

'பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோதுதான் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் இன்னபிற சிந்தனை மரபுகளைப் பற்றி ஆழமாகப் படிக்க ஆரம்பித்தேன். அவற்றை ஏராளமாகப் படித்தேன்.'

'புரட்சிகள் பற்றி ஏகப்பட்ட புத்தகங்களை நான் படித்திருக்கிறேன் என்று நான் உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது.'

'பிரெஞ்சுப் புரட்சி பற்றி எழுதப்பட்ட அனைத்து நூல்களையும், போல்ஷ்விக் புரட்சி பற்றிய பல நூல்களையும், சீனப்புரட்சி பற்றிய பல நூல்களையும் படித்திருக்கிறேன்.'

'சிறையிலிருக்கும் போது என் வாசிப்பை நான் முறையாக மேற்கொண்டேன். அங்கு நாங்கள் தத்துவம் படிப்பதற்கென்றே ஒரு பள்ளியை நிறுவினோம். பல உலக இலக்கியங்களைப் படித்தோம். அங்கு ஒரு நாளைக்கு 14-15 மணி நேரம் வீதம் இரண்டாண்டு காலம் நான் படித்துக்கொண்டே இருந்தேன்.'

'அந்தக் காலகட்டத்தில் தஸ்தயேவ்ஸ்கி எழுதிய எல்லா நூல்களையும் நான் படித்து முடித்துவிட்டேன்.'

'ரொமெய்ன் ரோலந்தின் எழுத்தில் கவரப்பட்ட நான் இரவு 11 அல்லது 12 மணி வரை நானே தயாரித்த சமையல் எண்ணெய்யில் எரியும் விளக்கில் படித்தேன்.'

'இரண்டாம் உலகப்போர் பற்றி இருதரப்பிலிருந்தும் எழுதப்பட்ட அனைத்து நூல்களையும் நான் படித்துவிட்டேன். புரட்சியின் வெற்றிக்குப் பின்பும் நான் படித்துக் கொண்டேதான் இருக்கிறேன்.'

'ஒரு சமயம் விவசாயம் குறித்து குவியல் குவியலாகப் புத்தகங்கள் படித்தேன். விவசாயம், விவசாய நுணுக்கங்கள், வெப்ப மண்டல விவசாயம் போன்றவற்றைப் பற்றி 70, 80, 100 புத்தகங்கள் படித்தேன்.'

'கார்சியா மார்க்கோசின் அனைத்துப் புத்தகங்களையும் படித்துவிட்டேன் என்று நினைக்கிறேன். மற்ற இலத்தீன் அமெரிக்க இலக்கியங்களையும் அதிகமாகப் படிக்கிறேன்.'

'செவ்வியல் இலக்கியத்திலிருந்து கிட்டத் தட்ட ஸ்பானிய மொழியில் தேர்வு செய்யப்பட்ட நூறு தலைசிறந்த கவிதைகள் இருந்தன. அனைத்தையும் படித்து மனப்பாடம் செய்தேன்.'

இப்படியாக தன்னிடம் கேட்கப்பட்ட வெவ்வேறு கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் காஸ்ட்ரோ தனது வாசிப்புப் பழக்கம் பற்றி விவரித்துள்ள பகுதிகள் நமக்கு வியப்பளிக்கிறது.

ஆம்... காஸ்ட்ரோவிடம் கற்க வேண்டியவை பல. அவற்றுள் முதன்மையானது முக்கியமானது... 'வாசிப்புப் பழக்கம்.'

**ஆசிரியர் குழு**



# லெனின் எழுத்துகளை இளைய தலைமுறையினர் வாசிக்க வேண்டும்

**வெ.இறையன்பு ஐஏஎஸ்**

15-12-2024 அன்று மதுரையில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவன முன்வெளியீட்டுத் திட்ட வெளியீடான லெனின் தேர்வு நூல்கள் 12 தொகுதிகள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு அவர்கள் நூலை வெளியிட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் டி.ராமசாமி. நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், முதுநிலை விற்பனை சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் கவிஞர் சந்திரன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

நூல்களை வெளியிட்டு இறையன்பு அவர்கள் பேசியதாவது.

மார்க்ஸ் எங்கல்ஸ் ஆகியோரை சிறுவயதிலிருந்து வாசித்து வந்தவர் லெனின். பின்னாளில் பொதுவுடைமை தொடர்பான நிறைய நூல்களை எழுதினார். படைப்புக்கும் படைப்பாளிக்கும் வேறுபாடு இருக்கக்கூடாது. படைப்பைவிட படைப்பாளி மேன்மை படைத்தவராக இருக்க வேண்டும். அப்படி வேறுபாடு இருந்தால் அந்தப் படைப்பை புறக்கணிக்க வேண்டும் என்றார் லெனின்.

ரஷ்யாவில் ஆட்சிப் பொறுப்பேற்ற லெனின் உலகின் முதல் அறிவொளி இயக்கத்தை ஏற்படுத்தினார். கல்விக்கூடங்களுக்குச் சென்று பயில இயலாதவர்களின் வீடுகளுக்கே சென்று கல்வி பயிற்றுவிக்கும் முறையை உருவாக்கினார். உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தவர் லெனின். லெனின் சிந்தனை, பொதுவுடைமை இயக்கங்களுக்கான வழிகாட்டல், படைப்புகள் அனைத்தும் 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. அனைவரும் அதனை வாசிக்க வேண்டும். அவரது வாழ்க்கை வரலாற்றை இளைய தலைமுறையினர் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு சிறப்பாக நடந்தேறியது லெனின் தேர்வு நூல்கள் வெளியீட்டு விழா.




# வரலாற்று நாயகர் ஆர்.நல்லகண்ணு



எஸ்.காசி விஸ்வநாதன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு கட்சியில் உறுப்பினராக சேரும் பொழுது கட்சிக்கு வயது 17. இது கட்சிக்கும் நூற்றாண்டு. அவருக்கும் நூற்றாண்டு.

15 வயதிலேயே நெல்லை மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தெருக்களிலே இந்திய விடுதலைக்கு முழக்கமிட்ட சின்னஞ்சிறு இளைஞர். அடிமைப்பட்டு கிடக்கும் இந்தியாவிற்கு என்று விடுதலை வரும் என்ற தாகம் நெஞ்சிலே தேங்கிக் கிடந்த நேரம்... தன் வயதொத்த இளைஞர்களுடன் வீதிகளிலே மகாகவி பாரதியின் **'என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'** கவிதையை பாடிக்கொண்டே செல்வாராம்.

கம்யூனிஸ்ட் கட்சி நெல்லை மாவட்டத்தில் முளைவிடத் தொடங்கும் போதே சதி வழக்குகள் பாய்ந்தன. மலையாள மண்ணிலிருந்து அமைப்பாளராக இராமச்சந்திர நெடுங்காடி வந்தார். அவர் மீதும் கழுகுமலை அழகிரி, முத்தையா, வஜ்ரவேல் போன்ற கம்யூனிஸ்ட் தோழர்கள் மீதும் நெல்லைச் சதி வழக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் 1940 ஆம் ஆண்டு போடப்பட்டது.

பாலதண்டாயுதம், ப.மாணிக்கம், மீனாட்சிநாதன், பேராசிரியர் வானமாமலை, வழக்கறிஞர் என்.டி. வானமாமலை, வி.எஸ். காந்தி, வேலுச்சாமி தேவர் போன்றவர்களால் ஈர்க்கப்பட்ட நல்லகண்ணு 1943ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார் . நாங்குநேரி, களக்காடு பகுதிகளில் கட்சியின் அமைப்பாளராகச் செயல்பட்டார். நெருக்கடியான தலைமறைவு வாழ்க்கையில் விவசாய சங்கத்தில் பணிபுரிந்தார். எண்ணற்ற போராட்டங்கள் . 1946 ஆம் ஆண்டு ஜனசக்தியின் பணி செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். தேச விடுதலைக்குப் பின் திரும்பி வந்து கட்சிப் பணிகளைத் தொடர்ந்தார். கட்சி மீண்டும் தடை செய்யப்பட்டது. தலைமறைவு வாழ்க்கையில் பட்ட இன்னல்கள் ஏராளம்.

1948ஆ ம் ஆண்டு நெல்லைச் சதிவழக்கு 109 தோழர்கள் மீது போடப்பட்டது. ஒன்றரையாண்டு சிறைவாசத்திற்கு பிறகு 42 தோழர்கள் விடுவிக்கப்பட்டனர். 67 தோழர்கள் மீது வழக்கு நடந்தது. நல்லகண்ணுவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் ஏழாண்டாக குறைக்கப்பட்டது.

விடுதலைக்குப் பின்பு 1958ஆம் ஆண்டு பேராசிரியர் நா. வானமாமலை தலைமையில் திருமணம் நடைபெற்றது. மருதன்வாழ்வு அன்னாசாமியின் மூத்த மகள் ரஞ்சிதத்தை கரம்பிடித்தார். இரண்டு பெண் குழந்தைகள். அன்னை ரஞ்சிதம் ஆசிரியரானதால் குடும்பம் நடைபெற்றது. அப்போது ஆர்என்கே வின் அலவன்ஸ் ரூ 30- இன்றும் தென் மாவட்டங்களில் பல தோழர்களின் வீடுகளில் நல்லகண்ணுதான் குடும்பத் தலைவர். ஆர்என்கேவுடன் கார்களில் பயணம் செல்லும் பொழுது ஒவ்வொரு கிராமத்தையும் நினைவில் கொண்டு சம்பவங்களைக் கூறுவது கண்டு வியப்படைந்துள்ளோம்.

1948 ஆம் ஆண்டிலேயே இளைஞர் ஆர். நல்லகண்ணு எதிர்காலத்தில் சிறந்த தலைவராக வருவார் என்று விவசாயிகள் இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர் பி.சீனிவாசராவ் எழுதியுள்ளார்.

எளிமை, அன்பு, தீர்க்கமான பார்வை, 99 வயது நிரம்பிய நல்லகண்ணு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முகமாக இருக்கிறார். தனது பொது வாழ்க்கை அனுபவங்களை தோழர்களிடமும் பகிர்ந்து கொள்ளக்கூடியவர்.

1972 ஆம் ஆண்டு, விவசாயிகளின் போராட்டம் முழு வீச்சுடன் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் கைது செய்யப்பட்டார்கள். காரக்கிரகத்தில் அடைத்து வைக்கப்பட்டார்கள். எமது மூத்த சகோதரர் தோழர் எஸ்.எஸ். தியாகராஜன் சிறையில் உள்ள தோழர்களுக்கு மார்க்சிய வகுப்பு எடுப்பதற்காக கட்சியால் சிறைக்கு அனுப்பப்பட்டார். அன்றைய மறியல் போராட்டம் முடிந்த பின்பு தோழர் நல்லகண்ணு, நெல்லை மாவட்டச் செயலாளர் வி.எஸ்.காந்தியுடன் எட்டயபுரத்தில் உள்ள நமது இல்லத்திற்கு வந்தார். அப்பொழுதுதான் தலைவரை முதல் முறையாக நேரில் பார்க்கிறோம்.

அம்மாவிடம் எஸ்.எஸ்.டி கைது செய்யப்பட்டு சிறைக்குச் சென்றுவந்த தகவலைச் சொல்லிவிட்டு சாப்பிடுவதற்கு இருப்பதைக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அம்மா அன்போடு இருவரையும் தரையில் அமர வைத்து பரிமாறிய பழைய சோறு நினைவில் இருந்து அகலவில்லை. மிகவும் மகிழ்ச்சியுடன் உணவு சாப்பிட்டது அம்மாவிற்கு மிகுந்த பெருமை.

அம்மா மீது எப்போதும் பாசம் கொண்ட ஆர்.என்.கே வின் அன்பை மறக்க முடியாது.

1990களின் நடுவில் சாதிக் கலவரம் தென் மாவட்டங்களில் தலைவிரித்து ஆடியது. நல்லகண்ணு வின் மாமனார் தோழர் அன்னசாமித் தேவர் மருதன் வாழ்வு கிராமத்தில் படுகொலை செய்யப்படுகிறார். இடியென விழுந்த செய்தியை கேள்விப்பட்டு இறுதி நிகழ்வுகளை கண்ணீரோடு மற்றவர்களை நடத்தச் சொல்லிவிட்டு நெல்லை நகருக்கு சாதி மோதல் எதிர்ப்புப் பேரணிக்கு தலைமை தாங்க தோழர் நல்லகண்ணு வந்தார். தன் சொந்த நலன்களை விட பொதுநலன் முக்கியம் என்பதை நிரூபித்த தருணமது. அதுவரை அவருடைய சாதிய அடையாளம் யாருக்கும் தெரியாது.

அதே சமயம் சாதி மோதல்கள் நடைபெற்ற இடங்களுக்கெல்லாம் கட்சியின் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கன்னியாகுமரியில் இருந்து மதுரைக்கு பிரச்சார இயக்கத்தை கட்சி மேற்கொண்டது. தலைமையேற்ற மாநிலச் செயலாளர் நல்லகண்ணு அவர்களுக்கு உதவியாகப் பணியாற்றக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. ஆர்என்கே, சட்டமன்ற குழுத் தலைவர் தோழர் ஜி.பழனிச்சாமி, நாம் ஆகிய மூவரும் ஒரே காரிலேயே பயணம் செய்தோம்.

சாதி மோதல்களுக்கு அடிப்படையான காரணம் எது என்பதைப் பற்றி டிஜிபியுடன் விவாதித்து போக்குவரத்துக் கழகங்களுக்கும், மாவட்டங்களுக்கும் வைக்கப்பட்டுள்ள பெயர்களே காரணம் என்பதைத் தலைவர் வெளிப்படுத்தினார். இந்தப் பெயர்களை எடுத்துவிட்டால் சண்டைகள் முடிவுக்கு வரும். ஆனால் எப்படிச் சொல்லுவது.. சொன்னால் ஏற்றுக் கொள்வார்களா.. ஒரு நாள் முழுவதும் ஆலோசனை செய்தார். பழனிச்சாமி பெயர்களை எடுத்து விடலாம்... சொல்லுங்கள் என்று சொன்னதிற்குப் பிறகும் தீவிரமான ஆலோசனையில் இருந்தார்.

முதல் நாள் பயணம் குமரியில் புறப்பட்டு வள்ளியூரில் நிறைவடைந்தது. அன்று இரவு முழுவதும் அதே சிந்தனை தான்.

மறுநாள் காலை திருநெல்வேலியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போதுதான் இந்தக் கருத்தை வலியுறுத்திப் பேசினார்.

சங்கர் நகரை அடுத்துள்ள துறையூருக்கு சென்றோம். சாதி வெறியால் பாதிக்கப்பட்ட கிராமம். அப்பொழுது தான் பிறந்த கைக்குழந்தையுடன் இளம் தாய் கதறி அழுதார். அவருடைய கணவன் சாதிய வெறியர்களால் கொல்லப்பட்டான். கண்களில் கண்ணீருடன் ஆறுதல் கூறினார்.

பயணம் தொடர்ந்தது. பல ஊர்களில் கலவரங்கள்.. கொல்லப்பட்ட சம்பவங்கள். ராஜபாளையம் துயரங்களை பார்வையிட்ட பிறகு மம்சாபுரத்திற்குச் சென்றோம். தந்தை கொல்லப்பட்டதால் இரண்டு சிறுவர்கள் மொட்டை அடித்திருந்த காட்சியைப் பார்த்தார். கண்ணீருடன் ஆறுதல் கூறினார். இந்தக் காட்சிகள் கல்லுக்குள் ஈரம் இருப்பதை உணர்த்தியது . எப்பொழுதும் உணர்ச்சிகளை அடக்கி தனக்குள்ளேயே வைத்துக் கொள்ளும் நல்லகண்ணு தன்னை அறியாமல் வெளிப்படுத்திய கண்ணீர் நம்மை கலங்கச் செய்தது.

மாமனார் கொல்லப்பட்ட போது வெளிப்படுத்தப்படாத துக்கம் சாதிக் கலவரத்தின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டதைப் பார்த்த பொழுது பொங்கிய கண்ணீரைக் கண்டதை நம்மால் இன்றும் மறக்க இயலாது.

அன்றைய முதலமைச்சர் கலைஞர் கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்திலும் பெயர்களை எடுத்து விடுங்கள் என்ற கருத்தைச் சொன்னார். அரசும் ஏற்றுக் கொண்டது. பெயர்கள் நீக்கப்பட்டன. அமைதி திரும்பியது.

தாமிரபரணி ஆற்றில் மணல் கொள்ளையடிப்பதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். மதுரை உயர்நீதிமன்ற கிளையில் தானே ஆஜராகி வாதங்களை எடுத்துரைத்தார். 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் நாள் மணல் அள்ளக் கூடாது என தீர்ப்பு வந்தது. ஆனாலும் கொள்ளையர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்ட மணலைக் கூட விட்டு விடவில்லை. இந்தக் குற்றச் சம்பவங்கள் நடைபெற்ற போது மனம் வெதும்பிப் பேசிய தலைவரின் வேதனையான முகம் நினைவுக்கு வருகிறது.

சிறையில் இருந்த காலத்தில் புலவர் பட்டம் பெற்றார். இலக்கியத்தில் ஆழ்ந்த இரசனை உண்டு. கவிஞர் நல்லகண்ணு கவிதைகளை எழுதி உள்ளார். பிறரின் கட்டுரைகள் சிறப்பாக இருந்தது என்றால் மனம் விட்டு பாராட்டத் தயங்க மாட்டார். அதே நேரம் தவறுகளைக் கண்டால் மென்மையாகச் சுட்டிக் காட்டுவார். நெல்லை ஆய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு கருத்துக்களை எடுத்துச் சொல்லியுள்ளார்.

இலக்கிய ஆளுமைகள் நா.வா., தொ.மு.சி.ரகுநாதன், தி.க.சி உட்பட பலருடன் நெருங்கிய நட்பைப் பேணி இருந்தார். இவர்கள் நடத்துகின்ற இலக்கிய விவாதங்களைக் கேட்பதற்கு மிகவும் ஆர்வமாக இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் எட்டயபுரத்தில் நடத்துகின்ற பாரதி விழாவில் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் இரண்டு நாட்களும் முழுமையாக இருந்து விழாவைக் கண்டு ரசிக்கின்ற பண்புடையவர்.

ஜீவாவால் ஆணையிடப்பட்டு சோ. அழகர்சாமியால் தொடங்கப்பட்ட மகாகவி பாரதி விழா நின்று விடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறையும் கவனமும் கொண்டவர். அனேகமாக ஜூலை மாதமே செப்டம்பர் மாத விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள அன்பான ஆணையிடுவார். பாரதியின் தீராத காதலன் மட்டுமல்ல, கவிஞர் தமிழ்ஒளியை மக்களுக்கு அறிமுகம் செய்ய ஒரு நூலையே எழுதியவர். சிறந்த நூலாசிரியர். கட்டுரையாளர் .

தொ.மு.சி ரகுநாதன் மறைந்தவுடன் இறுதி நிகழ்வு நடத்தி முடித்த பிறகு நெல்லை கட்சி அலுவலகத்தில் பொன்னீலன் தொமுசியைப் பற்றிய பேட்டி இவரிடம் எடுக்கும் போது பிரிவுத் துயர் தாங்காமல் குலுங்கிக் குலுங்கி அழுத காட்சிகளை நம்மால் மறக்க இயலவில்லை...

தோழர் நல்லகண்ணு பொது வாழ்வுக்கு எடுத்துக்காட்டு... இன்றைக்கு நம்மோடு வாழ்கின்ற மகத்தான தலைவர்.

●

**கட்டுரையாளர்: தலைவர், தமிழ்நாடு ஏஐடியுசி.**




திறனாய்வு



# தமிழ்ச் சமூக வரலாறு: முருகன் குறித்த உரையாடல்

"முருகன் அவனது சிக்கல் மிகுந்த கூட்டுப்பண்பு காரணமாக எல்லோருடைய தொடர்பிலும் இருக்கிறான். குழந்தைகளுக்கு விளையாட்டுப் பிள்ளையாய் "பாலசுப்பிரமணியன்"; வாலிபருக்கு ஒழுக்கம் மிக்கக் "குமரன்"; அறிஞர்களுக்கு ஞானம் தரும் "ஆறுமுகன்"; வீரர்களுக்குச் "சேனாதிபதி"; மெய்ஞானம் தேடும் பக்தர்களுக்கு "ஞான பண்டிதன்"; இல்லறவாசிகளுக்கு "வள்ளி-தெய்வானை மணாளன்"; துறவறம் பூண்டவருக்குப் பழநியில் உறையும் "ஆண்டி"; இறுதியாக, என்னைப் போன்ற மேலை உலக ஆய்வாளர்கட்கு, ஈடுபாட்டுடன் ஆய்வு செய்யத் தகுந்த பொருண்மை". (1991:2).

அறிஞர் கமில் சுவலபில் (1927-2009) அவர்களின் பதிவு மேலே உள்ள வரிகள். இன்றைய நடைமுறையில் உள்ள முருகன் பற்றிய விளக்கமாக இப்பகுதி அமைகிறது. கமில் சுவலபில், தொடக்ககால நமது செவ்விலக்கியப் பிரதிகளில் பேசப்படும் முருகன் பற்றியும் பதிவு செய்துள்ளார். அவை பின்வருமாறு:



பேராசிரியர் வீ. அரசு

1. இளமையும் அழகும் என்றென்றும் உடையவன்.

2. வேட்டையாடுவதிலும் போர் புரிவதிலும் விருப்பமுடைய வீரன்.

3. காதலில் ஈடுபாடுடைய ஆண்மை மிக்கவன்.

4. இன்னொரு உயிரை தன்னுள் வாங்கிக் கொள்ளும் ஆவேச சக்தி உடையவன்.

5. செந்நிறத்தவன்.

6. வேல் கருவியைக் கொண்டுள்ளவன்.

7. யானை, மயில், சேவல், ஆடு, பாம்பு ஆகிய உயிரினங்களோடு தொடர்புடையவன்.

8. சூர் எனும் அணங்காக இருப்பவன்.

9. வள்ளியின் மீது காதல் கொண்டவன். (1991:74)

நமது தொன்மைப் பிரதிகளில் காணும் முருகன் குறித்த தமிழ் சுவலபில் பதிவுகளை நோக்கிய தேடலாக ஆய்வாளர் கோ.சசிகலா அவர்களின் இந்நூல் அமைகிறது. தொன்மையான மரபாக முருகன் இருப்பதற்கான பல்வேறு தரவுகளை இந்த நூல் பதிவு செய்திருப்பதைக் காண்கிறோம். அவை பின்வருமாறு அமைகின்றன.

- தொல்பழம் கால கற்கருவிகள் புழக்கத்திற்கும் முருகனுக்குமான தொடர்புகள்
- கடவுள் எனும் நம்பிக்கையின் தொடர்ச்சியாக அமையும் பெண் தெய்வ வழிபாடு, அதன் தொடர்ச்சியான ஆண் தெய்வ உருவாக்கம் ஆகிய கூறுகளுக்கும் முருகனுக்கும் உள்ள தொடர்புகள்
- நிலத்தோடு தொடர்புடையவனாக முருகன் கட்டமைக்கப்படும் பாங்குகள்
- மனித சமூகம், தமது நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் சடங்குகள் விழாக்களாக வடிவம் பெறுதல்; அதில் முருகனின் இடம்
- தொல்பழம் பதிவுகளாக உள்ள கல்வெட்டுகள் போன்றவற்றில் முருகன் குறித்த பதிவு இடம்பெறும் நிலை
- பேரரசு உருப்பெறலும் அதில் முருகன் எவ்வாறு கட்டப்பெறுகிறான் என்ற விவரணங்கள்
- நாட்டார் மரபுகளில் முருகன் இடம் பெற்றிருக்கும் பாங்கு
- நக்கீரர், அருணகிரியார், குமரகுருபரர் வழி முருகனின் தொடர்ச்சியும் சித்தர் மரபுகளில் முருகனின் இருப்பும்

மனிதன், சமூக விலங்காக உருப்பெறும் தருணத்தில், அவனது முதல் தேவையாக உணவு அமைகிறது. அந்த உணவைச் சேகரிப்பதில் தன்னைச் சுற்றியுள்ள பொருட்களைப் பயன்படுத்திக் கருவிகளை உருவாக்கிக் கொள்கிறான். அந்த கருவிகள் மண், கல், இரும்பு, வெண்கலம் என முதல் நிலையில் அமைகிறது. இந்த கருவிகளைத் தன் கையில் ஏந்தியவனாக, வேட்டையாடி உணவைச் சேகரிப்பவனாக மனிதன் உருவாகிறான். அப்படியான மனிதர்களில் ஒருவனாக முருகன் இருக்கிறான். உணவு சேகரிப்பு என்ற வேட்டைக்குச் செல்லும் போது, சடங்குகளைச் செய்து ஒலி எழுப்புகிறான். அதுவே மந்திரங்கள் ஆகின்றன. மந்திரம் என்பது புனிதமாகக் கட்டமைக்கப்படுகிறது. அந்த புனிதத்திற்குள் கடவுள் உருவாக்கம் பெற்று விடுகிறது. முருகன் கடவுளாகி விடுகிறான்.


முருகன் எனும் தொன்மம் மேலே சொன்னபடி உருவாகி வளர்ந்து வருவதாகக் கருதலாம். தொன்மம்-கடவுள்-புராணம் ஆகியவை தொடர்புடையவை. இதனை முருகன் மூலம் கண்டறிய முடியும். இந்த அடிப்படையில் இந்த நூல் இயங்குவதாக எனக்குப்படுகிறது. அதற்கானத் தரவுகளைச் சேகரித்து, அவற்றை உரையாடலுக்குட்படுத்தும் முயற்சியைக் காணமுடிகிறது.

செவ்விலக்கியப் பிரதிகளில் "நெடுவேல்" பற்றிய பதிவுகள் உள்ளன. அந்த வேல் என்பது இன்று உலோக வடிவில் பார்க்கிறோம். அதன் முன்வடிவம் கல்லாக இருக்க வேண்டும். அதனை முருகன் பயன்படுத்தினான் எனும் கருதுகோளை, பல்வேறு தரவுகள் சார்ந்து உரையாடலுக்குட்படுத்துகிறது இந்நூல். தமிழகத்தில் பதினைந்து இலட்சம் ஆண்டுகட்கு முன்பே கற்கருவிகளின் புழக்கம் உறுதிப்படுத்தப்படுகிறது. கற்கருவிகளின் கொள்கூடமாகத் தமிழகத்தின் பல பகுதிகள் இருப்பதை தொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இராபர்ட் புரூஸ் ஃபூட் (1834-1913) ஆய்வுகள் தமிழ் மண்ணில் கற்கருவிகளின் பயன்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளன. இந்த நூல் அக்கருவிகள் கிடைக்கும் இடங்கள், அவற்றின் பயன்பாட்டு வரலாறு, மனிதனின் தொல்பழம் வாழ்க்கை, அதில் அவன் கட்டமைத்த வேலன், முருகன் என்ற தொடர்ச்சியாக ஆய்வாளர் நிகழ்த்தும் உரையாடல் சுவையானது. சமூக வரலாறு எவ்வாறு கடவுளர் கருத்தைக் கட்டமைக்கிறது; அதில் முருகன் எவ்வாறு உருவானான் என்னும்

கருதுகோள் தொல்லியல் தரவுகள் வழி கட்டமைக்கப்படுவதைக் காண்கிறோம்.

முருகன் “கொற்றவைச் சிறுவ” என்றும் பழையோள் “குழவி” என்றும் அழைக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு, தாய்வழிச் சமூகத்தின் எச்சமாகவும் முருகனைக் காண முடிகிறது. கொற்றவை தலைமையானது தாய்வழிச் சமூகத்தின் குறியீடு. அதன் தொடர்ச்சியாக, வீரனாக, வேல் ஏந்தியவனாக முருகன் உருவாகிறான். அதன் மூலம் முருகன் தந்தைவழிச் சமூகத்தின் மூலமாக உருப்பெறும் ஏதுக்கள் உருவாகின்றன. இவ்வகையில் தொல் சமூக அமைப்பின் அடையாளமாகவும் முருகன் அமைந்திருக்கின்றான். தமிழ்ச்சமூகத்தின் தொல்பழம் இருப்பை அறியும் தரவாகவும் முருகனைக் கொள்ளமுடியும் என்ற உரையாடலும் இந்நூலில் முன்வைக்கப்படுகிறது. சிந்துவெளியில் கிடைக்கும் முத்திரை வடிவில் அமைந்த சித்திர எழுத்துக்களை வாசிக்கும் முயற்சியில் முருகு ஒரு திராவிடச் சொல்; வளையல் அமைப்புகள், காவடி அமைப்புகள் ஆகிய பிறவற்றை முருகனோடு தொடர்புபடுத்துகிறார்கள் அஸ்கோபர்ப்போலோ (1941- ..), மற்றும் ஐராவதம் மகாதேவன் (1930-2018) ஆகிய பிறர். சிந்து சமவெளி, கற்காலம், செவ்வியல் பிரதிகள் உருவான காலம் ஆகிய அனைத்திலும் முருகன் குறித்தத் தரவுகள் எடுகோள்களாக முன்வைக்கப்படுவதன் மூலம், தமிழ்ச்சமூகத்தின் தொன்மை குறித்த உரையாடல் வலுப்படுகிறது.

செவ்விலக்கியப் பிரதிகள் வழி கட்டமைக்கப்படும் “திணை” எனும் கருதுகோள் தமிழ்ச்சமூக வரலாறு குறித்தப் புரிதலுக்கு அடிப்படையாக அமைகிறது. திணை என்பது அடிப்படையில் நிலம்; மனிதர்கள் வாழும் வெளி. அதில் குறிஞ்சி என்பது, நிலம் உருவாக்க மரபின் முதன்மையான தன்மை பெற்றதாகக் கருதலாம். அந்த நிலத்தின் மனிதர்கள், அவர்கள் உருவாக்கும் கடவுளர்கள், சமூக வரலாற்றுக்கு அடிப்படைத் தரவாக அமைகிறது. குறிஞ்சியின் மாற்றங்கள் தான் முல்லை, மருதம், பாலை போன்றவை. இந்த நிலப்பகுதியின் முதன்மையானவனாக முருகன் கருதப்படுகிறான். வேள், வேலன், வேலன் வெறியாட்டு, குறிஞ்சிக்கடவுள் எனப் பல பரிமாணங்களில் முருகன் அமைகிறான். இத்தன்மை தொல்லியல் ஆய்வுகள், தொன்மங்கள் ஆகிய பிறவற்றின் தொடர்ச்சியாக அமைகிறது. இதன்மூலம் தொன்மையானவன் முருகன் எனும்




பதிவு கிடைக்கிறது. இத்தன்மையை இந்நூலின் பதிவுகளில் காணமுடிகிறது.

மானிடவியல் ஆய்வுகள் சார்ந்து மனித சமூகத்தில் உருவான குலக்குறியீடுகள் சமூக வரலாற்று ஆய்வுக்குப் பெரிதும் ஏதுவாக இருப்பதைக் காணமுடியும். செவ்வியல் பிரதிகளில் இடம் பெறும் குலக்குறியீடுகள் எந்தெந்த வகையில் முருகனோடு தொடர்புடையதாக இருக்கமுடியும்? என்ற உரையாடல் சுவையானது. முருகன் என்ற தொன்மம் போர்வீரன், தலைவன், வேள் எனும் அரசன் ஆகிய பல வடிவங்களில் செவ்வியல் பிரதிகள் பதிவு செய்கின்றன. இந்தப் பதிவுகள் அனைத்தும் குலக்குறியீட்டு வடிவத்தில் அமைந்திருப்பதை இந்நூல் பேசுகிறது. சமூக வரலாற்றுக்கு அடிப்படையாக அமையும் “குலக்குறியீடு” எனும் அடையாளம் சார்ந்தும் முருகன் குறித்து அறியமுடிகிறது.

தொன்மையான சமூகத்தின் தொடர்ச்சி என்பது, அச்சமூகத்தின் நம்பிக்கைகளின் வெளிப்பாடுகளில் கண்டறிய முடியும். நம்பிக்கைகளின் வெளிப்பாடுகளே சடங்குகள். அவற்றுள் பல விழுமியங்கள் உள்ளாக அமைந்திருக்கின்றன. விழுமியம் சார்ந்த சடங்குகளின் நிகழ்த்து முறைதான், கொண்டாட்டங்கள் எனும் விழாக்கள். முருகன் என்ற தொன்மையின் கொண்டாட்டமான

விழாக்கள், தமிழ்ச்சமூகத்தில் தொடர்வது முருகன் என்ற தொன்மை மரபின் தொடர்ச்சியாகக் காணலாம். "தைப்பூசம்", "பங்குனி உத்திரம்" எனும் விழாக்களை அந்த வகையில் இனம் காணும் பாங்கை இந்நூலில் பார்க்கிறோம். இவ்விரு விழாக்களில் காணப்படும் காவடி, அலகு குத்துதல், பலி, சூரசம்ஹாரம் எனும் போர், வள்ளி குறித்தப் பதிவுகள் ஆகிய அனைத்தும் முருகனோடு தொடர்புடையதாக அமைகிறது. இந்த சடங்குகள் அனைத்தும் தொல்லியல் மரபு சார்ந்தவையாகவும் உள்ளன. கற்கால மரபுகள், சிந்துவெளி மரபுகள், செவ்வியல் பிரதிகள் சார்ந்த மரபுகள் ஆகியவற்றின் தொடர்ச்சியாக இருப்பதைக் காண்கிறோம். இவ்வகையில் தமிழ்ச்சமூக வரலாற்றின் மூலத் தரவாக முருகனை எவ்வாறெல்லாம் இனம் காண முடிகிறது. தொல்பழம் கூறுகளைக் கொண்ட ஒரு சமூகத்தின் எச்சங்கள், தொடர்ச்சிகள் சமகால வரலாற்றுப் புரிதலுக்கு எவ்வாறு உதவ முடியும்; அதில் "முருகன்" என்ற தொன்மத்தின் விரிந்து பரந்திருக்கும் பல்வேறு பரிமாணங்களை உள்வாங்க முடிகிறது. இதன் தொடர்ச்சியாகவே அகழாய்வு, கல்வெட்டுப் பதிவுகள் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

செவ்வியல் பிரதிகளில் காணப்படும் சமச்சீரற்ற சமூக அமைப்பு என்பது படிப்படியாக அரச உருவாக்கம் உருவானதை புரிந்து கொள்ள உதவும். இவ்வாறு உருவான அரச உருவாக்க மரபில், பல்லவர் காலம் தொடங்கி, பண்பாட்டுப் பரிமாணங்களில் வைதீக மரபுகள் செல்வாக்குப் பெறத் தொடங்கின. வேத, புராண மரபுகளும் தமிழ் மரபின் தொடர்ச்சியோடு இணைந்து கட்டமைக்கப்படும் சூழல் உருவானது. அந்தச் சூழலில் முருகன் எனும் அவைதீக, இயற்கை மரபு படிப்படியாக மறையத் தொடங்கியது. வைதீக மரபு சார்ந்து முருகன் கட்டமைக்கப்படுகிறான். ஸ்கந்தன், குமரன், சுப்பிரமணியன் ஆகிய பல கூறுகளில் முருகன் எனும் தொன்மம் உருமாறுகிறது. இத்தன்மை குறித்து, இக்கட்டுரையின் தொடக்கத்தில் உள்ள பேராசிரியர் கமில் சுவலபில் அவர்களின் பதிவு சொல்கிறது. தொல்பழம் முருகனும், வைதீக முருகனும் குறித்தப் புரிதலுக்கு பேரா.கமில் சுவலபில் அவர்களின் இரண்டு மேற்கோள்களும் நமக்கு உதவுகின்றன. இந்த வரலாற்றின் முதல் பகுதியைப் பற்றிய செய்திகளைச் சொல்லும் இந்நூல், இரண்டாம் பகுதியையும் தொட்டுக் காட்டுகிறது என்று கூறமுடியும்.

தாய்த்தெய்வ வழிபாடு, மூத்தோர் வழிபாடு, வீரர் வழிபாடு, குடித்தெய்வ வழிபாடு என்ற நாட்டார் மரபு சார்ந்த வழிபாடுகளுக்கும் முருகன் எனும் தொல்பழம் மரபு சார்ந்த வழிபாட்டிற்கும் உள்ள உறவுகளையும் இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகியவற்றில் பேசப்படும் முருகன், தமிழ்ச்சமூக வரலாற்றுக் காலம் பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டு வரை இருக்க ஏதும் உண்டு, இப்பிரதிகள் செவ்வியல் பிரதிகளாகப் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டவை. செவ்வியல் பிரதி மரபில் இவற்றை முழுமையாக இணைக்க முடியாது. இதில் நக்கீரன் பதிவுகள் முருகன் குறித்த செவ்வியல் பிரதிகளின் தொடர்ச்சியாகவே அமைகிறது. அவைதீக மரபும் வைதீக மரபும் பின்னிப் பிணைந்த மரபாக அமைகிறது. இதன் தொடர்ச்சியாக பதினைந்தாம் நூற்றாண்டில் அருணகிரிநாதரின் பதிவுகள் அமைகின்றன. இதன் அடுத்த தொடர்ச்சியாக பதினேழாம் நூற்றாண்டின் குமரகுருபரர் அமைகிறார். இக்கால மரபை "இரண்டாம் பக்தியுகம்" என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி (1932-2011) மதிப்பிடுவார். இந்த யுகத்தில் முருகனின் பரிமாணங்கள் வேறு வேறாக வடிவம் பெற்றுவிட்டன. இந்த வரலாறும் சுவையானது.

இவ்வகையில் ஆய்வாளர் கோ.சசிகலா அவர்களின் முருகன் குறித்த உரையாடல் என்பது தொல்பழம் கால மரபில் விரிவான பதிவுகளும் பின்னர் அதன் தொடர்ச்சியையும் பேசும் வகையில் உருப்பெற்றுள்ளது. தமிழ்ச்சமூகத்தின் முதன்மையான தொன்மம் ஒன்றின் பயணத்தைப் பதிவு செய்ததின் மூலம் தமிழ்ச்சமூக வரலாற்றுக்குப் பங்களிப்பு செய்திருக்கின்றார். அவருக்கு வாழ்த்துகளும் வணக்கங்களும். இப்பிரதியை வாசிக்க வாய்ப்பளித்த அவருக்கு எனது நன்றி உரியது.

**பயன்பட்ட நூல்கள்**


- 1973. வானமாமலை.நா. தமிழர் பண்பாடும் தத்துவமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- 1981. Zvelebil.kamil.V. Thiru Murugan உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
- 1991. Zvelebil.kamil.V. Tamil Traditions on Subramanya-Murugan, Institute of Asian Studies, Chennai.



●


**கட்டுரையாளர்: ஓய்வுபெற்ற பேராசிரியர்**



*(திருப்பூர் செம்பியன் பதிப்பக வெளியீடாக கோ.சசிகலா எழுதிய தாய்வழிப்பட்டுவும் முருகன் எனும் நூலுக்கான அணிந்துரை)*

48வது சென்னை புத்தகக் காட்சியில்


## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 65/-




₹ 60/-




₹ 80/-





₹ 95/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in




# சலபதி எனும் போக்கறு பனுவற் பித்தர்

**அ.கௌதம்ராஜ்**

“

கள், காமம், காதல் இவற்றைவிடவும் தருவது கருத்து. கருத்துகள் தரும் போதை அலாதியானது; முடிவற்றது

**ஆ.இரா.வேங்கடாசலபதி**

”

சமகாலத் தமிழ்நாட்டின் தவிர்க்க முடியாத வரலாற்றாய்வாளர், 2024-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதமி விருதாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி அவர்கள் குடியாத்தத்தில் பிறந்து சென்னையில் வளர்ந்தவர். 9-ஆம் வகுப்புவரை CBSE பள்ளியில் படித்தவர், அம்மாவின் அழுகைக்கும் அடிபணியாமல் பிடிவாதமாகக் கோடம்பாக்கம் டிரஸ்ட்புரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். இந்தத் தலைமுறையினரில் எத்தனை பேருக்கு பாரதியையும் பாரதிதாசனையும் படித்துவிட்டு அரசுப் பள்ளியில் படிக்கும் ஆர்வம் ஏற்படும் என்று தெரியவில்லை, சலபதி துணிந்துள்ளார்.

17 வயதிலேயே வ.உ.சி. கடிதங்களைத் தொகுத்துப் புத்தகமாகக் கொண்டு வந்திருக்கிறார். 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் வ.உ.சி. கடிதங்களைத் தேடிச் சேகரித்துத்

"

தமிழ்நாட்டின் பெருமிதங்களை அவர் ஆங்கில உலகத்திற்குச் சாய்வுகளற்ற பார்வையுடன் அறிமுகம் செய்திருக்கிறார்.

"

தொகுப்பாக வெளியிட்ட சிறுவன் தன்னுடைய 57 வயதில், 'வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும் 1908', 'வ.உ.சி.யும் பாரதியும்', 'வ.உ.சி.யும் காந்தியும்: 347 ரூபாய் 12 அணா', 'திலக மகரிஷி: வ.உ.சி', 'வ.உ.சியின் சிவஞானபோத உரை', 'வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும்', 'வ.உ.சி: வாராது வந்த மாமணி' என வ.உ.சி பற்றி மட்டும் தமிழில் 7 புத்தகங்களை எழுதியும், தொகுத்தும் வெளியிட்டுள்ளார். வ.உ.சி பற்றி ஆவணச் சுரங்கங்களில் இருந்து 40 ஆண்டுகளாகத் தோண்டி எடுத்த தகவல்களுடன் ஆங்கிலத்தில் அதிகாரப்பூர்வ வரலாறாக வெளிவந்திருக்கும் முதல் புத்தகம் என 'Swadeshi Steam: V.O. Chidambaram Pillai and the Battle against the British Maritime' நூலைச் சொல்லலாம்.

திருநெல்வேலி எழுச்சி ஏற்பட காரணகர்த்தாவாகத் திகழ்ந்த வ.உ.சி பற்றிய 'திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908' என்ற ஆய்வுநூல்தான் அவருக்குச் சாகித்திய அகாதமி விருதை பெற்றுத்தந்துள்ளது. "ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?" என்று வ.உ.சி பற்றி பாரதி எழுதிய வரிகளுக்குச் சலபதி உயிரூட்டியுள்ளார் என்றே சொல்லவேண்டும்.

பி.காம். படித்து, வங்கி உத்தியோகத்துக்குப் போக வேண்டும் என்பதே ஒரு சிறுவனாகச் சலபதியின் விருப்பமாக இருந்துள்ளது, படிக்கவும் எழுதவும் நிறைய நேரம் கிடைக்கும் என்பதால் அப்படியான முடிவை அவர் எடுத்துள்ளார். ஆனால் வாழ்க்கை அவருக்காக வேறு திட்டங்களைக் கொண்டிருந்தது.

தமிழக ஆய்வுலகில் தனக்கான இடத்தை அவர் இடையறா ஆய்வின் மூலமும் உழைப்பின் மூலமும் உருவாக்கிக்கொண்டார். 'பானை ஓட்டையானாலும் கொழுக்கட்டை வெந்துவிட்டது' என்ற பழமொழியை அவரைப் பற்றிய தன்மதிப்பீடாகச் சலபதி சொல்வார். பானையில் ஒரு பிரச்சினையும் இல்லை என்றுதான் இப்போது சொல்லத் தோன்றுகிறது.

1994-ஆம் ஆண்டு 'திராவிட இயக்கமும் வேளாளரும்' நூலை எழுதி வெளியிட்டபோது அவருக்கு 27 வயது, அந்நூலை இன்றைக்கு படிப்பவர்கள் இத்தனை இளம்வயது ஆய்வாளரா இதை எழுதினார் என்று வியப்பார்கள். அந்நூல் 'முகம்' மாமணிக்கும் த.கோவேந்தனுக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும். சலபதியை உருவாக்கி நெறிப்படுத்தியதில் இவர்கள் முக்கியமானவர்கள், அவரைக் கண்டெடுத்தவர்கள் என்று சொன்னாலும் தகும்.

வ.உ.சி., பாரதி, புதுமைப்பித்தன் ஆகியோரைத் தனது பதிப்பு நேர்த்தியால் மீட்டெடுத்த காரணத்தால் சலபதியை 'குட்டி உ.வே.சா' என்று சில பத்திரிகைகள் எழுதின. அதற்கான நியாயத்தைத் தனது ஆய்வுகள் மூலம் இன்றளவும் செய்துகொண்டிருக்கிறார், இன்றைக்கும் மெட்ராஸ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருக்கும் அவருடைய அலுவலகத்தில் உ.வே.சா புகைப்படத்தின் கீழே அமர்ந்துதான் தட்டச்சு செய்கிறார். சலபதியின் ஆய்வு வாழ்க்கையைப் போலவே அவர் அலுவலகத்தில் வலப்புறச் சுவர் முழுக்க வ.உ.சி. ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்.

தமிழில் எழுதியவை, பதிப்பித்தவை, மொழிபெயர்ப்பு, ஆங்கிலப் புத்தகங்கள் என மொத்தம் அவர் பெயரில் 47 படைப்புகள் அடங்கும். (அண்மையில் வெளியாகி இருக்கும் Swadeshi Steam V.O. Chidambaram Pillai and the Battle Against the British Maritime Empire வரை). கோட்டோவியமாக நின்றுபோன புதுமைப்பித்தன், பாரதி, வ.உ.சி, உள்ளிட்ட பல தமிழ்ச்சமூக ஆளுமைகளை முழுமைச் சித்திரங்களாக மாற்றி இருக்கிறார் சலபதி. எல்லிசு, ஜி.யு. போப், ராமானுஜாச்சாரியார், டி.வி சாம்பசிவம் பிள்ளை, ராமாநுஜலு நாயுடு, ஏ.கே.செட்டியார், சி.எஸ். சுப்பிரமணியம், தே.வீரராகவன் உள்ளிட்ட தமிழ் ஆளுமைகள் மீதும் அடர்த்தி நிறைந்த கட்டுரைகளின் மூலம் ஒளிபாய்ச்சி உள்ளார்.

ஆங்கிலத்திலும் தமிழ்ச் சமூகம் குறித்தும் ஆளுமைகள் குறித்தும் பல கட்டுரைகளை எழுதி இருக்கிறார். அந்தக் கட்டுரைகளின் தகவல் திரட்சியும் மொழி வளமும் அபாரமானவை. கடின உழைப்பும், தொடர்ச்சியான வாசிப்பும் தேடலும், எழுத்தின் மீதான தீராக் காதலும் இதை சாத்தியப்படுத்தி இருக்கிறது. அவரால் மட்டும்தான் காப்பி, புகையிலை உள்ளிட்டவை

குறித்து ஒருபுறமும் சுதேசிக் கப்பல், தமிழ்க் கலைக்களஞ்சியம் போன்றவை குறித்து மறுபுறமும் சம அளவில் கவனம் செலுத்தி ஆய்வு மேற்கொள்ள முடிந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் அரசியல் - பண்பாடு - இலக்கியம் பற்றி ஆங்கிலத்தில் பொதுச் சமூக வாசிப்புக்கென நேர்மையாகப் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறைவுதான். தற்போது ஓரளவுக்கு தமிழ்நாட்டின் அரசியலை தேசிய ஊடகங்களும் அறிவுஜீவிகளும் பேசத் தொடங்கியுள்ளார்கள். தமிழ்நாடு என்றாலே ஏதோ குறுகிய எண்ணம் கொண்ட மொழிவெறியர்களும், சினிமா மோகம் கொண்டவர்களும் நிரம்பிய மாநிலம் என்ற பிம்பம்தான் இயல்பாகப் பதிவுசெய்யப்படுகிறது. சலபதியின் ஆங்கிலக் கட்டுரைகள் இவற்றுக்கெல்லாம் நேரெதிரானவை. தமிழ்நாட்டின் பெருமிதங்களை அவர் ஆங்கில உலகத்திற்குச் சாய்வுகளற்ற பார்வையுடன் அறிமுகம் செய்திருக்கிறார்.

அயோத்திதாச பண்டிதர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், ஜெ.ஜெயலலிதா போன்ற திராவிட இயக்கத் தலைவர்களாக இருக்கட்டும்; சி.எஸ்.சுப்பிரமணியம் போன்ற கம்யூனிஸ்ட் தலைவராக இருக்கட்டும்; புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அசோகமித்திரன், சுந்தர ராமசாமி, பெருமாள் முருகன், சோ.தர்மன், ம.இலெ.தங்கப்பா போன்ற தமிழ் இலக்கிய எழுத்தாளர்கள் ஆகட்டும்... ஆங்கிலத்தில் அவர் தீட்டிய கட்டுரைகள் அனைத்தும் இவர்களின் ஆளுமையை அசலாகப் பிரதிபலிப்பவை.

தமிழ்நாட்டைப் பற்றிய ஆய்வுகளையெல்லாம் வெளிநாட்டார் அதிகம் செய்து வந்த காலம் மெல்ல உதிர்ந்து நம்முடைய வரலாற்றைத் தேடி துலங்கி நம்மால் எழுத முடியும் என்ற ஊக்கத்தைச் சலபதியின் ஆய்வுகள் நமக்கு வழங்குகின்றன.

சலபதியிடம் தென்படும் முக்கியமான பண்புகளாக சிலவற்றைக் குறிப்பிடவேண்டும். பாராட்டுக்குரியோரை பாராட்டத் தயங்க மாட்டார். வயதில் இளையவர்களையும் மரியாதையுடன் நடத்துவார். அவரது அணுகுமுறையில் ஆறுதலும் ஊக்கமும் இயல்பாக இடம்பெற்றிருக்கும். இளம் தலைமுறையினரைத் தன்மையோடு நடத்துவார், அவர்களின் எதிர்காலத் திட்டம் குறித்து விசாரிப்பார், சில நேரம் ஆலோசனைகள் வழங்கி அறிவுரைப்பார்.

திராவிட இயக்கத்தவர் கூட தயங்காமல் கே.கே நகர் எனத் தயங்காது கூறும்போது, கலைஞர் கருணாநிதி நகர் என்று விரித்துக் கூறும் வரலாற்றுணர்வு அவரது மற்றுமொரு தனித்துவம். சாகித்திய அகாதமி விருது வென்றமைக்காகத் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வாழ்த்துப் பெற்று, பேட்டி அளித்தபோது, திருநெல்வேலி எழுச்சி நடந்ததன் அடையாளமாக ஒரு நினைவுச் சின்னம் எழுப்பக் கோரிக்கை வைத்ததாகவும் அதற்கு முதலமைச்சர் உடனடியாக இசைந்ததாகவும் குறிப்பிட்டார். இந்த வரலாற்றோர்மை எத்தனை பேரிடம் காணவியலும்!

எந்த இடத்தில் அவர் உரை நிகழ்த்தினாலும் அதற்கான தயாரிப்பு கச்சிதமாக இருக்கும். தகவலோடு சேர்த்து நகைச்சுவையும், சிந்தையைத் தூண்டிவிடும் பல சிறு குறிப்புகளையும் ஆங்காங்கே உதிர்த்துவிட்டுச் செல்வார். நேரம் தவறாமையில் மிக கறாராக இருப்பார். 30 நிமிட உரை என்றால் தொடங்கும்போது கழட்டிவைக்கும் கைக்கடிகாரத்தை 29-ஆவது நிமிடத்தில் எடுத்து மாட்டி உரையை நிறைவு செய்து கொள்வார். உரையாடலில் கேட்கப்படும் கேள்விகளின்போது அதன் தன்மை குறித்து அவர் முகத்தில் எந்தச் சலனமும் இருக்காது. மேம்போக்கான கேள்விகளுக்கும் அவரிடம் கருத்தாழம் மிகுந்த பதில் இருக்கவே செய்யும்.

ஒருமுறை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் நடந்த நிகழ்வொன்றில் தியோடர் பாஸ்கரனுடனான நெருக்கத்தைக் குறிப்பிடும்போது "நான் அடுத்த ஜென்மத்தில் உங்கள் வீட்டில் நாயாகப் பிறக்கவேண்டும்'' என்றவர் அதைத் தொடர்ந்து "அப்படி நடந்தால் எனக்கு நீங்கள் தமிழில் பெயர் வைக்க வேண்டும்" என்றார். நிறைந்து இருந்த அரங்கம் சிரிப்பொலியால் மேலும் நிரம்பியது. தனிப்பட்ட உரையாடலில் அதிகம் வெளிப்படும் அவருடைய நகைச்சுவை உணர்வு பொதுமேடைகளில் அரிதாக வெளிப்பட்டாலும் வியப்பினை ஏற்படுத்தும்.

ஜே.என்.யு-வில் முனைவர் பட்டம் பெற்ற பிறகு சலபதிக்கும் அவருடைய ஆசிரியர் பணிக்கருக்கும் இடையே நடைபெற்ற ஓர் உரையாடலைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை நிறைவுசெய்கிறேன். ஆய்வை முடித்ததும், ''என்ன செய்யப் போற'' என்று பணிக்கர் கேட்டுள்ளார். ''தமிழ்நாட்டுக்குப் போகிறேன்'' என்று சொல்லி இருக்கிறார் சலபதி. ''விளங்கமாட்ட. அங்கே வரலாற்று ஆய்வுகளே இல்லை'' என்று பணிக்கர் சொன்னதும், சற்றும் தயங்காமல், ''அப்ப, அங்கதான நான் போகவேண்டும்?'' என்று கேட்டதுக்கு இன்று வரை நியாயம் செய்து கொண்டிருக்கிறார் சலபதி.

●

**கட்டுரையாளர்: ஆய்வு மாணவர்**

48வது சென்னை புத்தகக் காட்சியில்


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 85/-




₹ 80/-




₹ 100/-




₹ 60/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

# கனங்காத்திரமான ஒரு நூல்




பெண்ணிய உளவியல்
பேராசிரியர் சபா.ஜெயராசா
சேமமடு பதிப்பகம் | விலை: ரூ.660/-

தமிழில் இத்துறையில் வெளிவருகின்ற முதலாவது நூலாக இது அமைந்துள்ளது. யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றிய நீண்ட அனுபவத்தோடு பேராசிரியர் இந்நூலை எழுதியுள்ளார்.

பேராசிரியர் ஏலவே 'கல்வியும் பால் நிலைச்சமத்துவமும்' என்னும் நூலைத் தந்துள்ளார், அந்த நூலுடன் 'பெண்ணிய சீர்மியம்' நூலும் இணைத்து வாசிக்கத்தக்கது. அவரது ஆக்கங்கள் பெண்ணியம் என்னும் துறையின் பொருண்மை சார்ந்த விளக்கத்தை இன்னும் ஆழமும் விரிவும் கொண்டவையாக மாற்றுகின்றன.

பால்நிலைச் சமத்துவம், கல்வி, பெண்ணியம், உளவியல், முதலாம் எண்ணக்கருக்கள் பற்றிய விளக்கத்தை மேலும் ஆழம் மிக்கதாக மாற்றுகின்றது.

பெண்ணியம் என்பதை ஒற்றைப் பரிமாண நிலையில் விளக்குதல் பொருத்தமானதன்று. பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகள் விடுதலைச் சிந்தனைகள் புரட்சிகரக் கோட்பாடுகள் முதலியவற்றின் காலங்களாக நீட்சியடைந்துள்ளன.

அவ்வாறான சிந்தனை மரபுகளின் உயிர்ப்பாக மார்க்சியம் மையம் கொண்டுள்ளது. அதாவது, விடுதலை அரசியல், சமூக நீதி, சமூக சமத்துவம், சமூக சனநாயகம், சோசலிசம், கம்யூனிசம் முதலாம் செயலாற்றுகைகளில் மார்க்சியம் பெரும் தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

பெண்ணியம் சார்ந்த கருத்து நிலையில் அரசியலை, விடுதலையை வடிவமைத்து ஆற்றுப்படுத்துவதில் மார்க்சியம் முதன்மை

**தெ.மதுசூதனன்**

விசையாக இயக்கம் பெற்றுள்ளது. பெண்ணியச் செயற்பாட்டுக்குரிய பன்மைச் செயற்பாடுகளையும் வினைப்பாடுகளையும் அது வழங்குகின்றது.

மார்க்சியக் கருத்தியலின் அடிப்படையில் பெண்ணிய உளவியலை விளக்கும் நூலாக இந்த நூலாக்கம் அமைந்துள்ளது. பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோரின் மாணவராகிய பேராசிரியர் சபா.ஜெயராசா அந்தப் பணியைச் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்.

இந்நூல் பெண்ணிய வெளிகுறித்த மாற்றுப் பார்வையைக் கட்டமைக்கிறது. விடுதலைப் பெண்ணியம் மீதான அக்கறைக்கும் சிந்தனைக்கும் செயல்வாதத்துக்கும் புதிய களங்களை அடையாளப்படுத்துகிறது. தொடர்ந்து சமூக வரலாற்றுப் பண்பாட்டியல் நோக்கும் சிந்தனை வெளியும் உள்ளடங்கிய மனித உளவியல் பரிமாணங்களின் ஊடாட்டத்தில் இடைவினை புரிகின்றது. புதிய பாதையை, புதிய பார்வையைச் சாத்தியப்படுத்தும் வழித்தடங்கள் நோக்கிப் பெண்ணியச் சிந்தனையை ஆற்றுப்படுத்துகிறது.

பெண்ணியக் கல்வி உளவியல், பெண்ணிய சமூக உளவியல், சமூக மாற்றமும், பெண்ணிய உளவியலும், பெண்ணிய அழகியல் உளவியல், பெண்ணிய ஆக்க மலர்ச்சி, பெண்ணியச் சீர்மியம், பெண்ணிய விளையாட்டு உளவியல், பெண்களின் பாதுகாப்பு உளவியல், சூழலியற் பெண்ணியம், பெண்களின் தன்னிலை உருவாக்கம், பெண்கள் தொடர்பான தவறான புரிதல் முதலாம் விடயங்கள் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பெண்ணியப் பார்வையை அகலித்து ஆழ்ந்து நோக்குவதற்கான எண்ணக்கருக்களின் பின்னலமைப்பு நூலில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெண்ணிய உளவியலின் பல் பரிமாணங்களையும் அறிவொழுக்க மரபுக்கான கூறுகளையும் கட்டமைப்புச் செய்து தருகிறது. இதுவே இந்நூலின் தனிச்சிறப்புமிக்க அறிவொழுக்கப்பண்பு.

இன்று பெண்ணியம் என்பது தனித்துவமான கற்கை நெறியாக வளர்ச்சி பெற்றுள்ளது. ஆனால் சமூக மாற்றத்துடன் கூடிய பிரயோக நிலைப்பட்ட சிந்தனை அரசியல் ஆய்வுப் பரிமாணமாக வளர்ச்சி அடையவில்லை.

முன்பு "உளவியல்" என்பது தனிமனித வாதத்தை வலுவூட்டும் ஓர் அறிவுத்துறை என்று கருதப்பட்டு வந்தது. அத்தகைய ஒரு கருத்துப் பின்னலில் மார்க்சிய உளவியலாளர் மாற்றத்தை நிகழ்த்தத் தொடங்கினர், அதனால் உளவியலுக்குரிய சமூகப்பலம் விரிவடையத் தொடங்கியது.

சமூகத்தின் இருப்பும் இயல்பும் தனிமனித உருவாக்கத்தில் விசைகொண்டு செயற்படுதலை மார்க்சியம் தெளிவுபடுத்தியது. சமூக மாற்றம் குறித்த அறிவுபூர்வமான கோட்பாட்டுத் தெளிவை மார்க்சியம் முன் வைத்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்த்தப்படும் உதிரிச் செயற்பாடுகள் சமூகமாற்றமாகாது.

சமூக மாற்றத்தை ஆராயும் உளவியலாளர் பால்நிலை வகிபாகங்களில் இடம்பெறும் மாற்றத்தையும் மாறும் நடத்தைக் கோலங்களையும் ஆழ்ந்து நோக்குகின்றனர். மார்க்சியப் பெண்ணியலாளர் புரட்சியோடு இணைந்த அடிப்படையான சமூக மாற்றத்தின் வழிமுறைகள் ஆரோக்கியமான நிலையில் கடத்தப்படுவதில் அக்கறை காட்டுகின்றனர்.

தமிழ்ச் சூழலில் மாற்று அரசியல், விடுதலைச் சிந்தனை முதலானவற்றில் தாக்கம் செலுத்தும் பெண்ணியம் தமிழ்ச் சூழலுக்கேற்ப வளர்த்தெடுக்கப்படுதல் தவிர்க்க முடியாத தாகின்றது. சமூகமே சிந்தனைக்குரிய வளமாகவும் தளமாகவும் அமைகிறது. சமூகமாற்றம் நிகழும் பொழுது, சிந்தனைக் கோலங்களில் மாற்றங்கள் அருட்டிவிடப்படும் அவ்வாறான மாற்றங்களை உருவாக்கும் உயர்ந்த நோக்கில் இந்நூல் அமைந்துள்ளது.

மேலும் பெண்ணியச் சிந்தனையைப் பல்வேறு தளங்களிலும் பல்வேறு நிலைகளிலும் குவியப்படுத்தும் வகையில் "பெண்ணிய உளவியல்" நூலாக்கம் இடம்பெற்றுள்ளது. தமிழில் பெண்ணியத்துறை சார்ந்த எழுத்தாக்கங்களுள் இந்நூல் மாற்றுத்தன்மை கொண்டது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு தலைப்பும் ஆழ்ந்த வாசிப்புக்குரியவை. உளவியல் அறிவை தமிழ் நடைக்குக் கொண்டுவந்துள்ள ஆசிரியரின் செயற்பாடு பாராட்டுக்குரியது. பல்கலைக்கழகங்களில் நீண்டகாலம் பணியாற்றிய அவரது ஆற்றலானது இயம்பலில் இழையோடியுள்ளது. எளிமை நிலையில் இருந்து ஆழ்ந்த வாசிப்பை நோக்கிய தூண்டல் நூலில் இடம் பெற்றுள்ளது.

"பெண்ணிய உளவியல்" என்ற கருத்து வடிவத்தின் பன்மை அம்சங்கள் பலவாறு இழையோடும் வகையில் நூல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

காலனித்துவம், மேலாதிக்கம், மனிதநகர்வுகள், புலம்பெயர்தல், கோளமயமாக்கல், பன்னாட்டு நிறுவனங்களின் எழுச்சி, நவீனமுதலாளியத்தின் ஊடுதலையீடு ஆகியவற்றினூடே பெண்களின் நிலைவரம் தொடர்ந்து அழுத்தங்களுக்கு உட்பட்டதாகவே இருந்து வருகிறது.

பெண்கள் மீதான நவீன சுரண்டல் வடிவங்களின் உருவாக்கம் நிகழ்ந்தேறி வருகின்றது. நவீன சுற்றுலாக் கைத்தொழில், நவீன பொழுதுபோக்குக் கைத்தொழில் முதலியவற்றில் பெண்களைப் பயன்படுத்தும் விதம், பெண்களிடத்துப் பல்வேறு நெருக்கடிகளையும் உளவியல் தாக்கங்களையும் தோற்றுவிக்கின்றது.

நவீன முதலாளியம் பெண்களின் உழைப்பைப் பல்வேறு நிலைகளிலே சுரண்டியெடுக்கின்றது. பெண்களின் இன்றைய அவலநிலையையும் உளவியல் நெருக்கீடுகளையும் பகுத்தாராய்தல் நூலுக்குரிய சிறப்புப் பண்பாகின்றது.

இன்றைய பெண்கள் தொடர்பில், பன்னாட்டு, உள்நாட்டு சமூக பொருளாதார அரசியல் பின்புலத்தில் பெண்நிலைநோக்கு வயப்பட்ட பார்வைகளை நுண்ணியதாக வெளிப்படுத்தும் பாங்கு சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படத்தக்கது.

இது மரபுவழியான பார்வைக் கோணங்களில் இருந்தும் கருத்தாடல்களில் இருந்தும் முற்றிலும் மாறுபட்டதாக அமைகின்றது. புதிய கருத்தாடல்களை அடியொற்றிய உளவியல் அணுகுமுறைகள் நூலில் முன்வைக்கப்பட்டுள்ளன.

பெண்ணியத்தை மேலும் நுட்பமாகவும், ஆய்வுரீதியாகவும் சமூகமயப்படுத்தியும் சிந்திக்கத் தூண்டுகின்றது.

பெண் என்ற நிலையிலும் சிறுபான்மைத் தேசிய இனத்தவர் என்ற நிலையிலும் பெண்கள் இரட்டைப் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அமெரிக்காவில் கருமை இனப்பெண்களும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில், சிறுபான்மைத் தேசிய இனப்பெண்களும் இரட்டைப்பாதிப்புக்கு உள்ளாக்கப்படுதல் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஒடுக்குமுறைகள் இராணுவ மேலாதிக்கம், அகதி வாழ்க்கை, புலப்பெயர்ச்சி, புலச்சிதறல், போர் இழப்புக்கள், பொருள் மற்றும் நில இழப்புக்கள், கல்வி இழப்பு முதலியவற்றால் பெண்கள் அனுபவிக்கும் உளவியல் நெருக்கடிகளும், துயரங்களும் நீண்ட பட்டியல் கொண்டவை.

இலங்கையில் பெருந் தோட்டத்துறைப் பொருளாதாரத்தின் அடியாதாரங்களாய் இருக்கும் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தனியான ஆய்வுக்குரியவை. பழைய காலனித்துவம் மற்றும் புதிய காலனித்துவம் ஆகியவற்றின் கொடூரமான சுரண்டலுக்கு உள்ளாகிய நிலையில் இருந்து மீட்சி பெற முடியாத வாழ்வின் நகர்ச்சி தொடர்ந்த வண்ணமுள்ளது.

பெண்ணிலை நோக்கு பெண்நிலை உளவியல், பெண் உரிமைகள் முதலியவற்றின் அடிப்படைகளில் குவி சிந்தனையையும் விரி சிந்தனையையும் நூல் தூண்டிவிடுகிறது. அவற்றினூடே நம்பிக்கை வறட்சியை ஏற்படுத்தாது நம்பிக்கை நீட்சியை நூல் வளர்த்து விடுகின்றது.

சமூகக் கட்டமைப்பில் பால்நிலை அசமத்துவத்தை நடுநாயகப்படுத்தியும் விவரித்தும் விளக்கியும் விடுதலையைக் குவியப்படுத்தியும் நூல் ஆக்கம் பெற்றுள்ளது.

சமூகக் கட்டுமையின் இயல்பு நூலில் விரித்து நோக்கப்படுகிறது.

சமூகத்தில் ஆண்களின் உழைப்பு விதந்து நோக்கப்படுவது போன்று பெண்களின் வெளி உழைப்பும் வீட்டு உழைப்பும் விதந்து நோக்கப்படுதல் இல்லை. பெண்கள் எதிர்நோக்கும் உளவியற் பிரச்சினைகள் பலவாறானவை.

பெண்களின் உடல் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து வாழும் பணிவுடலாக (DOCILE BODY) மாற்றப்பட்டு வருகிறது. சமூகம் நோக்கிய தீர்மானங்களையும் அரசியல் தீர்மானங்களையும் ஆண்களே பெருமளவில் மேற்கொண்டுவருவதால் பெண்கள் தொடர்ச்சியான உள நெருக்கீடுகளுக்கும் பதகளிப்புக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றன.


கனங்காத்திரமான பல உளவியல் செய்திகளை நூல் தாங்கி நிற்கின்றது. தமிழுக்குப் பயனுள்ள ஒரு புதிய நூல் என்றே இதனைக் குறிப்பிடலாம். ஆழமான விடயங்களை தெளிவாக எடுத்துரைக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது.


பெண்ணிய உளவியலாளர்களின் பட்டியல், பழந்தமிழ்நாட்டில் இலக்கிய வழியான பெண் வினைப்பாட்டாளர் பட்டியல், தமிழ்ச்சூழலில் பெண்ணிய வினைப்பாட்டாளர் பட்டியல் முதலியனவும் நூலின் பின்னிணைப்பிலே தரப்பட்டுள்ளன.

கனங்காத்திரமான ஒரு நூலை வாசித்த உளவியற் சுகம் கிடைக்கப் பெறுகிறது.

●

**கட்டுரையாளர்: திறனாய்வாளர், தமிழ் எழுத்தாளர், இலங்கை.**





ஜான் லீ ஆண்டர்சனின்

# சே குவேரா

ஒரு போராளியின் வாழ்க்கை

## புதிய வெளியீடு

தான் வாழும் காலத்திலேயே பெரும் வரலாற்று நாயகருக்குரிய புகழை அடைந்தவர் சே குவேரா. மரணத்துக்குப் பின்பு உலகப்புகழ் பெற்ற மாவீரராகத் திகழ்கிறார். புரட்சிகரப் போராளி, இராணுவ வல்லுனர், சமூகத் தத்துவவியலாளர், பொருளாதார அறிஞர், மருத்துவர், மற்றும் ஃபிடல் காஸ்ட்ரோவின் உற்ற நண்பரும் ஆலோசகரும் ஆவார். சே குவேரா கண்ட கனவு மகத்தானது. - லத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்தையும், பின்பு உலகின் வளரும் நாடுகள் அனைத்தையும் ஆயுதப் புரட்சியின் மூலம் ஒருங்கிணைத்து என்றென்றைக்குமாக வறுமை, அநீதி, மக்களைப் பல நூற்றாண்டுகளாய்ச் சுரண்டி இரத்தம் சிந்த வைத்த அற்பத் தேசியவாதங்கள் ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவதே அந்தக் கனவு. இந்த மாபெரும் லட்சிய வேட்கையினால் உந்தப்பட்டு தன் வாழ்க்கையைச் செலுத்திய சே அதற்கான விலையாக இறுதியில் தன் உயிரை ஈந்தார்.

சே குவேரா: ஒரு போராளியின் வாழ்க்கை ஹவானா, அல்ஜியர்ஸ் ஆகிய புரட்சித் தலைநகரங்களுக்கு இடையே ஊடாடுவதோடு பொலிவியா மற்றும் காங்கோவின் போர்க்களங்களிலும் பயணிக்கிறது. மாஸ்கோ, வாஷிங்டன் நகரங்களின் அதிகார பீடங்கள் குறித்து மட்டுமல்லாது மியாமி, மெக்சிகோ, மற்றும் கவுதமாலாவில் வசித்த அரசியல் அகதிகளின் கதைகளையும் சொல்லும் இந்நூல் புரட்சி, பன்னாட்டு ராஜ தந்திரங்கள், மற்றும் ரகசியச் செயல்பாடுகள் குறித்த சுவாரசியமான தொகுப்பாகும். உலகையே ஆட்டுவித்த இரு பெரும் சக்திகளான அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனுக்கு இடையிலான பலப்பரீட்சையையும் அவை தோற்றுவித்த சிற்சிறு போர்கள் குறித்தும் பேசும் இந்நூல் பரந்து விரிந்த பன்னாட்டுப் பார்வையைக் கொண்டிருக்கிறது.

நூலாசிரியர் ஜான் லீ ஆண்டர்சனுக்குக் கியூபாவின் அரசு ஆவணங்களைத் தடையில்லாமல் ஆய்வு செய்யும் உரிமையும், சே வின் மனைவி அலெய்டாவின் முழு ஒத்துழைப்பும் கிடைத்திருக்கிறது.

₹ ~~1400/-~~

**₹ 1260/-**

பாரதி புத்தகாலயம் 044 24332924

/ thamizhbooks

thamizhbooks.com


நினைத்த நூல்கள்... நினைத்த நேரத்தில்...

வங்கி விவரம்:* Bharathi puthakalayam
AC No.701071066 Indian Bank.
Alwarpet Branch IFSC code IDIB000A013
*Paytm, Gpay, phone pay & WhatsApp 9444960935*

Gpay யில் 9444960935 இந்த எண்ணுக்கு பணம் செலுத்தி வாட்ஸ் அப்பில் முகவரியுடன் தகவல் தெரிவித்தால் அன்றே புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.




# சோதனைக் குடுவைக்குள் குட்டிப் பிரம்மாக்கள்



நெல்லை சு.முத்து

"நிலாவில் மனிதன் காலடிவைத்தது பெரிய சாதனை என்றால், மனித ஜினோமிலுள்ள 3 பில்லியன் எழுத்துக்களையும் கண்டுபிடித்து அவற்றைச் சரியான வரிசையில் எழுதி வைத்ததும் சாதனையே. இந்நூற்றாண்டின் தலைசிறந்த மனித முயற்சி இது. கம்ப்யூட்டரின் துணையில்லாமல் ஜினோமின் தகவல்களை ஆராய முடியாது என்பதால் உயிரியல், கணினி தகவல் தொழில்நுட்பத்துடன் கைகோத்துக் கொண்டது. இதன் காரணமாக 'பயோ இன்ஃபர் மேட்டிக்ஸ்' என்ற புதிய இயல் தோன்றியது. ஜீன்களையும் ஜினோம்களையும் ஆராய வேண்டிய சூழ்நிலை எனக்கும் ஏற்பட்டதால், பயிரியலில் ஆராய்ச்சி அனுபவம் பெற்றிருந்த எனக்கு பயோ இன்ஃபர்மேட்டிக்ஸையும் கற்றுக்கொள்ளவும் அது பற்றி நூல்கள் எழுதவும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தத் தருணத்தில் மேட் ரிட்லி என்பவர் எழுதிய மனித ஜினோம்




**மனித ஜினோம் | பேரா.க.மணி**
**வெளியீடு: என்சிபிஎச், சென்னை.**
**விலை: ரூ.350/-**

*பற்றிய நூலைப் படிக்க நேரிட்டது. அதிலுள்ள கருத்துக்களை அறிவியல் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் மேட் ரிட்லியை அடியொட்டி, எளிமையாக அதே நேரத்தில் நுணுக்கங்களை விட்டு விடாமல் இந்த நூலை எழுதி முடித்தேன்" என்று பயிரியல் பேராசிரியரும் நீண்ட காலமாக, 'கலைக்கதிர்' என்னும் அறிவியல் இதழின் ஆசிரியருமான பேராசிரியர் க.மணி எழுதியுள்ள 'மனித ஜினோம்' (மனித இனத்தின் மறைநூல்) என்ற தலைப்பில் 2015 ஜூலையில் வெளிவந்த நூலின் மூன்றாம் பதிப்பு 2024 செப்டம்பரில் அரங்கேறி இருக்கிறது.*

*"இது வரை தானாகவே உருவாகிக் கொள்ளும் இயந்திரம் எதையும் மனிதன் படைத்ததில்லை. ஆனால் அவனே ஒரு தானாய்த் தோன்றிக் கொள்ளும் தானியங்கி இயந்திரம். மனித ஜினோமில் அடங்கியுள்ள ஒரு தகவலை 'ஜீன்' என்றழைக்கிறோம். 25,000 ஜீன்கள் (தகவல்கள்) கொண்டது மனித ஜினோம் (Human Genome). இருபத்தைந்தாயிரம் ஜீன்களும் ஒரே குவியலாக இல்லாமல் 23 கட்டுகளாக கூறு கட்டப்பட்டுள்ளன. அந்தக் கூறுகளின் பெயர் குரோமோசோம்" (பக்கம் 6).*

*இந்நூலின் 24 அத்தியாயங்களில் ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒன்று வீதம் 23 குரோமோசோம்களின் செயல்பாடுகள், அவற்றில் ஏற்படும் பிழைகளால் உண்டாகும் மரபியல் சார்ந்த நோய்ப்பாதிப்புகள் என சுவாரஸ்யமான மொழிநடையில் 441 பக்கங்களில் வடித்துள்ளார் பேராசிரியர். அவற்றின் சிறப்புகளை மதிப்பிடுவது என்பது தனி நூலாகிவிடும் என்பதால் இந்தப் புதிய உயிரித்தகவலியல் (Bio-Informatics) சார்ந்த செய்திகளை மீறி எதிர்காலத்தில் இனிமேற்கொண்டு என்னென்ன புதுமைகள் அரங்கேறவிருக்கின்றன என்னும் கருத்து எனக்குள் மேலிடுகிறது.*

*வெறும் 25,000 தகவல்களை வைத்துக்கொண்டு, கரு எப்படி பல செல்களாகி, ஒன்றுகூடி, மனித உடலாகிறது என்பது ஒரு அன்றாட விந்தை. இருபத்தைந்தாயிரம் தகவலின் அடிப்படையில் சுமார் ஒரு இலட்சம் உதிரி பாகங்களைத் தானாகவே தயார் செய்து கொள்ளும் அதிசய எந்திரம் மனித உடம்பு.*

*சுற்றுச்சூழலுக்கு ஏற்பவும், உட்கொள்ளும் உணவுப் பண்டங்களைப் பொருத்தும் இந்தப் பூமியில் மனிதர்களும், விலங்குகளும், தாவரங்களும், புழு பூச்சிகளும் ஆங்காங்கே வெவ்வேறு இனங்களாகத் தோன்றி பரிணமித்து வருகின்றன. இவை திடீரென்று அவற்றுக்கே உரிய முழு வடிவில் சமகாலத்தில் 'படைக்கப்பட்டவை'யாக இருக்க வாய்ப்பே இல்லை. பூமியும், உயிரினங்களும் எல்லாம் என்றைக்கும் மாறாமல் இருக்கும் என்ற பழைமைவாதக் கருத்தோட்டங்கள் இவ்விதம் தான் அமைகின்றன.*

*பரிணாமவியலைப் புரிந்து கொள்ள மறுக்கிற சித்தாந்தவாதிகள், "பூமியில் பரிணமித்த மொத்தக் குரங்குகளும் மனிதர்களாகி விட்டன என்றால் இன்றைக்குள்ள குரங்குகள் எங்கிருந்து வந்தன?" என்ற அதிபுத்திசாலித்தனமான கேள்விகளை எழுப்புகிறார்கள். அவற்றின் இடப்பெயர்வுகளுக்கும் தட்பவெப்ப மாற்றங்களுக்கும் ஏற்ப, தொண்டர்கள் அனைவரும் ஒரே காலகட்டத்தில் தலைவர்களாக முடியாதது போலவே, ஒரு சிலவே பரிணாமத்தின் அடுத்தக் கட்டங்களுக்கு இயல்பாகவே நகர்கின்றன.*


*இந்தப் பூமியில் இத்தகைய உயிரினங்கள் வாழ்வதாலேயே பிரபஞ்சத்திலும் இதே கண், காது மூக்குடன் தோன்றி வாழும் வேற்றுலகவாசிகளைத் தேடுவது இருக்கட்டும்.*

பூமியின் மொத்த எடையில் ஒரு மனிதனின் நிறை 1000 கோடி கோடி கோடியில் ஒரு பங்கு அளவு மட்டுமே. இந்த நிலையில் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு மனிதனின் உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும் உள்ள செல்களை எண்ணிப்பார்த்தால் ஏறக்குறைய 100 டிரில்லியன் (100,000,000,000,000) இருக்கலாம். நமது உடலில் தினமும் இலட்சக்கணக்கான செல்கள் அழிக்கப்பட்டு, பதிலாக புதிய செல்கள் உருவாகின்றன.

"பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற பவணந்தி முனிவரின் நன்னூல் சூத்திரம் அறிவியல் உண்மையும் கூட. தினமும் தூங்கும்போது குடலின் உட்புறத்திலிருந்து ஒரு கைப்பிடி அளவு 10 கிராம் மாமிசம் நீக்கப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

**மூலக்கூறு இயந்திரங்கள்**

தனிமங்களின் அணுக்களைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிப் புது மூலக்கூறுகள் சமைக்க முடியுமா, என்றால் முடியும். ஒரு அணுவோ, மூலக்கூறுவோ தனிச்சுழி என்கிற பூஜ்யம் பாகை கெல்வின் வெப்பநிலையில் அதன் இயக்கமே ஸ்தம்பித்துவிடும். மூலக்கூறு மட்டுமா, அனைத்து அண்ட சராசரங்களும் சலனம் அற்றுப்போகும். அது பனி உறைநிலைக்கும் தாழ்வான 273



பாகை செல்சியம் அளவு அல்லவா? அவற்றுக்கு மூன்றுவிதமான ஆற்றல்கள் ஊட்டினால் உண்டாகும் இயக்கத்தைப் புரிந்து கொள்ளலாம்.


தனிச்சுழி (அதாவது பூஜ்யம் பாகை கெல்வின்) அளவிலான அதிகுளிரில் மூலக்கூறு உயிரற்று உறைந்து நிலைத்துவிடும் அத்தகைய மூலக்கூறினுக்குக் கொஞ்சம் வெப்ப ஆற்றல் ஊட்டினால் அது இருந்த இடத்திலேயே தன்னைத்தானே சுற்றத் தொடங்கும் அதுவே தற்சுழற்சி (spin) இயக்கம். இதையே வேறு விதமாகச் சொல்வதானால், நாம் காலையில் உறங்கி எழுந்தவுடன் கைகளை உயர்த்தி உடம்பினை முறுக்கி ஓரளவு நெளிவதைப் போன்ற பயிற்சியின் அடுத்த கட்டம்.

அந்த மூலக்கூறினுக்கு இன்னும் கொஞ்சம் ஆற்றல் அளவினைக் கூட்டினால் அது இருக்கும் இடத்தில் விட்டு நகராமல் அதே இடத்தில் நின்றபடி உடற்பயிற்சி செய்வதைப் போல குதிக்கும். மூலக்கூறு, ஏறத்தாழ மெல்ல உயர்ந்து தாழும். அதாவது அதிரத் தொடங்கும். இது அதிர்வு இயக்கம் (vibration).

அதுவும் போதாது என்றால், அதற்கு ஊட்டப்படும் ஆற்றலை மேலும் அதிகரித்தால் அந்த மூலக்கூறு தன் இருப்பிடம் விட்டே விலகித் தெறித்த திசையில் நேர்கோட்டில் இடம் நகர்ந்து (Translational) விடும். இன்னும் கொஞ்சம் ஆற்றல் அதிகரித்தால் அது தாறுமாறாகப் பறந்து எங்கோ சென்று முட்டி மோதும். இத்தகைய இடப்பெயர்வு (displacement) நிலையை அறிவியலில் 'பிரௌனியன் சலனம்' (Brownian Movement) என்கிறோம். பெரும்பாலும் திரவ, வாயுப்பொருள்களில் அடங்கிய மூலக்கூறுகள் அவை நிரப்பப்பட்ட இடத்தில் முழுவதுமாக வியாபித்து அடைத்துக்கொள்வது இதனால்தான்.

எப்படியோ, அந்த மூன்றுவித இயக்கங்களுக்கு அப்பால், ஒவ்வொரு மூலக்கூறினில் அடங்கிய தனித் தொகுதியினை வேதிம ரீதியிலோ, வெப்ப ஆற்றல் ஊட்டிய வகையிலோ, அந்த மூலக்கூறின் உடம்பையோ, கைகளையோ, கால்களையோ அசைவிக்க முடிந்தால் அதுதான் மூலக்கூறு இயந்திரமாகச் செயல்படும்.

மூலக்கூறு இயந்திரம் என்பது ஒரு குறிப்பிட்ட ஆற்றல் தூண்டுதலுக்கு உட்பட்டு இயந்திரம் போல் அசைகிற அல்லது இயங்குகிற மிக நுண்ணிய அமைப்பு. அதன் இயக்கம் என்பது சுழற்சி, அதிர்வு, அசைவு என எந்த வகையிலாவது அமையலாம்.



அது சரி, இந்த மூலக்கூறின் கன பரிமாணங்கள் என்ன என்றுதானே கேட்கிறீர்கள். உள்ளதில் மிகச் சிறிய மூலக்கூறு என்பது இரண்டு ஹைடிரஜன் தனிம மூலக்கூறுதான். இரண்டு அணுக்கள் இணைந்தது இந்த ஹைடிரஜன் மூலக்கூறு. அதன் எடை 2 என்றால், 2 கிராம் ஹைடிரஜன் வாயு சாதாரண வெப்பநிலையில் காற்றழுத்தத்தில் 22.4 லிட்டர் (அதாவது சராசரி ஒரு வாளி அளவு) இடத்தில் பரவி இருக்கும். அதில் ஏறத்தாழ 602 கோடி கோடி கோடி மூலக்கூறுகள் அடக்கம். அப்படியானால் ஒரு மூலக்கூறுவின் கன அளவு 40 கன நானோமீட்டர் அளவுக்குள் அடக்கம்.

இது என்ன நானோ மீட்டர் என்பதையும் விளக்கிவிடுகிறேன். மனிதனின் சுண்டுவிரல் கனம் சராசரி ஒரு சென்டிமீட்டர் என்று இருக்கட்டும். அதன் நூறில் ஒரு பங்கு என்பது தலைமுடி அளவு (0.1 மில்லி மீட்டர்). அவ்வளவுதான். அதன் இலட்சத்தில் ஒரு பங்கு அளவு தான் நானோமீட்டர். அதாவது, ஒரு விரல் கனத்தில் கோடியில் ஓர் அம்சம்தான் நானோ அளவு.


எடுத்துக்காட்டாக, டி.என்.ஏ. (DNA) எனப்படும் டி-ஆக்சி-ரிபோ நியூக்ளிக் அமிலம் (De-oxy Ribo Nucleic Acid) ஆகிய மூலக்கூறின் பருமன் 2.5 நானோமீட்டர்கள். ஒரு தலைமுடியின் குறுக்கே இத்தகைய 40,000 டி.என்.ஏ. மூலக்கூறுகளை விறகுக் கட்டுப் போல அடக்கிக் கட்டலாம் என்றால் பாருங்களேன். அத்தனைக்குச் சிறிய மூலக்கூறுகளில் இயந்திரங்கள் என்றால் சும்மாவா?

தெள்ளுப்பூச்சி; உண்ணி, பேன் உருவ அளவில் பத்தில் ஒரு பங்கு = தலைமுடி; தலைமுடியின் பத்தில் ஒரு பங்கு = இரத்தச் சிகப்பு அணு; இரத்தச் சிகப்பு அணுவின் பத்தில் ஒரு பங்கு = பாக்டீரியா; பாக்டீரியாவின் பத்தில் ஒரு பங்கு = தீநுண்மி (வைரஸ்); தீநுண்மி (வைரஸ்) அளவில் நூற்றில் ஒரு பங்கு = டி.என்.ஏ.மரபணு; டி.என்.ஏ.மரபணுவில் பத்தில் ஒரு பங்கு = ஒரு நானோமீட்டர்.

மைக்ரோஸ்கோப், மைக்ரோ-பயோலஜி போன்ற கலைச்சொற்களை நுண்ணோக்கி, நுண் உயிரியல் என்று எல்லாம் குறிப்பிடுகிறோம். அதனினும் ஆயிரத்தில் ஒரு பங்கு அளவிலான 'நானோ சயன்ஸ்' என்பதையும், ‘நானோ டெக்னாலஜி' என்பதையும் கூட; மீநுண் அறிவியல்', 'மீநுண் தொழில்நுட்பம்' என்று எல்லாம் வழங்கலாம் தானே.

எப்படியோ, முப்பது ஆண்டுகளுக்கு முன் எரிக் ட்ரெக்சலர் (Eric Drexler) எனும் அறிஞர் இந்த நானோ (மீ நுண்) தொழில்நுட்பம் தொடர்பாக நூல் ஒன்று வெளியிட்டார். ‘படைப்புப் பொறிகள்: மீநுண் தொழில்நுட்பத்தின் எதிர்கால யுகம்' (Engines of Creation: The Coming Era of Nanotechnology, 1986) என்பது தலைப்பு. ஒரு கருத்துச் சித்தாந்தம். அவ்வளவுதான். பிரம்ம சிருஷ்டி ரகசியம் இயற்பியல் உலகையே ஒரு உலுக்கு உலுக்கிற்று.

அதற்கு அடுத்த ஆண்டில் மூலக்கூறுகள் சுயமாகத் தொகுத்து உருவாகும் நுட்பம் (molecular self-assembly) கண்டுபிடிக்கப்பட்டது.
அதன்வழி 80 நானோமீட்டர் மின் இயக்கிகள் தயாரித்தார். ஏ.டி.பி. (ATP) என்கிற அடினோசின்



ட்ரைஃபாஸ்ஃபேட்டு (Adenosin Tri-Phosphate) நொதியில் ஒரு மின்விசிறியைச் சுழற்றும் இயந்திரப் பொறி அமைப்பு இருக்கிறதாமே. இது மாதிரி சின்னச் சின்ன செயற்கை உயிரி இயந்திரங்களை வடிவமைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

2016ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டில் ஸ்ட்ராஸ்பர்க் பல்கலைக்கழகத்தின் ஜோன் - பியர்ரி சாவேஜ் (Jean-Pierre Sauvage), அமெரிக்காவில் இவான்ஸ்டனில் வடமேற்குப் பல்கலைக் கழகத்தின் சர் ஜே.ஃப்ரேஸர் ஸ்டோதார்த் (Sir J.Fraser Stoddart) மற்றும் நெதர்லாந்து குரோனிங்கன் பல்கலைக் கழகத்தின் பெர்னார்டு எல்.ஃபெரிங்கா (Bernard L Feringa) ஆகியோருக்கு மூலக்கூறு இயந்திரங்கள் வடிவமைப்பு மற்றும் தொகுப்பாய்வு முறையில் தயாரித்ததற்காக வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பெற்றது.

உள்ளபடியே, இந்த மூலக்கூறு இயந்திரங்கள் செயற்கையில் தயாரிக்கப்படலாம்; அல்லது இயற்கையில் கண்டறியப்பட்டும் உபயோகிக்கப்படலாம். ஆதலால் அவற்றை முறையே செயற்கை மூலக்கூறு இயந்திரங்கள் (Artificial Molecular Machines) என்றும், உயிரியல் மூலக்கூறு இயந்திரங்கள் (Biological Molecular Machines) என்றும் இரண்டு வகைகளில் எடுத்துக் கூறலாம்.

### செயற்கை மூலக்கூறு இயந்திரங்கள்

முதலில் செயற்கை மூலக்கூறு இயந்திரங்கள் பற்றி குறிப்பிட்டு விடுகிறேன். ரோடாக்சின் (Rotaxane) என்று ஒரு மூலக்கூறு இருக்கிறது.

உடற்பயிற்சியாளர்கள் ஒரு உள்ளங்கையில் இறுக்கிப் பிடித்து முஷ்டி மடக்கிப் பயிற்சி செய்வதற்குப் பயன்படுத்தும் ‘டம்பெல்’ போன்ற வடிவமைப்பு உடைய மூலக்கூறு. இதன் இருபுறமும் புஜங்கள் போல் முண்டுகளாகத் திரண்டு இருக்கும். நடுத்தண்டினில் ஒரு வளையல் செருகப்பட்டது போல் இருக்கும். அதன் மேல் ஒளியைப் பாய்ச்சி அதனை அயனியாக்கலாம், வேறு கரைசலோ, அமில-காரத் திரவமோ ஊட்டி அந்த வளைய மூலக்கூறில் இருந்து ஒரு மின்னணுவை அகற்றி, ஆக்சிகரணம் அடையச் செய்து, நேர்மின் வளையம் ஆக்கலாம்; அந்த நடுத்தண்டுக்கும் நேர்மின்னேற்றம் உண்டு என்றால், வளையமும் நடுத்தண்டும் ஒத்த மின்னேற்றம் உடையன என்பதால், அவை ஒன்றையொன்று விலக்கும். அதாவது அந்த வளையத்தின் இடம் நகர்த்தப்படும். அதனால் ரோடாக்சின் மூலக்கூறில் அந்த வளையம் ஒரு முண்டுப் பக்கம் இருந்து மற்றொரு முண்டு நோக்கித் தெறித்து நகரும். இதுதானே ஒரு இயக்கியின் செயல்.


அப்புறம் என்ன, ஒளி, வெப்பநிலை, மின் தூண்டல், அமில - காரத்தன்மை, கரைசலின் இயல்பு போன்றவற்றின் அளவினை அல்லது செறிவினை மாறுபடுத்தி ஒரு மூலக்கூறினை இணைப்பான் - அணைப்பான் (on-off) உத்தியிலும் மூலக்கூறு சுவிட்ச் (Molecular Switch) போலக் கையாள முடியும். இன்னமும் சொல்வதானால், செயற்கைத்தசை (Artificial Muscle) தயாரிக்கவும் ரோடாக்சின் மூலக்கூறுகள் உதவுகின்றன என்பதுதான் ஆச்சரியம்.

விமானங்களில் இடம்பெறும் முன்தள்ளிகள் விசிறி போன்ற சிறகு அமைப்பு உடையவை. இவற்றை மூலக்கூறு முன்தள்ளிகள் (Propellers) எனலாம். 80 நானோமீட்டர் அளவில் சிறிய மீநுண் மின் இயக்கி (Motor) உருவாக்கப்பட்டு விட்டது. தலைமுடியின் ஆயிரத்தில் ஒரு பங்கு இம்மி அளவு இயந்திரம். ஆச்சரியம்தான். இதனைப் பயன்படுத்தி சுழலி போன்ற நுண்கருவிகளை இயக்கலாமாம். அவற்றை விசையுடன் சுழற்றித் திரவங்களை உந்தி முன்னுக்குத் தள்ளிவிடவும் முடியும்.

1998ஆம் ஆண்டு சீஸ் டெக்கர் ஆய்வக விஞ்ஞானி வில்லியம்ஸ் என்பவர் முதல் முறையாக நானோ அணுக்குழல் (Carbon Nanotube) அடிப்படையில் மின் கடத்தும் டிரான்சிஸ்டர் ஒன்றைக் கண்டுபிடித்து ‘குட்டிப் பிரம்மா’ ஆகி இருக்கிறார். நுட்பமான உயிரி-மின்னணு (Bio-electronics) உபகரணம்.

### உயிரியல் மூலக்கூறு இயந்திரங்கள்


இனி உயிரியல் மூலக்கூறு இயந்திரங்கள் பற்றித் தெரிந்து கொள்வோமே. கணிப்பொறிகளில் பூஜ்யம் - ஒன்று ஆகி இரண்டு இலக்கங்கள் (2 digits) சார்ந்த இலக்கவியல் (digital) நுட்பம் போதுமானது. இவ்வகைக் கணிப்பொறிகளில் மின்னழுத்தம் 5 வோல்ட் உண்டு - இல்லை என்பதே பூஜ்யம் - ஒன்று ஆகிய நிலைகள். பூஜ்யம் - ஒன்று (01) ஆகிய இரண்டு நிலைகளை மூன்று விதங்களில் தொகுத்தால் அது மூவிலக்கச் சொல் (3 bit word) ஆகிறது. 000, 001, 010, 100, 011, 110, 101, 111 என எட்டுச்சொற்கள் உருவாக்கலாம். இப்படியே 16 நான்கு இலக்கச் சொற்களும் (4 bit words) வடிக்கலாம். இங்கு சிலிக்கான் சில்லுகள் கொண்ட கணிப்பொறி மாதிரியே உயிரிக் கணிப்பொறி (Biological computer) இருக்கிறது.



உயிரிக் கணிப்பொறி: இயல்மாற்றி – சமிக்ஞை செயலுறுத்தல் – வெளியீடு.

அதில் சிலிக்கன் சில்லுகளுக்குப் பதிலாக, உயிரி மூலக்கூறுகள் போதும். எடுத்துக்காட்டாக, குதிரை முடி, யானை முடி போன்ற சில வகை உரோமங்களைச் சொல்லலாம். அவற்றில் தண்ணீர் அல்லது ஈரப்பதம் பட்டால் அது, உரோமத்தின் உள்ளீடற்ற நுண்பைகளால் உறிஞ்சப்பட்டு, உரோமம் முற்றிய நெற்கதிர் போலக் கனத்துத் தொங்கிவிடும்.

அதே வேளையில் அதன் ஈரத்தை நீக்கிட முடியை உலர்த்தினால் அது மீண்டும் தன்னிலைக்கு நிமிர்ந்து எழுந்து விறைப்பாக நிற்கும். தொங்குவதும் நிமிர்வதும் கணிப்பொறியின் பூஜ்யம் - ஒன்று ஆகிய இருமை நிலைகளின் ஆதாரம் அல்லவா? இதையே ஒரு உயிரி மூலக்கூறு அளவில் உருவமைத்து அதனை உயர்த்தியும் தாழ்த்தியும் உண்டு - இல்லை ஆகிய இருமைநிலையினை அமைக்கலாம் அல்லவா?




உயிரிச்சில்லு (பரிமாணங்கள் மைக்ரோன் அலகில் தரப்பட்டுள்ளன. ஒரு மைக்ரோன் என்பது ஒரு மில்லிமீட்டரில் 1000ல் ஒரு பங்கு ஆகும்.)

இன்றைக்கு டி.என்.ஏ என்கிற சின்னச் சின்ன மரபணு நினைவுக் கிடங்குகளில் தகவல் சேகரிக்கப்பட்டு வருவது தெரியும். அப்படியானால் இத்தகைய மூலக்கூறுகளால் சிக்கலான உயிரிச்சில்லுகள் (bio-chip) உருவாக்க முடியும். அப்புறம் என்ன? உயிரியல் கணிப்பொறிகள் தயார்.

ஒவ்வொரு உயிரின் செல்லினுள்ளும் பெரிய மூலக்கூறுகளால் ஆன புரதங்கள் அடங்கி உள்ளன. அவற்றுள் மைசின் (Myosin) என்பது இயக்கிப் புரதம் (Motor protein) ஆகும். தசைகள் சுருங்கி விரிவதற்கு இது உதவுகிறது.

கினெசின் (Kinesin) என்கிற புரதம், ஒற்றைசெல் உயிரிகளில் (Eukaryotes) இடம்பெறும் நுண்குழல் (Microtubule) மேல் உயிரணுக் கருவினை (Nucleus) விட்டு விலகிச் செல்லும் திறன் கொண்டது. இதற்கான ஆற்றலினை அடினோசின் ட்ரை-ஃபாஸ்ஃபேட்டு (Adenosine Tri-Phosphate) வழங்குகிறது. அதேவேளையில் நுண்குழல் மேல் உயிரணுக் கருவினை நோக்கி இயங்கக் கூடியது டைனீன் (Dynein) என்கிற புரதம்.

இவ்விதம் மரபணுக்களில் இயல்பாகவே பல்வேறு மூலக்கூறு இயந்திரங்கள் நுண்தொழிற்சாலையே நடத்திக் கொண்டிருக்கின்றன. மருத்துவத் துறையில் இந்த உயிரியல் மூலக்கூறு இயந்திரங்களின் பங்களிப்பு கணிசமாகி வருகிறது. அன்றியும், மூலக்கூறுப் பொறியியல் (Molecular engineering) என்ற நிலை உருவான பிறகு, மூலக்கூறு இயந்திரங்கள் (Molecular robots) பிறக்காமல் இருக்குமா?

அவற்றை உடம்பினுள் செலுத்தினால், அவை புற்றுநோய் செல்களை இனம் கண்டு அழிக்க உதவும். இந்த முறையில், உடலினுள் சிறு செல்களையும் பழுதுநீக்க முடியும். எதிர்காலத்தில் இந்த மரபணு மூலக்கூறின் அசைவுப் பகுதிகளைப் பல்வேறு வழிகளில் பயன்படுத்தலாம். மீநுண் இயந்திர உணரிகள் ஆகவும், மீநுண் இடுக்கிகள் ஆகவும், ரோபோட் தானியங்கிகள் ஆகவும் கையாளும் வாய்ப்பு பிரகாசம் ஆகவுள்ளது.

தவிரவும், உயிரி மூலக்கூறுகளுக்குள் நுழைந்து பார்த்தால் மருத்துவ நுட்பம் பிறக்கும். உயிரி மூலக்கூறுகளையே அவிழ்த்துப் பார்த்தால் பரிணாமத்தின் இரகசியம் புரியும். கரிம அடிப்படையிலான உயிரி மூலக்கூறுகளையே சிலிக்கான் தனிம மின்னணுவியலுடன் இணைத்துப்பார்த்தால் இயந்திரவியல், மின்-இயந்திரவியல் (Mechatronics), உயிரி மின்-இயந்திரவியல் (Bio-mechatronics), சிந்திக்கும் ‘சைபர்னிக்ஸ்’ (Cybernics), செயல்படும் ‘சைபார்க்’ (Cyborg) என்றெல்லாம் புதுப்புதுத் தொழில்நுட்பங்கள் பிறக்கும்.


உள்ளபடியே, இன்று உயிரியலும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தகவல் தொழில்நுட்பவியலும் 'திருமணம்' செய்துகொண்டு புதுப்புது நுட்பங்களைப் பிரசவிக்கத் தொடங்கிவிட்டன.

●

**கட்டுரையாளர்: இந்திய விண்வெளி விஞ்ஞானி, அறிவியல் எழுத்தாளர்.**

# 48வது சென்னை புத்தகக் கண்காட்சியில் கீழைக்காற்று வெளியீட்டகத்தின் புதிய வெளியீடுகள்

**அரங்கு எண்கள்: 454 - 456**





₹ 200/-





₹ 30/-




₹ 30/-




₹ 40/-





₹ 350/-





₹ 200/-

48வது சென்னை புத்தகக் காட்சியில்


## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 230/-




₹ 90/-




₹ 135/-




₹ 220/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

# கலை இலக்கியம் சார்ந்த வழக்குகளைப் பேசும் நூல்

சிகரம் செந்தில்நாதன் அவர்கள் வழக்குரைஞர் மட்டுமல்ல, சிறந்த இலக்கியவாதி. அவர் செயல்பட்ட மக்கள் எழுத்தாளர் சங்கம் மற்றும் முற்போக்கு எழுத்தாளர் சங்கங்களில் எழுத்தாளர்களையும், அவர்களது படைப்புகளையும் அறிமுகம் செய்து கொண்டிருந்தார். புதிய எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கும், புதிய இலக்கியங்களின் ஆக்கத்திற்கும் அவர் தூண்டுகோலாகத் துணை நின்றார்.



உதயை மு.வீரையன்

அவர் 'சிகரம்' என்ற இலக்கிய இதழை நடத்தி வந்த பத்திரிகையாளர். தமது வாழ்க்கையில் மட்டுமல்ல, படைப்புகளிலும் அநீதிகளை எதிர்த்து உரிமைகளுக்காகத் துணிவுடன் போராட வேண்டும் என்று வலியுறுத்தினார். கட்டுரைகள், திறனாய்வுகள், சமய நூல்கள், புதினம் என்று பல துறைகளிலும் அவரது படைப்பாற்றலைக் காணலாம். அவர் இளமை முதலே வாசிக்கவும், எழுதவும் தொடங்கிவிட்டார்.



"
திரைப்பட உலகில்
இயக்குநர் சிகரம்
என்று போற்றப்பட்ட
கே.பாலசந்தரின்
'அபூர்வ ராகங்கள்'
என்ற படம் தொடர்பான
வழக்கினை ஆசிரியர்
நடத்தினார்.
"

அவரது நூல்களில் ஒன்றுதான் 'நீதிமன்றமும் நானும்' என்பதாகும். அவர் எடுத்துக்கொண்ட சில வழக்குகளைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறுகிறார். அதற்கு முன் நீதிமன்றம், நீதிபதிகள், வழக்கறிஞர் அவர்களுடைய சமுதாயக் கடமைகளைப் பற்றியும் கூறுகிறார்.

சமுதாயத்தோடு மிக நெருக்கமாக இருப்பவர்கள் வழக்கறிஞர்கள்தான். இவர்கள் நீதிபதியாக மாறும்போது, சுய கட்டுப்பாடுகள் வந்து விடுகின்றன. என்றாலும் சமுதாயத்திலிருந்து தங்களை முழுவதும் துண்டித்துக் கொண்டு அவர்கள் இருக்க முடியாது. எத்தொழில் சார்ந்தவர்களையும் விட நீதிபதிகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும் சமூகக் கடமை உண்டு என்று ஆசிரியர் நினைவு படுத்துகிறார்.

"சித்தாந்த சைவத்தில் உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு பற்றிப் பேசும் போது, இறைவன் உயிர்களில் ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் இருக்கிறான் என்பார்கள். நீதிபதிகளும் இறைவன் போல்தான். இவர்கள் ஒன்றாகவும், வேறாகவும் இருக்க வேண்டும். அதே சமயத்தில் உடனாகவும் இருந்து இயக்க வேண்டும்..." என்று முன்னுரையில் (ஒரு சொல்) கூறுகிறார்.

நீதியரசர்களுக்கும், இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்பையும் விளக்குகிறார். வேதநாயகம் பிள்ளை தமிழ்நாட்டில் முதல் முன்சீப்பாகத் தேர்வு செய்யப்பட்ட இந்தியர். இவரே தமிழில் முதல் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' எழுதியவர்.

"இந்திய சமூகத்தில் முதலில் விழிப்புணர்வு பெற்றவர்கள் வழக்கறிஞர்கள்தான். இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாறே இதற்குச் சான்றாகும். மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, தமிழ்நாட்டில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அனைவரும் வழக்கறிஞர் தொழிலைச் சார்ந்தவர்களே. வழக்கறிஞர்களுக்கு மிகப் பெரிய சமூகக் கடமை இருக்கிறது. மக்களாட்சியையும், மனிதத்தையும் காப்பது இவர்களின் ஒப்பற்ற பணியாகும்'' என்கிறார் ஆசிரியர் சிகரம் செந்தில்நாதன்.

நீதியரசர் என்.கிருஷ்ணசாமி ரெட்டியார், நீதியரசர் சத்தியதேவ் ஆகிய இருவரைப் பற்றிய சிறப்புகளை முதலில் குறிப்பிடுகிறார். நீதியரசர் கிருஷ்ணசாமி ரெட்டியார் காங்கிரஸ் மீதும், சுதந்திரப் போராட்ட தியாகிகள் மீதும் பற்றுள்ளவர். அவருடைய நீதிமன்றம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். உரத்த குரலில் பேசுவார். அடிக்கடி தமிழில் பேசுவார். கறாராகச் சட்டத்தைப் பார்க்காமல், சமூகச் சூழலை எப்போதும் கணக்கில் எடுத்துக் கொள்வார் என்று ஆசிரியர் அழகாக விவரிக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்ற வரலாற்றில் போற்றுதலுக்கு உரியவராக நீதிபதி சத்தியதேவைக் குறிப்பிடக் காரணம் என்ன? நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அன்று மாலையே அரசு கொடுத்த காரை திரும்ப ஒப்படைத்துவிட்டு, வீட்டிலிருந்து தன் சொந்தக் காரை வரவழைத்து தன் வீட்டிற்குச் சென்றவர். உடனே அரசு பங்களாவையும் காலி செய்து கொடுத்தவர் என்று அவரைப் பாராட்டிக் கூறுகிறார்.

திரைப்பட உலகில் இயக்குநர் சிகரம் என்று போற்றப்பட்ட கே.பாலசந்தரின் 'அபூர்வ ராகங்கள்' என்ற படம் தொடர்பான வழக்கினை ஆசிரியர் நடத்தினார். இந்தப் படத்தின் கதை தன் கதை என்று எழுத்தாளர் என்.ஆர்.தாசன் உரிமை கொண்டாடினார். என்.ஆர்.தாசன் 'காலக்கல்லறை' என்ற சிறுகதை எழுதினார். அக்கதை 1961இல் 'விடிவெள்ளி' என்னும் பத்திரிகையில் வெளிவந்தது.

அதே சிறுகதையை எட்டு ஆண்டுகள் கழித்து நாடகமாக்கி 'வெறும் மண்' என்ற பெயரில்

'கண்ணதாசன்' இதழில் வெளியானது. இந்தக் கதையைத் திருடியே கே.பாலசந்தர் 'அபூர்வ ராகங்கள்' என்ற பெயரில் படமாக எடுத்துள்ளார் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வழக்கு இளம் வழக்கறிஞரான நம் ஆசிரியருக்கு வாய்ப்பாக வந்து கிடைத்தது.


இந்த வழக்கில் இயக்குநர் கே.பாலசந்தர் விரிவாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். 'உச்சநீதிமன்ற வழிகாட்டும் தீர்ப்பின் அடிப்படையில் எழுத்தாளர் என்.ஆர்.தாசனின் காப்புரிமை பாலசந்தரால் மீறப்பட்டிருக்கிறது' என்று தீர்ப்பு கிடைத்தது. இவ்வாறு, 'அபூர்வ ராகங்கள்' திரைப்படம் என்.ஆர்.தாசனின் 'வெறும் மண்' நாடகத்தை காப்பியடித்து எடுக்கப்பட்டதுதான் என்று கூறிய நீதிமன்றம், இழப்பீடாகக் கோரியிருந்த தொகையைப் பொருத்தவரை அக்கோரிக்கை நிரூபிக்கப்படவில்லை என்று தள்ளுபடி செய்தது.

இதேபோல டி.ராஜேந்தர் திரைக்கதை வசனம் எழுதி, இசையமைத்து இயக்கிய திரைப்படம் 'ரயில் பயணங்களில்' என்பதாகும். இந்தப் படம் 28.5.1981இல் வெளியானது. 'ஒருதலை ராகம்' வெற்றிக்குப் பிறகு மிகவும் பேசப்பட்ட இயக்குநர் இவர். அப்படம் வெளியான பிறகு, அப்படத்தைப் பார்த்துவிட்டு அது என் நாடகமான 'பத்து நாள் பந்த'த்தைக் காப்பியடித்து எடுக்கப்பட்ட படம் என்று மணியம் ராஜம் என்ற நாடகாசிரியர் ஆசிரியரிடம் வருகிறார்.

இந்த வழக்கு அவர்களுக்கு வெற்றியாக அமையவில்லை. இந்த நாடகம் புத்தகமாக வந்த நாடகம் அல்ல. மேடையில் நடிக்கப்பட்ட நாடகம். மேடை நாடகத்தை டி.ராஜேந்தர் பார்க்கவில்லை. எழுத்து வடிவத்தை அவரது உதவியாளர் மூலம் பார்த்தார் என்பதே வழக்கு.

அடுத்ததாக புதுமைப்பித்தன் கடிதங்களுக்கான வழக்கு. கவிஞர் இளையபாரதி புதுமைப்பித்தனின் பரம ரசிகர். அவர் புதுமைப்பித்தனைப் பற்றி ஓர் ஆவணப்படம் எடுக்க விரும்பினார். அதனால் புதுமைப்பித்தன் குடும்பத்தோடு நெருக்கமாய் நட்புடன் பழகினார். அப்போது புதுமைப்பித்தன் தன் மனைவி கமலாவிற்கு எழுதிய கடிதங்கள் அவரிடம் இருப்பது தெரிந்தது.

ஆவணப்படம் எடுப்பதற்கு முன், கடிதங்களைத் தொகுத்து வெளியிடலாம் என்று இளையபாரதி




நீதிமன்றமும் நானும் | சிகரம் ச. செந்தில்நாதன்
வெளியீடு: சந்தியா பதிப்பகம் | விலை: ரூ.110/–

நினைத்தார். 'கண்மணி கமலாவுக்கு' என்ற பெயரில் நூலாக வெளியிட, புதுமைப்பித்தனின் மனைவியும் ஒப்புதல் அளித்தார். 1994ஆம் ஆண்டு முதல் பதிப்பு வெளியிடப்பட்டது. மறுபடியும் 2000இல் இரண்டாம் பதிப்பும் வெளியானது. இந்நிலையில் 'காலச்சுவடு' பதிப்பகம் தன்னை திரைமறைவில் நிறுத்திக் கொண்டு, புதுமைப்பித்தன் மகள் தினகரி சொக்கலிங்கத்தை முன்நிறுத்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது.

இந்த வழக்கு இறுதியில் இருதரப்பு பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. 28.8.2021இல் இரு தரப்பார் உடன்படிக்கை அடிப்படையில் நீதிமன்றம் வழக்கை முடித்து வைத்தது. இதனை ஆசிரியர் விரிவாக விவரித்துள்ளார். புதுமைப்பித்தன் படைப்புகள் நாட்டுடைமையாக்க நடந்த முயற்சிகளை எல்லாம் விளக்கியுள்ளார்.

சமுத்திரமும், திலகவதியும் நாடறிந்த எழுத்தாளர்கள். இந்த இரண்டு பேரின் மோதல் நீதிமன்றம் சென்றது. 'போலீஸ் செய்தி' என்ற வாரப் பத்திரிகையில் 6.3.1993 இதழிலும், தொடர்ந்து சில இதழ்களிலும் உயர் காவல் அதிகாரியாகப்

பணியாற்றிய திலகவதியைப் பற்றி எழுதி வந்தார்.

தன் புகழுக்குக் களங்கம் கற்பிக்கப்பட்டு விட்டதாக, திலகவதி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். எழும்பூர் குற்றவியல் நீதிமன்றம் திலகவதியை சமுத்திரம் அவதூறு செய்துவிட்டார் என்ற முடிவுக்கு வந்தது. இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆசிரியர் மேல்முறையீடு செய்தார். இறுதி விசாரணை முடிவதற்குள் சமுத்திரம் விபத்தில் காலமானார்.

எழுத்தாளர் பெருமாள் முருகனின் 'மாதொரு பாகன்' என்ற புதினத்துக்கு எதிராக சாதி மத அமைப்புகள் போராடி, அவரது கருத்துரிமையைப் பறிக்கும் வகையில் 12.1.2015 அன்று ஓர் ஒப்பந்தத்தைப் போட்டன. இந்தக் கட்டாய ஒப்பந்தம் பற்றியும், பெருமாள் முருகன் என்ற எழுத்தாளன் இறந்து விட்டான் என்று அவர் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த அறிவிப்பைக் கண்டு எண்ணற்ற எழுத்தாளர்களைப் போலவே ஆசிரியர் செந்தில்நாதனும் அதிர்ந்து போனார். பொதுநல வழக்கினைத் தாக்கல் செய்தார். தலைமை நீதிபதி புஷ்பா சத்தியநாராயணா அடங்கிய அமர்வு 5.7.2016இல் தீர்ப்பளித்தது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அமைதிப் பேச்சின் முடிவு ரத்து செய்யப்பட்டது.

மறைமலை அடிகளாரின் இயக்கத்தை இன்று தமிழ்நாட்டில் தொடர்பவர் யார்? இந்தக் கேள்விக்கு விடையாய் வந்து எதிரே நிற்பவர் சத்தியவேல் முருகனார் தான். பிராமணியப் பிடியில் சிக்கி முடங்கும் தமிழ்ச் சைவத்தை மீட்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்; போராட்டக் களத்தில் நிற்கிறார் என்று ஆசிரியர் செந்தில்நாதன் கூறுகிறார்.

அவருக்காக பல வழக்குகளை ஏற்று நடத்தியுள்ளார். சத்தியவேல் முருகனாரை குறி வைக்கும் நோக்கம் அவர் தமிழ் வழிபாட்டையும், அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைப்பதால்தான். அதற்காகவே, ஆசிரியரும் அவரோடு நிற்கிறார்.

நீதிமன்றத்தைப் பற்றிய அனைவரும் அறிய வேண்டிய பல செய்திகளை, 'முன்னோட்டமாய் சில சொற்கள்' என்னும் தலைப்பில் அழகாக நிறைவாக எடுத்துத் தருகிறார். சென்னை உயர்நீதிமன்றம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது தெரியுமா? 1862ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று ஆரம்பிக்கப்பட்டது. ஒரு தலைமை நீதிபதி மற்றும் 5 நீதிபதிகளுடன் உயர்நீதிமன்றம் செயல்பட ஆரம்பித்தது. நீதிபதிகள் எல்லாம் வெள்ளைக்காரர்கள்; இங்கிலாந்தில் படித்து இங்கே வந்தவர்கள்.

"என்னுடைய நீதிமன்ற அனுபவங்களைத் தொகுத்து எழுத வேண்டும் என்று பல நண்பர்கள் கேட்டார்கள். அந்தக் கோரிக்கையின் விளைவுதான் இந்த நூல். இதை முதல் தொகுப்பாகக் கொள்ள வேண்டும்" என்று ஆசிரியர் கூறுகிறார்.

கலை இலக்கியம் சார்ந்த வழக்குகளே இதில் மிகுதியும் பேசப்பட்டுள்ளன. மறைந்த நீதிபதிகளைப் பற்றி மட்டுமே அவர் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார். உயிரோடு இருப்பவர்களைப் பற்றி எழுதுவது சரியாக இருக்காது என்று அவர் எண்ணுகிறார். என்றாலும் அவரது இதர அனுபவங்களைத் தொகுத்து எழுதுவது காலத்தின் கட்டாயமாக இருக்கும்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**


**புத்தகங்கள் அச்சிட**

**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**

**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

# சிந்தன் புக்ஸ்


# இடதுசாரி முற்போக்கு நூல்கள் அனைத்தும் ஓர் இடத்தில்...

## சிந்தன் புக்ஸ்


327/1, திவான் சாகிப் தோட்டம், டி.டி.கே. சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
கைபேசி: 9445123164
Email: kmcomrade@gmail.com

48வது சென்னை புத்தகக் காட்சியில்


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 265/-




₹ 90/-




₹ 100/-




₹ 150/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



கட்டுரை

# சிங்கப்பூர்த் தமிழ் நூல்களின் தோற்றமும் வளர்ச்சியும்



புதுமைத்தேனீ மா.அன்பழகன்
சிங்கப்பூர்

*200 ஆண்டுகால வரலாற்றைக்கொண்ட சிங்கப்பூர் ஒரு மிகச் சிறிய தீவு நாடு. வணிக நோக்கத்தோடும், கிழக்கிந்திய கம்பெனியின் ஆணைகளை ஏற்றுச் செயல்படுத்தும் திட்டத்தோடும் 1819ல் கவர்னர் ஸ்டாம்ப்போர்டு ராபிள்ஸ் அவர்கள் நாராயண பிள்ளை எனும் ஒருவரின் தலைமையிலான தமிழர்களையும், பிற நாட்டுப் பிரதிநிதிகளையும் ஒரு கப்பல் நிறைய அழைத்துக்கொண்டு பினாங்கிலிருந்து மீன்பிடிக் கிராமமாக இருந்த சிங்கப்பூருக்கு வந்தடைந்ததிலிருந்துதான் சிங்கப்பூர் வரலாறு தொடங்குகிறது. அதிலிருந்து சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நூல் வடிவங்களிலான படைப்புகள் தமிழில் உருவாகத் தொடங்கின.*

*1868ல் சி.வெ. நாராயணசாமி நாயகரால் எழுதப்பட்ட 'நன்னெறித் தங்கம் பாட்டு' என்ற நூல்தான் எமக்குக் கிடைத்த சிங்கப்பூர்த் தமிழ் முதல் நூல் என்று தெரிகிறது. 1872ல் மகதூம் சாயுபு அவர்களால் எழுதப்பட்ட 'முனாஜத் திரட்டு' என்ற கவிதை நூல் தமது அச்சகத்திலேயே பதிப்பித்து வெளியிட்டுள்ளதற்கானச் சான்று கிடைத்துள்ளது. அதன் பிறகு 1887ல் இலங்கை சி. ந. சதாசிவப் பண்டிதரால் இயற்றப்பட்ட 'சிங்கைநகர் அந்தாதி' என்ற நூல் அறிமுகம் கண்டது. இம்மூன்று நூல்கள்தான் சிங்கை மக்களால் முன்னோடி நூல்களாகக் கருதப்பட்டு வருகின்றன.*

சாயுபு அவர்களைத் தொடர்ந்து அவர் அச்சகத்தில், ஷேக் காதிறு ஜெயனுதீனின் 'ரத்தினச் சுருக்கம்', முகியித்தீன் அப்துல் காதரின் 'சந்தக்கும்மி' நெல்லையப்பச் செட்டியாரின் 'சிங்கை வடிவேலவர் ஸ்தோத்திரம்', செவத்த மரைக்காயரின் 'மலாக்காப் பிரவேச திரட்டு', மீரா சாகிப்பின் 'பாயாலேபர் பங்களாவின் அலங்காரச் சிந்து', மெய்யப்பச் செட்டியாரின் 'சிங்கப்பூர்ப் பிரபந்தத் திரட்டு', க. வேலுப்பிள்ளையின் 'சிங்கை முருகேசப் பதிகம்' போன்ற நூல்கள் வெளிவந்திருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலும், உலகப்போர்க் காலங்களிலும் சற்றுத் தொய்வாக இருந்த இலக்கிய வளர்ச்சி, பின்னர் பாரதியின் தேசிய விடுதலைப் பாடல்களின் பாதிப்பு, தந்தை பெரியார் வருகையின் தாக்கம், சிங்கப்பூரில் நேதாஜி முன்னெடுத்த இந்திய தேசிய இராணுவ உணர்வு ஆகியவற்றால், தேசியப்பற்று, பகுத்தறிவு, சீர்திருத்தக் கருத்துக்களால் உந்தப்பட்ட எழுத்தாளர்கள் உயிர்ப்புடன் வீறுகொண்டு தமிழ்ப் படைப்புகளைப் பெரிதும் வெளிக்கொண்டு வரத் தொடங்கினர்.

1893ல் வெளிவந்து மக்களால் பெரிதும் பேசப்பட்ட, அரங்கசாமி தாசனின் 'குதிரைப்பந்தய லாவணி' என்ற நூலைப் போலவே பின்னாளில் வெளிவந்த 'வழிநடைச் சிந்து' எனும் நூல் சிங்கப்பூர் வாழ்க்கைச் சூழலைப் பிரதிபலிக்கும் நூலாக அமைந்தது. தமிழவேள் கோ. சாரங்கபாணி 1924ல் சிங்கை வருகைக்குப் பின் தமிழிலக்கிய உலகுக்கும் நாளிதழ்களுக்கும் புத்தெழுச்சி ஏற்பட்டன. அவரைத் தொடர்ந்து தமிழகத்திலிருந்து வந்த வை. திருநாவுக்கரசு தமிழ் இலக்கிய உலகுக்கு நெருக்கமானவராகி, அரசாங்கத்துக்கும் படைப்பாளர்களுக்கும் ஒரு பாலமாகச் செயல்பட்டு இலக்கியச் சேவை புரிந்தார்.

1930ல் யாழ்ப்பாணம் வல்வை சின்னையா என்பவரின் 'நவரச கதாமஞ்சரி' என்ற கதைத்தொகுப்பு, சிறுகதைகளுக்கு முன்னோடியாக விளங்கியது. 1935 வாக்கில் சமயச் சார்பான இலக்கியங்கள் குறைந்து, சமுதாயச் சிந்தனைப் படைப்புகள் தோன்ற ஆரம்பித்தன.

1940க்கு முன் தமிழகக் கலாசாரத்தை ஒட்டி எழுதிவந்த எழுத்தாளர்கள், சிங்கை மக்களின் வாழ்வியலுக்கு ஏற்ப எழுதும் பழக்கத்தைப் பின்பற்றத் தொடங்கினார்கள். அந்தக் காலத்தில் மிகச் சிறந்த எழுத்தாளர் ந. பழனிவேலு, தெ.வே. வைத்தியலிங்கம், சிங்கை முகிலன் எம் ஆறுமுகம், வை. இராஜரத்தினம், போன்றோரின் படைப்புகள் சீர்திருத்த உணர்வோடும், துடிப்போடும் விளங்கின.

1950க்கும் பிறகு நாடக நூல்கள் 'சுகணசுந்தரம்', 'கௌரிசங்கர்' போன்ற நூல்கள் வெளியாயின. மூன்று பெரிய இனங்களான சீன, மலாய், இந்தியர் கூடி வாழ்ந்ததால் சிங்கப்பூரில் ஏற்பட்ட காதல், கலப்புத் திருமணங்களால் எதிர்நோக்கிய பிரச்சினைகளை வைத்து திருமதி இராஜாம்பாள் எழுதிய 'விஜயாள் ஒரு அனாதை' என்ற கதை, புதிய சமூகச் சிந்தனையை மக்களிடையே எழுப்பியது. அதன் பிறகு சமுதாயத்தில் சொல்லப்படவேண்டிய புரட்சிக் கருத்துக்களான, சாதி ஒழிப்பு, கைம்பெண் மணம், பிராமண எதிர்ப்பு, இதிகாச எதிர்ப்பு, ஆங்கிலேய, ஜப்பானிய ஆட்சிகளின் அடக்குமுறை, தோட்டத்தொழில் போன்ற கருப்பொருள்களைக்கொண்டு படைப்புகள் வெளிவரத் தொடங்கின.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அ.சி. சுப்பையா உருவாக்கி, சிங்கை வந்தபோது தந்தை பெரியாரிடம் கொடுத்தார். அதை அவர் தமிழக முதல்வராயிருந்த எம்ஜியாரிடம் பரிந்துரைத்ததன் பயனாய் நடைமுறைப்படுத்தப்பட்டதுதான் தற்சமயம் நாம் கையாளும் எழுத்துநடை. அத்தகைய மொழியறிஞர் சுப்பையா 1948ல் 'சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ்' என்ற புராணத்திற்கு எதிரான புரட்சிப் படைப்பை வெளியிட்டார். அது பின்னர் அரசால் தடை செய்யப்பட்டது. அந்தக் காலத்தில் ரெ. சீனிவாசன், ந. தேவராசன், மெ. சிதம்பரம், அ. முருகையன், தி. செல்வகணபதி, ஆர். வெற்றிவேலு, ரா. நாகையா, எம். கே. துரைசிங்கம், பா. சண்முகம் போன்றோரின் படைப்புகள் பேசப்பட்டன.

இடைப்பட்டக் காலத்தில், பல நூல்களை எழுதிப் புகழ்பெற்ற சே. வெ. சண்முகத்தின் 'தமிழச்சியா' தொடர்கதையும், பக்ருதீன் சாகிப்பின் 'கதீஜாவின் காதல்' நூலும், மா. பக்கிரிசாமியின் 'அந்துவா' படைப்பும் மக்களால் பாராட்டப்பட்டன. ஏ.பி.இராமனின் கலைமலர், எஸ் ஏ நாதனின் இந்தியன் மூவி நியூஸ், முதலிய திரைப்பட இதழ்களும் வெளிவந்தன. பெருங்கவிஞர்களான ஐ. உலகநாதன், முல்லைவாணன், பரணன், முத்தமிழன் போன்றோரின் படைப்புகள் பல வெளிவந்துள்ளன. இவர்களின் தாக்கங்களால் கவிஞர்கள் உருவாகிப் பல படைப்புகளை

எழுதினர். தமிழாசிரியர் மு. தங்கராசன் 22 நூல்களையும், கவிஞர் இக்பால் 17 நூல்களையும் படைத்துச் சிங்கை தமிழ் இலக்கிய உலகுக்குப் பெரிதும் பங்களித்துள்ளனர்.

இன்றும் வாழ்ந்து வரும் புதுமைதாசன் எனும் பி. கிருஷ்ணன் 10 வானொலி நாடகங்கள் உள்பட மொத்தம் 22 நூல்களைப் படைத்திருக்கிறார். மக்களால் போற்றப்பட்ட 'அடுத்த வீட்டு அண்ணாசாமி', 'விலங்குப் பண்ணை' போன்ற நூல்களை வெளியிட்டதோடு, ஷேக்ஸ்பியரின் 9 நாடகங்களை மொழிபெயர்த்துத் தமிழில் தந்த பெருமைகளுக்குச் சொந்தக்காரர். எஸ். எஸ். சர்மா, பி. பி. காந்தம், ஆ. பழனியப்பன் போன்றோர் பல மொழிபெயர்ப்புகளைச் செய்து நூல்களையும் படைத்திருக்கின்றனர். 13 மொழிகளைத் தெரிந்த பன்மொழித் தமிழன் முத்தழகு மெய்யப்பன் ஆத்திசூடியைப் பிற மொழிகளில் மொழிமாற்றம் செய்திருக்கிறார்.

1965ல் சிங்கப்பூர் தனி நாடாகியது. கடந்த 50 ஆண்டுகளில் சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பாளிகள் அதிகமானோர் தங்கள் படைப்புகளை வாரந்தோறும் வெளியிடத் தொடங்கினர். கவிஞர் முருகடியான், மா. இளங்கண்ணன், ச. வரதன், தனித்தமிழ்ப் பற்றாளர் பாத்தேறல் இளமாறன், புகழ்பெற்ற 'துயரப்பாதை' எனும் நாவலை 1978ல் எழுதிய கவிஞர் கா. பெருமாள், உணர்ச்சிக் கவிஞர் அமலதாசன், நா. ஆண்டியப்பன், ஜமீலா, ரஜீத் யூசூப் ராவுத்தர், ஷாநவாஸ், மலர்மாணிக்கம், வெண்பாச் சிற்பி இக்குவனம், பெரி. நீல. பழநிவேலன், கவிஞர் திருவேங்கடம், பாத்தூறல் முத்து மாணிக்கம், மு. அ. மசூது, வீ. சுதர்மன், மற்றும் பெண் எழுத்தாளர்களான பார்வதி பூபாலன், நூர்ஜகான் சுலைமான், சூரிய ரத்னா, லதா, கவிஞர் இன்பா, ஆய்வு நூல்களை எழுதும் எம்.எஸ். சிரீலட்சுமி, பல புத்தகங்களைத் தானும் எழுதியதோடு பலருடைய நூல்களையும் வெளியிட உதவிய பாலு மணிமாறன் போன்றோர் எண்ணிலடங்கும் படைப்புகளை சிங்கைக்கு நல்கியுள்ளனர்.

செ.ப. பன்னீர்செல்வம் தமிழர்களின் வரலாறுகளை ஆதாரமாகக் கொண்டு நூல்களைப் படைத்திருக்கிறார். தமிழாசிரியர் பொன் சுந்தரராசு 'தெமாசிக்', 'சுண்ணாம்பு அரிசி' போன்ற 19 நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இராம. கண்ணபிரான் சிறுகதை, கட்டுரை என 14 நூல்கள் படைத்துள்ளார். 'பீடம்' புதினத்தின் ஆசிரியரான அவர் தமிழ் இலக்கியவாதிகளுக்கு ஒரு முன்னோடியாக விளங்குபவர். மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் கமலாதேவி அரவிந்தன் தமிழிலும் 'நுவல்' போன்ற பல நூல்களை எழுதிக்கொண்டு வருபவர்.

பேராசிரியர் தமிழறிஞர் சுப. திண்ணப்பனார் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக்கொண்டே ஏராளமான தமிழ்ப் படைப்பாளர்களை உருவாக்கியவர். எழுத்தாளர்களுக்கு அணிந்துரைகளைத் தந்து ஊக்கப்படுத்தியவர். கட்டுரை, ஆய்வு நூல்களைத் தனியாகவும் இணைந்தும் தொகுத்தளித்தவர். முன்னாள் அதிபர் எஸ். ஆர். நாதன் அவர்கள் 'உழைப்பின் உயர்வு' என்ற தன் சுயசரிதையை நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். அதேபோல் அம்பாசிடர் கே. கேசவபாணி அவர்களும் 'தோட்டப் புறத்திலிருந்து தூதரகம் வரை' என்ற தம் சுய சரிதையை எழுதி சிங்கப்பூர் வரலாறுகளைப் பதிவு செய்திருக்கிறார். அத்துடன் அவர் 'நாகப்பட்டினம் முதல் சுவர்ணபுரிவரை" என்ற தமிழர்களின் சிங்கை வருகையைப் பதிவு செய்து நூலாகத் தொகுத்தளித்திருக்கிறார். தமிழாசிரியர் ப. கேசவன் பல நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் அவர் எழுதிய 'எளிய தமிழில் இனிய இலக்கணம்' என்ற நூல் சிறந்த நூலெனத் தமிழக அரசு தேர்வுசெய்து பரிசளித்திருக்கிறது.

சிங்கையிலேயே பிறந்து வளர்ந்து மறைந்த எம்.கே. நாராயணன் வானொலியின் தலைவராகப் பணியாற்றிய போது மகாபாரதக் கதையை நாடகமாக்கியவர். மர்மக்கதை மன்னர் என்றழைக்கப்படும் அவர், நாட்டின் தந்தை லீ குவான் யூவின் வாழ்க்கை வரலாற்று நூலையும், சிங்கப்பூர் இந்தியர்கள் வரலாற்று நூலையும் எழுதியவர். தமிழர்களை ஆவணப்படுத்தி 'இருநூற்றுவர்' என்ற இரு பாகங்களை இளையர் மன்றத் தலைவர் முனைவர் அ. வீரமணி, வெளியிட்டுள்ளார். 'வானம் வசப்படும்' எனும் தன்முனைப்புத் தொகுப்பு நூல் மூலம் உலகத் தலைவர்களைச் சிங்கைக்குக் கொண்டுவந்து சேர்த்தார் அழகியபாண்டியன்.

தமிழகத்திலிருந்து குடிபெயர்ந்து சிங்கப்பூரில் நிரந்தரவாசம் பெற்றவர்களின் இலக்கியப் பங்களிப்புக் குறிப்பிடத்தக்க, பெரிய அளவில் இருந்து வருகின்றன. உதாரணமாகக் கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோ 30 கவிதை, கட்டுரை நூல்களைப் படைத்துள்ளார்.

கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் ஊக்கப்படுத்தும் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தைப் போல் கவிமாலை என்ற அமைப்பும் 160க்கும் அதிகமான நூல்களைச் சிங்கப்பூரில் வெளியிட்டுக் கொடுத்துச் சாதனை புரிந்திருக்கிறது. அதற்கு மூல காரணமாக இருந்தவரும் அதன் காப்பாளருமான மா. அன்பழகன் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை என 38 புத்தகங்களை யாத்துச் சிங்கை இலக்கிய உலகுக்குப் பங்களித்திருக்கிறார். கதை, கட்டுரை, மொழிபெயர்ப்புகளைக் கொண்ட 26 நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார் ஜெயந்தி சங்கர்.

சிங்கப்பூரில் பதிப்பகம் என்று பெரிதாக இல்லை. அதற்குக் காரணம் அச்சடிக்கும் செலவினம் அதிகம் என்பதே. படைப்பாளர்கள், சிங்கையில் ஆகும் செலவில், பாதி விலையில் மலேசியாவிலும், அதில் பாதி செலவில் தமிழகத்திலும் அச்சாக்கிக் கொண்டு வந்துவிடுகின்றனர். எல்லோரும் பதிப்பகம் என்ற ஒரு பெயரை உருவாக்கிக்கொள்கின்றனரே தவிர தொழில் முறையான பதிப்பகங்கள் இங்கு இல்லை.

சிங்கப்பூரில் அரசின் ஆதரவுபெற்ற அமைப்பானத் தேசிய கலைகள் மன்றத்திடம் படைப்பாளர்கள் தங்கள் நூல்களை அச்சிடப் பொருளுதவி கோரலாம். வெளியிட உகந்தது என்று கருதினால் நிதி ஆதரவு தருகிறார்கள். அத்துடன் சிங்கப்பூர் தேசிய நூலக வாரியம் சிங்கப்பூர் எழுத்தாளர்கள் படைத்த நூல்களை விலைக்கு வாங்கி 26 பொது நூலகங்களிலும், 3 பிராந்திய நூலகங்களிலும் வைத்து, பொதுமக்கள் இரவல் வாங்கிப் படிக்க வழியமைத்திருக்கிறார்கள். அத்துடன் நூல் வெளியீடுகளையும் நடத்திக்கொள்ள இலவசமாக இடம் கொடுத்துப் பேருதவி செய்து வருகிறது. எங்கள் நூலகத்தைப் பார்த்துத்தான் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம் கட்டப்பட்டது.

இன்று சிங்கப்பூரைப் பொருத்தவரை தமிழ்முரசு நாளிதழ் மட்டுமே இருக்கிறது. திங்களிதழ்களாக மக்கள்மனம், சிராங்கூன் டைம்ஸ் இதழ்களும் இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வருகின்றன.

2024ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மொத்தம் 6 மில்லியன் மக்கள் வாழும் நாடு சிங்கப்பூர். சீனர்கள் 76, மலாய்க்காரர்கள் 15, இந்தியர்கள் 8 விழுக்காட்டினர் இருப்பதாக கணக்கிடுகிறார்கள்.

சிங்கப்பூரில் ஆட்சிமொழியாகப் பூர்வீக மொழியாகிய மலாய் மொழியை வைத்திருந்தாலும் அரசு அதிகாரத்துவ மொழிகளாக ஆங்கிலம், சீனம், மலாய், மற்றும் தமிழ்மொழியை அங்கீகரித்துள்ளது. எந்த அரசு அலுவலகத்திலும் நம் தாய்மொழியில் கேள்விகள் கேட்கலாம். ஐயங்களைத் தீர்த்துக்கொள்ளலாம்.

இந்த நாட்டின் தந்தை என்று போற்றப்படும் மறைந்த லீ குவான் யூ அவர்கள். நாடு விடுதலை பெற்ற பின்பு இந்த நாட்டின் உருவாக்கத்திற்கு அவர் பாடுபட்டபோது அவருக்கு வலது கரமாய் நின்று உதவியவர்கள் தமிழர்கள் என்பதால் எப்போதுமே அவருக்கும் அவருடைய மகன் அண்மையில் ஓய்வுபெற்ற பிரதமர் லீ சியன் லூங்கும் நம் தமிழர்கள் மீது தனிக் கவனம் செலுத்தும் குணமுடையவர்கள். அதனால் நமக்குரிய பிரதிநிதித்துவத்தைவிட அதிகமாகவே எல்லா துறைகளிலும் தந்து வருகிறார்கள்.

அவரவர் தாய் மொழியை இரண்டாம் மொழியாகத் தேர்வுசெய்து படியுங்கள் என்று அரசு அறிவுறுத்துகிறது. நான்கு மொழிகளுக்கும் சம அளவில் பங்களிப்பைத் தருகிறார்கள். சிறந்த தமிழ்ப் படைப்புகளுக்குப் புத்தக மேம்பாட்டு கழகத்தால் கவிதை, கட்டுரை, புதினம், புதினம் அல்லாதவை, மொழிபெயர்ப்பு என ஐந்து துறைகளுக்கு விருதுகளைத் தந்து ஊக்கம் அளிக்கிறது. அத்துடன் அரசின் தேசியக் கலைகள் மன்றம் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நிமித்தமாகச் சிறுகதைகளுக்கும் கவிதைகளுக்கும் போட்டி வைத்துத் 'தங்கமுனை' என்ற பெயரில் மதிப்புமிக்க விருதுகளை வழங்குகிறது. சிங்கப்பூரில் உள்ள 50 தமிழ் அமைப்புகளும் ஏராளமான பரிசுகளைப் படைப்பாளர்களுக்குக் கொடுக்கிறார்கள். இருந்தாலும் சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்தவர்களின் படைப்புகள் பெரிய அளவில் வரவில்லையே என்ற ஏக்கம் எல்லோரிடமும் இருந்து வருகிறது.

●

**கட்டுரையாளர்: கவிஞர், எழுத்தாளர். சிங்கப்பூர்க் கவிமாலை அமைப்பின் காப்பாளர். துணைத் தலைவர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்.**



# மூன்று பெண்களும் கதைகளும்



சுப்பிரமணி இரமேஷ்

1

கவிதை, புனைகதை, கட்டுரை, கலை வரலாறு, மொழிபெயர்ப்பு எனப் பல தடங்களில் தொடர்ந்து இயங்கி வருபவர் எழுத்தாளர் தேன்மொழி. கவிதை, புனைகதை ஆகிய இரு இலக்கிய வகைமைகளுக்கும் வேறுபாட்டை உருவாக்குவதில் மொழி முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த வேறுபாட்டை அழித்தொழிக்கும் வேலையைத் தேன்மொழி தொடர்ச்சியாகத் தம் புனைவுகளினூடாகச் செய்து வருகிறார். இவர், ‘கூனல் பிறை’, ‘நெற்குஞ்சம்’, ‘பேச்சி மரம்’ ஆகிய சிறுகதைத் தொகுப்புகளைத் தொடர்ந்து ‘அணுக்கி’ (2022) என்றொரு நாவல் எழுதியுள்ளார். இந்தப் புனைவிலும் இத்தன்மையைக் காணலாம். ‘அணுக்கி’ என்ற சொல் கலிங்கத்துப்பரணியில்தான் முதன்முதலில் இடம்பெற்றுள்ளதாகத் தமிழ்ப் பேரகராதி கூறுகிறது. ‘அணுக்கி மாரு மநேக ரிருக்கவே’ (308) என்று ஜெயங்கொண்டார் எழுதியிருக்கிறார். அணுக்கியர் என்பதற்கு, ‘அருகிலிருந்து குற்றேவல் செய்யும் அழகிய

பெண்கள்' என்று உரை எழுதியிருக்கின்றனர். இதன் ஆண்பாலாக 'அணுக்கன்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தஞ்சை பெரிய கோயிலின் வடமேற்குப் பகுதியிலுள்ள வாயிலுக்கு 'அணுக்கன் திருவாயில்' என்றும் திருவாரூர் தியாகராசர் கோயிலின் கீழைக் கோபுர வாயிலுக்கு 'அணுக்கி வாயில்' என்றும் வழங்கப்படுகிறது. நவீன இலக்கியங்களில் 'அணுக்கம்' என்ற சொல் இயல்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. 'அணுக்கி' என்ற சொல்லுக்குப் பின்னே பெரும் வரலாற்றுத் தரவுகள் மறைந்துள்ளன. அதனைப் பின்தொடர்வது இக்கட்டுரையின் நோக்கமன்று.

தேன்மொழி ஒரு வரலாற்று ஆய்வாளர். கோயில் வரலாறு தொடர்பாக இவர் எழுதியுள்ள நூல்களே இதற்குச் சான்று. இந்நாவலும் பெரும் வரலாற்றுத் தரவுகளுடன் எழுதப்பட்டுள்ளது. மேலும், தொன்மத்தையும் சமகால வரலாற்றையும் ஒரு புள்ளியில் இணைத்திருக்கிறார். திருவாரூரின் ஒட்டுமொத்த வரலாற்றையும் இந்நாவலில் அடைத்துள்ளார். தேன்மொழிக்கென்று ஓர் அரசியல் பார்வை இருக்கிறது. அந்தப் பார்வையை இப்புனைவில் ஒட்டுமொத்தமாக வெளிப்படுத்தியுள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களின் மறைக்கப்பட்ட வரலாற்றுடன் பெண்ணியத்தையும் இணைத்துப் பேசியுள்ளார். இந்நாவலில் இடம்பெற்றுள்ள தொன்மம் சார்ந்த கதையாடல்கள் குறித்து விரிவாகப் பேசுவதற்கான வெளியைப் பிரதி கொண்டிருக்கிறது. மங்களமாத்தா, முல்லை, சித்திரப்பாவை ஆகிய மூன்று பெண்களின் கதைதான் 'அணுக்கி' என்றும் மிகச் சுருக்கமாகச் சொல்லிவிட முடியும். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த இம்மூவரும் இச்சமூகத்தில் எத்தகைய ஊடாட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தனித்தனியே உரையாடுவதற்கான களத்தையும் நாவல் கொண்டிருக்கிறது. இம்மூவரின் கதையும் புனைவின் இறுதியில் ஓரிழையில் இணைந்திருக்கின்றன. இந்நாவலின் கதைநிலம், பிலாவடிமூலை என்ற கிராமம். திருவாரூரை ஒட்டிய பகுதி. திருவாரூர் ஒரு தொன்ம தலம். தேன்மொழி, அதில் ஒரு தொன்மத்தை எடுத்துக்கொண்டு அதனை நிகழ்காலத்திற்குப் பொருத்தி, புனைவாக எழுதியிருக்கிறார் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது. இந்தத் தொன்மக் கதையினூடாகவும் நாவலின் ஒட்டுமொத்த இயக்கத்தையும் உள்வாங்கிக்கொள்ள இயலும்.

சோழநாட்டின் ஒரு பகுதி திருவாரூர். இந்தப் பகுதியை ஒரு காலத்தில் மனுநீதிசோழன் ஆட்சி செய்ததாகக் கருதப்படுகிறது. இவனைப் புராணகாலச் சோழன் என்றே அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் இச்சோழனைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள தொன்மக்கதை இக்கால ஆட்சியாளர்களுக்குச் சவால் விடக் கூடியது; சமகால அரசியலுடன் பொருத்தி விவாதிக்கத் தகுந்தது. நீதி தவறாது ஆட்சி செய்தவன் மனுநீதிசோழன். தன் நாட்டிலுள்ள எல்லா உயிர்களையும் சமமாகக் கருதியவன். இறை அருளால் பிறந்த தன் மகனுக்கு, திருவாரூர் கோயிலில் உறையும் தெய்வத்தின் பெயராகிய வீதிவிடங்கன் என்ற பெயரைச் சூட்டுகிறான். ஆராய்ச்சி மணியை அரண்மனை முற்றத்தில் கட்டி, மன்னனுக்கும் மக்களுக்குமான இடைவெளியைக் குறைக்கிறான். வீதிவிடங்கனும் மனுநீதி சோழனின் மனம் அறிந்து நடந்து கொள்கிறான். ஒருநாள் வீதிவிடங்கன் ஓட்டிச்சென்ற தேரின் சக்கரத்தில் ஒரு பசுங்கன்று தவறுதலாக மாட்டிக்கொண்டு இறந்து விடுகிறது. பசுவிற்கு நீதி கிடைக்கவும் கன்றை இழந்த தாய்ப்பசுவின் துயரத்தை ஒரு தந்தையாகத் தான் அனுபவிக்கவும் தன் மகனையே தேர்க்காலில் இட்டுக் கொல்கிறான் மனுநீதிசோழன். இறை அருளால் வீதிவிடங்கன் மீண்டும் உயிர் பெறுகிறான். இது தொன்மக் கதை. இன்றும் மனுநீதிசோழன் நினைவு கூரப்படுவதற்கு அவன் செய்த இச்செயல்தான் காரணம்.

தேன்மொழி மனுநீதிசோழன் தொன்மத்தை நிகழ்காலத்துடன் பொருத்தி உரையாடியிருக்கிறார். இந்நாவலில் வரும் முல்லை, கணவனை இழந்தவள். இவளுடைய ஒரே மகன் ஆதன். நல்லவன். பன்னிரண்டாம் வகுப்பின் நிறைவில் அவனைவிட வயதில் மூத்த சில நண்பர்களுடன் சேர்ந்து ஒரு பெண்ணின் வன்புணர்வில் பங்கெடுத்து விடுகிறான். அவனது நண்பர்கள் யார்? ஆதன் எப்படி அவர்களுடன் சேர்ந்தான்? இதுபோன்ற இழிவான செயலை அவன் எப்படி செய்யத் துணிந்தான் என்பது போன்ற கேள்விகளுக்கு நாவல் போதிய தரவுகளைத் தரவில்லை. வாசகர்களின் அனுமானத்திற்கே விட்டுவிடுகிறது. இச்செயலுக்கு முன்பு ஆதன் சிறு தவறையும் செய்ததாகப் பிரதி நினைவுகூரவில்லை. இனியன், மகிழ்நன் போன்று ஆதனின் கதாபாத்திரத்திற்குப் பிரதி முக்கியத்துவம் தரவில்லை. இந்த இடத்தில் ஆதனை வீதிவிடங்கனாகவும் முல்லையை மனுநீதிசோழனாகவும் பிரதி கட்டமைக்கிறது. இந்தியாவை உலுக்கிய நிர்பயாவின் வன்புணர்வும்

அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த அவளது மரணமும்தான் தேன்மொழி இந்தத் தொன்மத்தைக் கையில் எடுக்க காரணமாக இருந்திருக்கிறது. நிர்பயாவைப் போன்று பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரையுமே தேன்மொழி இப்புனைவுக்குள் நினைவு கூர்ந்திருக்கிறார். வீதிவிடங்கனுக்குத் தெரியாமல்தான் கன்றின் மரணம் நிகழ்ந்துவிடுகிறது. ஆதனும் தெரியாமல் செய்துவிட்டதாகத்தான் சொல்கிறான். ஆனாலும் தான் செய்தது தவறு என்ற புரிதல் வீதிவிடங்கனைப் போன்று ஆதனுக்கும் இருக்கிறது. அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்ள ஆதனும் தயாராகவே இருக்கிறான். பதினெட்டு வயது பூர்த்தியாகாத ஆதனுக்குச் சார்பாகச் சட்டம் இருக்கிறது. சிறு தண்டனையுடன் அவன் தப்பித்துவிடவும் வாய்ப்பிருக்கிறது. இங்குதான் முல்லை மனுநீதிசோழனைப் போன்று செயல்படுகிறாள்.

தேன்மொழி, மனுநீதிசோழனின் நிகழ்கால வடிவமாக முல்லையை நிறுத்துகிறார். முல்லை, பி.ஏ. படித்தவள். அறம் அறிந்தவள். முல்லைக்குத் தன்னுடைய மகனை எப்படியெல்லாம் வளர்க்க வேண்டும் என்று ஒரு கனவு இருந்தது. அந்தக் கனவு நொடிந்து வீழ்ந்ததை அவள் வருத்தத்துடன் ஏற்றுக் கொள்கிறாள். மகனை நன்றாக வளர்க்கவில்லை என்ற குற்றவுணர்வு முல்லையைத் துன்புறுத்துகிறது. ஒரு பெண்ணாக இன்னொரு பெண்ணின் துயரத்தை நினைத்துப் பார்க்கிறாள். ஆதனது இந்த இழிசெயலுக்குத் தானும் பொறுப்பேற்பதுதான் சரியாக இருக்கும் என்று கருதுகிறாள். இந்த இடத்தில் மனுநீதிசோழனும் ஏற்கெனவே அப்படித்தான் இருந்திருக்கிறான் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். மகனைத் தண்டிக்காவிட்டால் நான் நீதி தவறிய மன்னனாவேன். இந்த அவப்பெயருடன் நான் உயிர்வாழ விரும்பவில்லை. என் உயிரை நானே மாய்த்துக் கொள்வேன் என்று அமைச்சர்கள் மத்தியில் ஆவேசமாகப் பேசுகிறான். அமைச்சர்கள் வீதிவிடங்கனைக் கொலைசெய்ய மறுக்கிறார்கள். ஏனெனில் அவன் பக்கமும் நியாயம் இருக்கிறது. மன்னன் உணர்ச்சிக் கொந்தளிப்பில் இந்த முடிவை எடுத்திருக்கிறான் என்பது அமைச்சர்களுக்குப் புரிகிறது. அதனால்தான் நானே அவனைக் கொல்வேன் என்று மனுநீதிசோழன் தேரேறுகிறான்.

முல்லை ஆதனுடன் தானும் இறந்துவிடத் தீர்மானிக்கிறாள். ஆதன் தன் தவறுக்கான தண்டனையை ஏற்றுக்கொள்ள மனப்பூர்வமாகச்




அணுக்கி (நாவல்) | தேன்மொழி
வெளியீடு: மணற்கேணி | விலை: ரூ.200/–

சம்மதிக்கிறான். ஆனால் முல்லை இறப்பதில் அவனுக்கு உடன்பாடில்லை. இந்த இடத்தில் நாவல் வாசிப்பவர்களையும் பெரும் மனத்துயருக்குள் ஆழ்த்துகிறது. தம் பிள்ளைகளின் குற்றங்களைப் பூசிமெழுகும் பெற்றோரின் மனதை இப்பகுதி நிச்சயம் அசைத்துப் பார்க்கும். தவறு செய்து மாட்டிக்கொண்ட தம் பிள்ளைகளைக் கோடிகள் கொடுத்துக் காப்பாற்றிக்கொள்ளும் பெரிய மனிதர்களுக்கு மத்தியில்தான் முல்லை போன்றவர்களும் வாழ்கிறார்கள். பதினைந்து வயதே நிரம்பிய அந்தப் பெண்ணுக்குச் செய்த கொடுமைக்கு ஆதன் இறப்பதுதான் சரி என்பது முல்லையின் அறம். முல்லையின் அறத்திற்கு அவளது நிலம் காரணமாக முன்னிறுத்தப்படுகிறது. தண்டியடிகள், கழற்சிங்கர், செருத்துணையார், விறன்மிண்டர், நமிநந்தியடிகள் போன்ற நாயன்மார்கள் உருவான மண் திருவாரூர். பெரிய புராணத்தின் முதல் நூலான 'திருத்தொண்டர் தொகை' முகிழ்த்த மண் திருவாரூர். தேவாரம் பாடிய சுந்தரரை ஈன்ற சடையனாரும் இசைஞானியாரும் பிறந்த மண் திருவாரூர். தொன்மத்தைப் போற்றும் அதே நேரத்தில், அந்தத் தொன்மக் கதையாடல்கள்மீதான

“

‘மகனே நீ எனக்கு அளித்த பெயர் சிறுமியைக் கற்பழித்துக் கொலை செய்த கொலைகாரனின் தாய்’ என்கிறாள் முல்லை.

”

தனது விமர்சனத்தையும் சேர்த்துதான் தேன்மொழி பேசியிருக்கிறார்.

ஓர் ஆண் செய்யும் நல்லதிற்கும் அல்லதிற்கும் அந்த ஆணின் அம்மாவிற்கும் பங்கிருக்கிறது என்பதை முல்லை கதாபாத்திரத்தின் மூலமாக வாசகர்களிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறார் தேன்மொழி. இனியனும் மகிழ்நனும் நல்லவர்களாக இருப்பதற்கு மங்களமாத்தா காரணமாக இருக்கிறாள். ஆதனை வளர்த்ததில் முல்லை ஏதோவொரு இடத்தில் பிசகியிருக்கிறாள். அதற்குத் தானும் பொறுப்பேற்றுக் கொள்வதுதான் சரியாக இருக்கும் என்பது அவளது பார்வை. தம் மகன்களின் குற்றச் செயல்களுக்கு நியாயம் கற்பிக்காத முல்லை போன்றவர்கள்தாம் இக்காலத்தில் தேவை. பிள்ளைகளே ஆனாலும் தவறு செய்தால் தண்டிக்கும் மனப்பான்மைதான் நம் மண்ணின் ஆதி அறம் என்பதை இந்நாவல் நினைவூட்டுகிறது.

## 2

அணுக்கி நாவலில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்கள் அனைவரும் தேன்மொழியின் நகல்கள்தாம். அந்தத் தரத்திலேயே ஒவ்வொரு கதாபாத்திரமும் படைக்கப்பட்டிருக்கிறது. மகிழ்நன் வரலாற்று ஆய்வாளன். இந்தக் கதாபாத்திரத்தைக் கொண்டு தேன்மொழி தன்னையே எழுதிப் பார்த்திருக்கிறார் என்றுதான் தோன்றுகிறது. பிரதியாசிரியருக்கு இருக்கும் வரலாற்று அறிவு பல இடங்களில் புனைவுத் தன்மையைக் கட்டுப்படுத்துகிறது. திருவாரூர் தலவரலாற்றை வாசித்தது போன்ற அனுபவத்தை நாவல் பல இடங்களில் ஏற்படுத்துகிறது. இனியனும் தேன்மொழியின் இன்னொரு வடிவம்தான். தேன்மொழிக்கு இச்சமூகத்தின்மீதும் ஒடுக்கப்பட்ட அப்பகுதி மக்கள்மீதும் இருக்கும் அக்கறையின் புறவடிவம்தான் இனியன் என்றும் புரிந்துகொள்ளலாம்.

பெண்ணுடல் சார்ந்த இச்சமூகத்தின் பார்வை, பெண்கள் எதிர்கொள்ளும் உடல் சார்ந்த பிரச்சினைகள் ஆகியவற்றைச் சித்திரப்பாவை கதாபாத்திரத்தின் மூலமாகப் புனைவாசிரியர் பேசியிருக்கிறார். புறவெளியிலும் அகவெளியிலும் பெண்கள் எதிர்கொள்ளும் எல்லா பிரச்சினைகளையும் பாவை பேசுகிறாள். பொதுவாகப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரசவத்தின் வலியைப் பலரது புனைவுகள் பதிவு செய்திருக்கின்றன. இந்நாவல், குறை பிரசவத்தின் வலியையும் அந்த வலியினூடாக அப்பெண் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் மிகத் துல்லியமாகப் பேசியிருக்கிறது. தவிர, பெண்களின் தன்னியல் பொருளாதாரத்தின் தேவை குறித்தும் பாவை கதாபாத்திரம் தீவிரமாக உரையாடியிருக்கிறது. பெண்களால் ஆண்கள் துணையில்லாமலும் இச்சமூகத்தை எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் கதாபாத்திரம் மங்களமாத்தா. இதுவொரு மெருகூட்டப்பட்ட கதாபாத்திரம். முல்லை, பாவை ஆகிய இரு பெண்களின் முன்மாதிரி மங்களமாத்தா. இந்தக் கதாபாத்திரத்தின்மீது ஏற்றப்பட்ட மிகை யதார்த்தத் தன்மை இக்கதாபாத்திரத்திற்கு வலிமை சேர்ப்பதாக அமையவில்லை. ‘ஆத்தா நீர் இறைக்கும் வேகத்தைப் பார்த்து காற்று சோர்வடைந்து போகும்’ என்ற பாணியில் எழுதப்பட்டுள்ள வாக்கியங்கள் அக்கதாபாத்திரத்திற்குக் கூடுதல் சுமைதான். ஒரு சமூகத்தின் அசல் வாழ்க்கையைச் சொல்ல நினைக்கும் பிரதிக்கு இதுபோன்ற உயர்வு நவிற்சியான சொற்சேர்க்கைகள் பலவீனமாக அமைந்து விடவும் வாய்ப்பிருக்கிறது.

மங்களமாத்தாதான் இந்நாவலின் மையக் கதாபாத்திரம். இவளைச் சுற்றித்தான் பிற கதாபாத்திரங்கள் இயங்குகின்றன. தன் பேரப்பிள்ளைகளான இனியனும் மகிழ்நனும் ஆத்தாவின் நிழலில்தான் வளர்கிறார்கள். ஏனெனில் மங்களமாத்தாவின் மருமகளும் இறந்துவிட்டாள். மங்களமாத்தா குறித்து தேன்மொழி எழுதும்போது, ஈரடுக்கு மரியாதையைப் பயன்படுத்துகிறார். ‘புல்லறுப்பார்கள்’, ‘வெட்டுவார்கள்’, ‘கொண்டிருந்தார்கள்’ என்று விகுதிமேல் விகுதியாக எழுதியிருக்கிறார். ‘அர்’ என்ற பலர்பால் விகுதியை மரியாதையின் பொருட்டு ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பயன்படுத்தும் வழக்கம் தொடக்கக் காலத்திலிருந்தே நடைமுறையில் இருக்கிறது. இதற்குமேல் ‘கள்’ என்ற பன்மை

விகுதியையும் பயன்படுத்தியிருக்கிறார். நவீன இலக்கியப் பிரதிக்கு இந்த ஈரடுக்கு விகுதிகள் அந்நியமாகத் தெரிகின்றன. அடுத்துப் பிரதியில் கவனத்தை ஈர்த்த ஒன்று, மங்களமாத்தா, முல்லை, ஆதிரை, கதைசொல்லி தாத்தாவின் மருமகள் ஆகிய நான்கு பெண்களில் யாருக்கும் கணவர்கள் உயிருடன் இல்லை. ஆண் எனும் மையத்தைத் தகர்த்துப் பெண்சூழ் சமூகத்தைத் தனது நாவலில் தேன்மொழி உருவாக்க நினைத்திருக்கிறார். முக்கிய கதாபாத்திரங்களில் பாவை மட்டும்தான் கணவனுடன் வாழ்கிறாள். பெண்கள் தனித்தியங்க முடியும் என்ற நம்பிக்கையைப் புனைவு உருவாக்க முயன்றிருக்கிறது. ஆண்கள் இருந்தாலுமே பெரும்பாலான குடும்பங்கள் பெண்களின் உழைப்பில்தான் இயங்குகிறது என்பதே கள யதார்த்தம். முல்லையின் நினைவில் அவ்வப்போது அவள் கணவன் இளமாறன் வந்து போகிறான். மங்களமாத்தாவுக்குக் கணவன் எனும் உறவு எவ்விதத் தாக்கத்தையும் அவள் வாழ்க்கையில் ஏற்படுத்தவில்லை. அதனால்தான் அந்தப் பாத்திரம் இந்நாவலில் இவ்வளவு முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது.


அணுக்கி நாவலைத் தலித் இலக்கியத்தின் இரண்டாம் அலை என்கிறார் து.ரவிக்குமார். துயரங்களைப் பேசுவதிலிருந்து அந்தத் துயரங்களிலிருந்து வெளியேறுவதற்கான வழியை இந்நாவல் கண்டடைந்திருக்கிறது. வாசிப்பவரின் கழிவிரக்கத்தைக் கோராமல் எழுதுவது தற்காலத்தில் அதிகரித்திருக்கிறது. அவ்வகையில் தலித் இலக்கியத்தின் காலாவதியான தன்மைகளை வைத்துக்கொண்டு இந்தப் பிரதியை அளவிட முடியாது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு அக்காலத்தில் அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தையும் அதன் தொடர்ச்சியையும் நாவல் சில தரவுகளுடன் கவனப்படுத்தியிருக்கிறது. வரலாற்றின்மீது மறுவாசிப்பினை நிகழ்த்த வேண்டும்; அந்த வரலாற்றில் எளிய மக்கள் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையையும் நாவல் முன்வைத்திருக்கிறது. பெண்களையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் சுற்றித் திரண்டிருக்கும் எல்லா பிரச்சினைகளையும் ஒரே பிரதிக்குள் வைத்து உரையாடுவது சாத்தியமில்லாதது. தேன்மொழி இந்நாவலில் அதனைத்தான் செய்திருக்கிறார். நாவல் இன்னும் விரிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் நாவல் அவ்வளவு களங்களைத் தொட்டிருக்கிறது. ‘அணுக்கி’ தலித்திய பிரதியா, பெண்ணிய பிரதியா என்பதில் பிரச்சினை இல்லை. ஏனெனில், இந்நாவலை இரண்டுமாகவும் வாசிக்கலாம். நாவல் இதனைத் தாண்டியும் தன் எல்லையை விரித்திருக்கிறது. திருவாரூர் ஆன்மிகம், திராவிடம், பொதுவுடைமை, முதலாளித்துவம் ஆகிய எல்லாம் கலந்த மண். இவை எல்லாவற்றையுமே புனைவு பேச முயன்றிருக்கிறது. அதனால்தான் பிரதிக்குள் வரலாறும் புனைவுத்தன்மையும் ஒன்றுக்குள் ஒன்று மயங்கிக் கிடக்கின்றன.

நாவலின் சில அத்தியாயங்கள் யாருடைய கூற்றில் சொல்லப்படுகிறது என்பதில் தெளிவில்லை. ஓரிடத்தில், ‘மகனே நீ எனக்கு அளித்த பெயர் சிறுமியைக் கற்பழித்துக் கொலை செய்த கொலைகாரனின் தாய்’ என்கிறாள் முல்லை. ஆனால், அவளே ‘அந்தப் பொண்ணு எப்புடி மாமா இருக்கு?’ என்று சீனிவாசனிடம் கேட்கிறாள். புனைவைப் பொருத்தவரை அந்தப் பெண் சாகவில்லை. திருநீலகண்ட யாழ்ப்பாணரை இலங்கையைச் சேர்ந்தவர் என்று எழுதியிருக்கிறார். அவர் கடலூர் மாவட்டத்தில் பிறந்தவர். புனைவு எந்தக் காலகட்டத்தைத் தம் கதைக்கான காலமாக எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதிலும் குழப்பம் இருக்கிறது. புனைவில் ஆங்காங்கே கிடைக்கும் காலம் சார்ந்த தரவுகள் ஒன்றுக்கொன்று பொருந்திப் போகவில்லை.

தேன்மொழி இந்நாவலில் ஏராளமான தொன்மங்களைத் தொட்டிருக்கிறார். அதில் மனுநீதிசோழன், காரைக்காலம்மையார் ஆகிய இரு தொன்மங்கள் குறித்துதான் விரிவாக எழுதியிருக்கிறார். தொன்மங்களுக்குப் பின்னே மறைந்துகிடக்கும் வரலாற்றுத் தரவுகள் சுவாரசியமானவை. அப்படியொரு தொன்மத்தை இந்நாவல் நிகழ்காலத்துடன் பொருத்தி மீள் வாசிப்புச் செய்திருக்கிறது. துண்டுத் துண்டாக நிறைய கதைகள் புனைவுக்குள் ஊடாடினாலும் இந்தக் கதைதான் நாவலின் மையமாகச் சூல் கொண்டிருக்கிறது. மூன்று பெண்களில் முல்லையே எனக்குத் தனித்துத் தெரிகிறாள். நாவல் பன்முக வாசிப்பைக் கோருகிறது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஒவ்வொருவரும் அவருக்குத் தேவையான கதைகளை எடுத்துக்கொண்டு உரையாடலாம். அதற்கான வெளியையும் அணுக்கி கொண்டிருக்கிறது. அதுதான் இந்நாவலின் சிறப்பும்கூட.

●

**கட்டுரையாளர்: தமிழ் உதவிப் பேராசிரியர்,**
**தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி**
**இந்துக் கல்லூரி. சென்னை.**


52&53
தை
அக்டோபர் 2024 – மார்ச் 2025
மலர் 14 இதழ் 1
காவ்யா
தமிழ்
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 200
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
100
இசைஞர்
நாகூர் ஹனிபா
100
தோழர்
நல்லகண்ணு
75
சுடலைமுத்து
சண்முகசுந்தரம்
KAAVYA TAMIL (QUARTERLY) October 2024 - March 2025
Regd No : TN TAM 8012 / 43610
இலக்கிய மாமணி
பேரா.சு.சண்முகசுந்தரத்தின்
பவள ஆண்டில் பாரத ஆய்வு
நாட்டுப்புற வழக்காறுகளில்
மக்கள் பாரதம்
பேரா. சு. சண்முகசுந்தரம்
காவ்யா
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
தொடர்புக்கு
044 - 23726882
98404 80232



# காலத்தை வென்று காற்றில் வாழும் பெருங்கவிஞர் கவிநேசன் அபிவைத் தாஜுத்தீன்

தமிழ்க் கவிதை உலகிலும் தமிழ் இசைப்பாடல் உலகிலும் தம் அரிய கவிதைகளாலும் காலத்தை வென்று வாழும் வல்லமையுடைய அரிய பாடல்களாலும் தமிழ் உலகில் என்றைக்கும் நின்று நிலைக்கும் பெருங்கவிஞரான அபிவைத் தாஜுத்தீன் அவர்கள் 24.10.2024 அன்று மாலை 4.00 மணிக்குத் திருவாரூர் மாவட்டம் அபிவிருத்தீஸ்வரத்திலுள்ள தம்முடைய இல்லத்தில் இறைவனின் திருவடி நீழலை அடைந்தார்கள். அவருடைய இழப்பு என்பது தமிழ் இசை உலகிற்கும் பேரிழப்பாகும்.

மிகச் சிறந்த கவிஞர், நேர்த்திமிகு பாடலாசிரியர், அருமையான கட்டுரையாளர், நாடுபோற்றும் நாவலர், நல்ல பதிப்பாளர், பத்திரிக்கையாளர், அரசியலையும் சமூகத்தையும் இணைத்துப் பார்க்கும் சமுதாய விழிப்புணர்வு மிக்க சமூகச் செயற்பாட்டாளர் எனும் பன்முக ஆற்றலுடைய கவிஞர் தாஜுத்தீன் அவர்கள் தம் வாழ்நாளின் இறுதிக்காலம் வரை தொடர்ந்து இயங்கி வந்தார்.



உ. அலிபாவா

இஸ்லாமிய இசைப் பாடல்களின் நாயகனாகவும் முடி சூடா மன்னனாகவும் கடந்த எண்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் திகழ்ந்து வந்த இசைப் பேரரருவி இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா இஸ்லாமியர்களையும் மற்றோரையும் தம் சிம்மக் குரலால் கட்டி வைத்திருக்கும் இசையுலக ஆளுமையாக விளங்கினார். பல்லாயிரம் பாடல்களைப் பாடிக் குவித்த இசைமுரசான இவர் இஸ்லாமியர்களின் நெஞ்சங்களிலும் குறிப்பாகத் தமிழ் மக்கள் அனைவர் நெஞ்சங்களிலும் தமிழ் உள்ள அளவும் வாழும் ஆற்றல் மிக்க மேதையாவார். இவர் பாடிய பாடல்களுள் நானூறுக்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியருளியவர் இலக்கியச் செல்வர் கவிஞர் அபிவை டி.எம்.எம். தாஜுத்தீன் அவர்களாவார். அபிவையாரின் பாடல்களை இசைமுரசு நாகூர் இ.எம். ஹனிபா மட்டுமன்றி காயல் ஷேக்முகம்மது, முகவை சீனி முகம்மது, புதுக்கோட்டை இ.எம். பாஷா, திரைப்படப் பாடகர் மனோ, இ.எம். ஜக்கரியா, தேரிழந்தூர் தாஜுத்தீன், அடவங்குடி அப்துல்ரகுமான், மஸ்தான் உள்ளிட்ட பலரும் பாடித் தமிழகத்தில் இஸ்லாமியத் தேனிசை பரப்பியுள்ளனர்.

## கவிஞர் அபிவை டி.எம்.எம். தாஜுத்தீன்

கவிஞர் டி.எம்.எம். தாஜுத்தீன் 1935 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் நாள் தம் தாயாரின் ஊரான நாகை மாவட்டம் நன்னிலம் வட்டம் பாக்கம் கோட்டூரில் தா. முஹம்மது இபுராஹிம், ஆசியாம்மாள் ஆகியோர்க்கு ஒரே மகனாகப் பிறந்தார். தந்தையின் ஊரான திருவாரூர் மாவட்டத்திலுள்ள அபிவிருத்தீஸ்வரத்தில் வாழ்ந்து வந்தார். கவி.கா.மு. ஷெரீப் பிறந்து வளர்ந்த ஊரான அவ்வூரில் கவி.கா.மு. ஷெரீபின் நினைவாக அவர் இருக்கும் சாலைக்குக் கவி. கா.மு. ஷெரீப் சாலை எனப் பெயர் வைத்து அவர் நினைவைப் போற்றி வந்தார். செல்வச் சிறப்பு மிக்க மாமன்மார்களின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்த அபிவையார், தொடக்கக் கல்வியைப் பாக்கம் கோட்டூரிலும் ஏனங்குடியிலும் நன்னிலத்திலும் பயின்றார். பின்னர் இவருடைய படிப்பு அபிவிருத்தீஸ்வரத்திலும் கொரடாச்சேரியிலும் தொடர்ந்தது. திரைப்படத் துறையில் இயக்குநர் திலகமாகத் திகழ்ந்த கே. பாலச்சந்தர் இவருடன் பள்ளியில் பயின்றோருள் குறிப்பிடத் தக்கவராவார். திருச்சிராப்பள்ளி ஜமால் முகம்மது கல்லூரி தொடங்கப்பட்ட இரண்டாவது ஆண்டில் அக்கல்லூரியில் சேர்ந்து தம் கல்லூரிப் படிப்பைப் பயின்றார். அப்போது அங்கு பணிபுரிந்த புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியரான இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் அவர்களின் பேரன்பினைப் பெற்றார். தம் ஆசிரியரான இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் அவர்களை, ‘என் வாழ்வில் நான் மறக்க முடியாத மாமனிதர்’ என்றும் ‘என் உடன் பிறவாத சகோதரர்’ என்றும் ‘என்பால் அளப்பரிய அன்பு கொண்டவர் அவர்’ என்றும் அன்பாகக் குறிப்பிட்டு மகிழும் அபிவையார் தொடர்ந்து சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மேற்படிப்பைத் தொடர்ந்தார்; அங்கு அந்நாளையில் தமிழ் நாட்டில் பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்த டாக்டர் மு. வரதராசனாரின் உள்ளன்புக்கு உரியவரானார். அவரிடம் நேரில் அமர்ந்து தமிழ் கற்ற பெருமையினையும் பெற்றார். அப்போது அங்கு பணிபுரிந்த மா.கி. தசரதன், அ.ச. ஞானசம்பந்தன், க. அன்பழகன் ஆகியோரிடமும் இதற்கு முன்பு பள்ளியில் பயின்ற போது பாவேந்தர் பாரதிதாசனின் தம்பி பாலகிருட்டிணன், சக்கரவர்த்தி இராசகோபலாச்சாரியாரின் ஒன்றுவிட்ட தம்பி கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியார் ஆகியோரிடமும் தமிழ் கற்றார்.

மாணவப் பருவத்திலேயே வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற அபிவையாரைத் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் உலகுக்கு அறிமுகப்படுத்தியது. திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கேற்று வந்த கவிஞர் செய்தி வாசிப்பாளராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். அதன் பயனாக டெல்லி வானொலியில் தெற்காசிய நேயர்களுக்கான நிகழ்வுகளில் அடிக்கடிக் கலந்து கொள்ளும் வாய்ப்புகளையும் அவர் பெற்றார். தொடர்ந்து தொலைக்காட்சி நிகழ்வுகளிலும் பங்கேற்க அழைக்கப்பட்டார்.

பின்னர் வெளிநாட்டு வாழ்க்கைக்குச் சென்றார். மலேசியத் தலைநகர் கோலாலம்பூர்த் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களில் பகுதி நேரமாக இரண்டாண்டுகள் பணிபுரிந்தார். அப்போது, முதல் முதலாக நிலவில் கால்பதித்த விண்வெளி வீரர் ஆம்ஸ்ட்ராங்கை நேர்காணல் செய்துள்ளார். தொடர்ந்து வானொலியிலும் இலண்டன் பிபிசியிலும் அரிய பணிகளை ஆற்றி எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்ற அபிவையார், அன்றைய அமெரிக்க அதிபர் ஜான்கென்னடியையும் ருஷ்ய அதிபர் குருஷேவையும் ருஷ்யப் புரட்சி வீரர் லெனினையும் நேரில் சந்தித்த பெருமைக்கும் உரியவராவார்.

பின்பு அவருடைய வாழ்க்கை வணிக வாழ்க்கையாக மாறியது. அரபு நாட்டுச்செல்வபுரியும் குபேரபுரியுமான குவைத்தில் இருபதாண்டு காலம் பணிபுரிந்தார். இவ்விருபதாண்டுப் பணியினூடே தமிழ் வளர்ச்சியிலும் தம்முடைய கவனத்தைச் செலுத்தினார். முழுவதும் அரபு நிகழ்ச்சிகளையே வழங்கி வந்த குவைத் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் மாதமொரு தமிழ் நிகழ்ச்சிகளை வழங்க வழிவகை செய்தார். இருபதாண்டுகளுக்கும் மேலாகக் குவைத்தில் வாழ்ந்து வந்த அபிவையார் குவைத் ஆக்கிரமிப்புக்குப்பின் நாடு திரும்பி இலக்கிய வாழ்வு வாழ முற்பட்டார்.

இருபத்தைந்து நாடுகளுக்கும் மேலாகச் சென்று வந்த அனுபவமுடைய அபிவையாரின் மனம் பதிப்புத்துறையின்பால் சென்றது. அவருடைய நண்பர் கவியரசு கண்ணதாசனை வைத்துக் கவிநேசன் பதிப்பகத்தினைத் தொடங்கினார். அப்பதிப்பகத்தின் வாயிலாக இரண்டு பிரயாண நூல்கள், இரண்டு கட்டுரைத் தொகுப்புகள், மூன்று கவிதைத் தொகுப்புகள், ஐந்து கதைத் தொகுப்புகள், சிறப்பு மலர்கள் ஆகியவற்றை வெளியிட்டுத் தம் தமிழ்ப் படைப்புகளை வெளிக்கொணர்ந்துள்ளார்.

இவருக்கு இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் ‘கவித் தென்றல்’ எனும் விருதினை வழங்கி மகிழ்ந்துள்ளார். கவி கா.மு. ஷெரீப் ‘கவிக்குரிசில்’ எனும் விருதினை வழங்கி ஊக்கப்படுத்தியுள்ளார். திருவாரூர் இலக்கியக் கழகம் அபிவையாருக்கு ‘இலக்கியச் செல்வர்’ விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது. மறைந்த தமிழ்மா முனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ‘சொல்லழகுச் செலவர்’ விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளார். கம்பனடிப்பொடி சா. கணேசன் ‘அமுதகவி அரசு’ எனும் விருதினை வழங்கிப் பாராட்டியுள்ளார். ‘கவிமா மணி’ எனும் விருதினை இசைமுரசு நாகூர் இ.எம். ஹனிபா அளித்துப் போற்றியுள்ளார். ‘அருந்தமிழ் அருவி’, ‘தமிழ் மணி’ எனும் விருதுகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் ‘கவிச் சித்தர்’ விருதினை மாயவரம் இலக்கியக் கழகமும் ‘கன்னித் தமிழ்க் காவலர்’ எனும் விருதினைத் துபாய்த் தமிழ்ச் சங்கமும் ‘கவியரசு’ எனும் விருதினைக் குவைத் தமிழ்ச் சங்கமும் ‘கிரேட் பொயட்’ (Great Poet) எனும் விருதினை இலண்டன் தமிழ்ச் சங்கமும் வழங்கிப் பாராட்டியுள்ளன. மலேசியா அலோர் இஸ்லாமிய சின்னிலக்கிய எழிலார் இயக்கத்தின் சாதனையாளர் விருதினையும் அவ்வமைப்பு வழங்கிப் பாராட்டியுள்ளது.

“அபிவிருத்தீஸ்வரம் டி.எம்.எம். தாஜுத்தீன் அவர்கள் இன்றைய தமிழ்கூறும் நல்லுலகில் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவராகத் திகழ்பவர். அபிவைத் தாஜுத்தீன், அபிவையார், கவிநேசன் இப்படிப் பல பெயர்களில் இவர் எழுதி வரும் கவிதைகள், மரபுக் கவிதைகளாக மட்டுமன்றி, இதயத்தைக் கவர்ந்து இழுக்கும் இசைப் பாடல்களாகவும் பிரபல்யமாகியுள்ளன. அண்ணன் இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா அவர்களின் கம்பீரக் குரலில் இந்தக் கவிஞரின் பலப்பல பாடல்கள் இசையாகியுள்ளன” என்று இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தமிழ்நாட்டுத் தலைவரான பேராசிரியர் கே.எம். காதர் முகைதீன் குறிப்பிடுகிறார்.

**அபிவையாரின் இஸ்லாமிய இசைப் பாடல்கள்**

நானூறுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய இசைப் பாடல்களை இயற்றியுள்ள அபிவைத் தாஜுத்தீனின் பாடல்களில் இறைவனின் ஏக வல்லமையும் அனைத்துலக ஆளுமையும் பாடப்படுவதுடன் இஸ்லாமிய மார்க்க வரலாறு, நபிமார்களின் சீரிய நேரிய வரலாறு, திருக்குர்ஆனும் நபிமொழியும் வலியுறுத்தும் வாழ்வியல் நடைமுறைகள், நபிகள் நாயகத்தின் வாழ்வியல் ஒழுகலாறுகள், இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் ஆகியன மக்கள் உளங்கொளத் தக்க வகையில் எடுத்துரைக்கப் படுகின்றன. இவற்றினைப் பாடுபொருள்களாகக் கொண்டுள்ள அபிவையாரின் பாடல்களில் தேன் மணம் கமழும் அற்புதமான தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன. அவற்றுடன் இஸ்லாமியர்களுக்கேயுரிய அரபுச் சொற்களின் தேவை கருதிய பயன்பாடும் இருக்கின்றன.

இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா அவர்கள் அபிவையாரைப் பற்றி மகிழ்ந்து கூறுகிறார்.

“தம்பி தாஜுத்தீனை வாழ்த்துவது - என்னை நான் வாழ்த்திக் கொள்வதற்குச் சமமானது! நாங்கள் இருவரும் ஒரே இயக்கத்தில் இருப்பவர்கள். அந்த இயக்கத்தின் துவக்க காலத்தில் தம்பி தாஜ் பிரபலமான பேச்சாளர். தமிழகத்தில் அவர் கால்படாத இடமில்லை - நாங்கள் இருவரும் ஒரே மேடையில் இணைவோம்!

கவிஞரின் எழுத்தையும் பேச்சையும் போலவே - அவர் இளமையும் சுறுசுறுப்பும் துடிப்பும் கொண்டது. நாற்பதாண்டுக்கு மேலாக நாங்கள் - அண்ணன் தம்பி உறவு முறையிலே வாழ்கிறோம்.

கவிஞர் தம் வெளிநாட்டு வாழ்க்கையை நிறைவாக்கிக் கொண்ட பின்னரே எனக்குத்

தொடர்ந்து பாடல் எழுதத் துவங்கினார். அதற்கு முன்னர் ஒரு சில பாடல்களே!

மிகப்பெரிய கவிவாணர்கள் எல்லாம் மிகச் சிறந்த கவிதையை எழுதி விடுவார்கள் - ஏட்டில்!

இசைக்குக் கவி எழுதுவது என்பது அவ்வளவு இலகுவானதல்ல. அதுவும் கருத்துக்குத் தகுந்தாற்போல் - பொருத்தமான - பாந்தமான வார்த்தையைப் போட வேண்டும் - அதுவும் என் குரலுக்கேற்ற - சுவையான சொல்லைத் தேர்வு செய்ய வேண்டும் - இது ஒரு கலை!

என் குரு நாதர் புலவர் ஆபீதீனுக்கு அடுத்து இந்த ஏற்றமான கலையை நன்கறிந்தவர். என்னைச் சிறப்பாகப் புரிந்தவர் கவிஞர் தாஜ் தான்!

நான் - கவிஞர் - இசையமைப்பாளர் ஒன்று சேர்ந்து விட்டால் அன்று பல பாடல்கள் உருவாகி விட்டன என்று பொருள்!

வார்த்தை வனப்பறிந்த - சொல்லின் சுவை அறிந்த கவிஞர், கொட்டும் தமிழில் கொஞ்சும் மொழியில் - இசையோடிணைந்து சொற்சிலம்பாடி விடுவார்.

கவிஞரின் எழுத்தின் ஏற்றமும் - சொல்லின் சுவையும், சுகமான சொல்லடுக்கும் - அழுத்தமான கருத்தும் எனக்கு மிகவும் பிடிக்கும் - ரசித்துப் பாடுவேன்.

கவிஞரின் பாடல்களை நான் இன்னும் பாட வேண்டும் - கருணை நாயகன் எனக்கு அருள் பாலிக்க வேண்டும்.

கவிஞர் மலருக்கு வாழ்த்துவதில் மகிழ்வு! பல மலர்கள் தந்த கவிஞர் இன்னும் தர வேண்டும் - அருந்தமிழ் அருவி கொட்டிக் கொண்டே இருக்க வேண்டும் - அதில் கொஞ்சும் தமிழ் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்'' என்று இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா அபிவையாரைப் பற்றி உள்ளன்போடு கூறுவது அவருடைய புலமைக்கும் ஆற்றலுக்கும் தக்கதொரு சான்றாகும்.

''ஹாஜி இ.எம். ஹனிபா அவர்களுக்கு மெருகூட்டிய பல பாடல்களைத் தந்த அபிவையார் என்று எல்லோராலும் அழைக்கப்படும் செந்தமிழ்ச் செல்வர் அபிவை ஹாஜி டி.எம்.எம். தாஜுத்தீன் அவர்களின் அறிமுகம் கிடைத்த பிறகு எனக்கும் பல பாடல்களை எழுதித் தந்து என் முகவரியை மக்கள் மனதில் ஆழமாகப் பதிய வைத்ததை என் வாழ்நாளில் மறக்க முடியாது. உதாரணமாக, 'கல்புக்குள்ளே தங்களை வைத்தேன் யாரசூல் அல்லாஹ்...', 'கோடான கோடி மலர் வாசம் தந்தது...' என்று அவர் எழுதிய பாடல்களுக்குப் பிறகே என் வளர்ச்சி மேலோங்கியது'' என மனதாரக் கூறி மகிழ்கிறார் புதுக்கோட்டை இ.எம். பாஷா.

இஸ்லாமிய மார்க்கத்தின் மேன்மையினையும் அது வலியுறுத்தும் கொள்கைகளையும் அபிவையார் ஒரு பாடலில் தெளிவாகவும் நேர்த்தியாகவும் கேட்போர் மனம் ஈடுபடுமாறும் பாடுகிறார். 'வானோங்கும் மார்க்கம் வளமான மார்க்கம் தீனோரின் நெறியல்லவா, திரு நபி நாதர் வழியல்லவா, எண்ணங்கள் தூய்மை, எழிலோடு பொறுமை தியாகத்தின் விளைவல்லவா, நபியின் தியாகத்தின் விளைவல்லவா' என்று தொடங்கும் அப்பாடல், 'நிறம் ஒன்று, குலம் ஒன்று, இறை ஒன்று என்றே, கனிவோடு நபி நாதர் சொன்னார், இதைக் கனிவோடு நபி நாதர் சொன்னார், மறை ஒன்று, நெறி ஒன்று, காஃபாவும் ஒன்று, அருளோடு நபிநாதர் சொன்னார், என்றும் அருளோடு நபி நாதர் சொன்னார்' என ஓரிறைக் கொள்கையைக் கனிவோடு எடுத்துரைக்கிறது. 'பொன்னான வாழ்வே கண்ணான ஒளியாய் புண்ணியம் பூத்திடும் புகழ் மார்க்கம் தழைக்க, குலத்தாலும் இனத்தாலும் நிறத்தாலும் பெருமை கூடாது என்றே உரைத்தார், எங்கும் கூடாது என்றே உரைத்தார், பணத்தாலும் பலத்தாலும் வளத்தாலும் மமதை கூடாது என்றே உரைத்தார், வாழ்வில் கூடாது என்றே உரைத்தார், சமத்துவம் ஓங்க சாந்தியும் விளங்க சர்தார் நபியின் சன்மார்க்கம் முழங்க(வானோங்கும்...), மனத்தாலும் திறத்தாலும் அறிவாலும் அகந்தை கொள்ளாதீர் என்றே உரைத்தார், அகந்தை கொள்ளாதீர் என்றே உரைத்தார், சொல்லாலும் செயலாலும் எழுத்தாலும் வெறியைத் தூண்டாதீர் என்றே உரைத்தார், வெறியைத் தூண்டாதீர் என்றே உரைத்தார், இளகிய மனமும் இனிய நல் மொழியும் மனிதனைப் புனிதனாய் மாற்றிடும் என்றார்' என்று இஸ்லாம் உணர்த்தும் மனிதர்க்கு வேண்டிய நற்பண்புகளைக் கவிஞர் பட்டியலிடுகிறார். இப்பாடலில் நபிகள் நாயகம் உரைத்ததாகக் கவிஞர் எழுதுவதும் அதனை இசைமுரசு பாடுவதும் கேட்போருக்கு நாயகக் கண்மணி நபிகளாரே நேரில் வந்து கூறிய உணர்வினைத் தருகிறது. இது பாடலாசிரியருக்கும் பாடகருக்கும் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

இன்னொரு பாடலிலும் இதே போன்று நபிகள் நாயகத்தின் உதயத்தைச் சுட்டிக்காட்டி

அதனால் விளைந்த பயன்களையும், 'உதயமே நபி உதயமே உங்கள் வரவாலே உலகம் சிறந்தது, உங்கள் வரவாலே உள்ளம் மகிழ்ந்தது, உங்கள் மொழியாவும் வழியானதே, உங்கள் வழி யாவும் வாழ்வானதே, இறைவனும் ஒன்று, இறைமறை ஒன்று, ஏந்திடும் மார்க்கம் தீன்குலம் என்று, சாந்தியின் வழியில் சூழ்ந்திடும் நன்மைகள், சகலமும் சன் மார்க்க சரிதங்கள் என்று, அண்ணல் பெருமானின் அன்பு வாழுதே அகிலம் எல்லாமே எதிரொலிக்குதே..., எவ்வழி நல்வழி அவ்வழி நபி வழி, என் வழி இறை வழி என்றது நபி மொழி, சொல்லும் செயலும் சோபிக்க வாழ்ந்து என் வழி தனி வழி என்றது நபிவழி, திருமறையே நபி வாழ்வானதே, திரு நபி வாழ்வே அருளானதே' என அடுக்குகிறார். இவ் அடுக்கின் ஊடே கவிஞர் சொற்சிலம்பமாடித் தம் வித்தகப் புலமையை எல்லோருக்கும் விருந்தாக்குகிறார்.

இறைவனின் இறுதித் தூதுவரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் தான் இஸ்லாம் பூரணத்துவமடைந்த மார்க்கமாகப் பரிணமித்தது. நபிகளாரின் காலத்தில் மக்களிடமிருந்த மூடப் பழக்கவழக்கங்களிலிருந்து மக்கள் வெளிவருவதற்கும் மக்கள் நற்பண்புகளைப் பெற்று மேன்மையடைவதற்கும் நபிகள் பெருமான் பட்ட பாடுகள் மிகுதி. அவற்றைச் சொல்லி மாளாது. இஸ்லாமிய மார்க்கத்தை இறைவழி நின்று மெருகேற்றி மேன்மைப்படுத்திய நபிகளாரின் வாழ்வும் வாக்கும் செயல்பாடுகளும் இஸ்லாமிய மார்க்கத்திற்கும் இஸ்லாத்தைப் பின்பற்றும் முஸ்லீம்களுக்கும் மிகப்பெரிய பாடமாகும். இதனைப் பல பாடல்களில் உணர்த்திய அபிவையார்,

**தாங்கள் இல்லாமல் நாங்கள் இல்லையே**
**தாஹா றசூல் நபியே**
**ஓங்கிடும் குர்ஆன் தாங்கி வந்தீரே**
**உலகம் போற்றும் மார்க்கம் தந்தீரே**
**முகம்மது நபியே**

என்ற பாடலில் முற்றும் முழுதாக உணர்த்தி விடுகிறார். தொடர்ந்து இப்பாடலில் அவருடைய பெருமைகளை,

**விண்ணகத்து மன்னராக விளங்கி வந்தீரே**
**மண்ணகத்து மாண்புரைத்து மகிமை கொண்டீரே**
**கண்ணியத்தின் காவலரே நபிகள் நாதரே**
**கருணை மனம் பொறுமை குணம்**
**அருமை கண்ட யாரசூலே**
**(தாங்கள்....)**

**நான்கு மறை வேதங்களைத் தாங்கி வந்தீரே**
**நாயனவன் தூதராக ஓங்கி நின்றீரே**
**வேதங்களின் விடிவெள்ளியாய் விளக்கம் தந்தீரே**
**வெற்றியின்மேல் வெற்றி கண்ட வேந்தர் நபி நாயகமே (தாங்கள்....)**
**இகம் பரம் இரண்டிலுமே ஏற்றம் தந்தீரே**
**இறுதி நாளில் மகஷரிலே கைகொடுத்தீரே**
**அகமிய வாழ்க்கைமுறை அளந்து தந்தீரே**
**அற்புதத்தின் அற்புதராய் அகிலம் வாழ்ந்த யாஹபீபே (தாங்கள்....)**

**அபுகுபைஸ் மலையோரம் பிறந்த நாதரே**
**அருமையான குரைஷியராய் வளர்ந்த நீதரே**
**இதயம்தன்னில் ஈமானை இலங்கச் செய்தோரே**
**இனிமையான எளிமையான இஸ்லாம் ஈந்த யாஹபீபே (தாங்கள்....)**

**காலத்தின் கண்ணாடி அஹம்மது நபிகள்**
**சீலத்தின் முன்னோடி முஹம்மது நபிகள்**
**ஞாலத்தின் கண்ணொளியே யாரசூலல்லாஹ்**
**ஞாலத்தின் பொன்னொளியாய் நாளும் காணும் யாஹபீபே (தாங்கள்....)**

என எடுத்துக்காட்டுகிறார்.

'கோடான கோடி மலர் வாசம் தந்தது, அது கோமான் நபி மேனி எங்கும் தழுவிக் கொண்டது, கோடி மனம் கூடி வந்து தேடிக் கொண்டது, பல கோடி மனம் தேடி வந்து தேடிக் கொண்டது, நபிகள் கொண்டு வந்த ஈமானை நாடிக் கொண்டது, வானுலகில் விண்மீன்கள் சுடரொளித்தது, அது வள்ளல் நபி நாயகத்தின் அருளொளித்தது, கானுலகில் பறவையினம் இசை ஒலித்தது, அது காத்தமுன் நபி மதினாவின் திசை கேட்டது, நபிபெருமான் வரவால் இந்த உலகம் மகிழ்ந்தது, எங்கள் கோமான் அருளால் தீனின் ஒளி பிறந்தது' என்று நபிகளாரின் வரவை விதந்து பாடும் அபிவையார், 'சிந்தனையில் உருவெடுத்துச் செந்தமிழின் சொல்லெடுத்து எந்தன் உயிர் வாழுகின்ற ஏந்தல் நபி பெயர் தொடுத்துச் சந்தமுடன் நான் பாடுவேன் சகா காலம் சர்தார் நபி புகழ் பாடுவேன்', 'திரு நபி போல் ஒரு நபியைக் காண முடியுமா, அவர் செயல் முறையைக் கடந்து இங்கு வாழ்வது நலமா, மனிதர்களே இதைக் கேளுங்கள், நபி மணி மொழியைப் பேணி வாழுங்கள்', 'அருள் நபி வழியில் வாழ்வாய் அல்லாஹ்வை தினமும் தொழுவாய், ஆகிரத்தை

மறந்திடாமல் உலகில் வாழ்ந்து காட்டுவாய்', 'அகிலம் வாழ்ந்திட மகிமை சிறந்திட அஹம்மது நபி பிறந்தார், புனித முகம்மது நபி பிறந்தார், வளமை வாய்ந்திட கருணை வளர்ந்திட கருணை நபி பிறந்தார், தீனின் கருணை நபி பிறந்தார்', 'ஆமினாரின் கண் மணியே யாரசூலல்லாஹ், அகிலம் போற்றும் மார்க்கம் தந்த யாரசூலல்லாஹ்', 'அண்ணல் நபி நாயகமே வரவேண்டும், உங்கள் அன்பு முகம் நான் காண அல் அமீனே அருள் வேண்டும், மடமைகளைத் தடுத்து அடிமை விலங்கொடித்து மங்கலங்கள் பொங்கும் எங்கள் சங்கை மிகு யாரசூலே', 'வள்ளல் நபியே வராததேன் இவ்வேளை இல்லையோ தான் தயாளனே ரசூலே, அனுதினமும் தங்களை நான் தேடுகின்றேன் வாடுகின்றேன், அனுக்கிரகமே நான் பெறவே அல்லும் பகலும் நான் பாடுகிறேன், கண்ணின் மணியே கல்பின் உயிரே ரசூலே, வள்ளல் நபியே வராததேன் இவ்வேளை, இல்லையோ தான், தயாளனே, ரசூலே, அல்அமீனே தங்களை நான் ஆசிக்கின்றேனே, நேசிக்கின்றேனே, அரவணைப்பே நான் பெறவே அகமடங்கி யாசிக்கின்றேனே', 'சங்கை மிகும் நபி பெருமான் புகழ் பாடுவோம்', 'இனிய நபிகள் ஓர் தொடர் காவியம், அவர் எல்லோரும் நாடுகின்ற அறிவாலயம்', 'வர வேண்டும் நபியே தருணம் தங்களின் தரிசனம் தர வேண்டும்', 'ஏழையாக வாழ்ந்ததேனோ யாரசூலல்லாஹ், நாளை மகஷர் வேளை உதவும் யாஹபீபல்லாஹ், ஏந்தலராய்த் தான் இருந்தும் ஏற்றமான வாழ்விருந்தும் யாஹபீபல்லாஹ், ஏழையாக வாழ்ந்ததேனோ', 'அண்ணல் நபி நாயகமே வரவேண்டும், உங்கள் அன்பு முகம் நான் காண அருள் வேண்டும்' என்று நபி பெருமானின் வாழ்வையும் பெருமையையும் புகழையும் தம் பாடல்களுள் பெருமளவுப் பாடல்களுக்குப் பாவிகமாய் வைத்துக் கவிஞர் பாடிக் குவித்திருக்கிறார்.

'கல்புக்குள்ளே தங்களை வைத்தேன் யாரசூலல்லாஹ், கலிமாவை மனதில் வைத்தேன் யாரசூலல்லாஹ், கனிவு மனம் பணிவு குணம் யாரசூலல்லாஹ், நாளும் கடமையாக்கி வாழ்ந்திடுவேன் யாரசூலல்லாஹ்' என்று உறுதிமொழி கூறுகிறார். இஸ்லாமிய வாழ்வியலுக்கு வழிகாட்டுகிறார்.

அபிவையாருடைய பாடல்கள் நபிபெருமானாரைப் பாடுவதுடன் இஸ்லாமிய மார்க்கத்திற்குத் தொண்டாற்றிய நபித்தோழர்கள், இறைநேசர்கள் முதலியோரையும் பாடுகின்றன. 'மங்கையர்க்கரசி அன்னை பாத்திமா, சங்கை மிகுந்த சாந்தம் நிறைந்த மங்கையர்க்கரசி அன்னை பாத்திமா, சந்திரன் தன்னை தன்னகம் அழைத்த சர்தார் நபியின் மடியில் தவழ்ந்த மாணிக்கமே மங்கையர்க்கரசி அன்னை பாத்திமா', 'மங்கையர்க்கரசியே மாசிலா மாமணியே சங்கை மிகும் தீன் கனியே சல்லல்லாஹ் நபி மகளே சொர்க்கத்தின் நாயகியே சற்குணத்தின் தாரகையே நற்றவத்தின் குணவதியே நபிக்கரசர் திருமகளே' எனும் பாடல்கள் நபிபெருமானாரின் திருமகளார் மாதர் குலத் திலகம் பாத்திமா நாயகியாரைப் புகழ்ந்து பாடுகின்றன.

இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர்கள், தங்களின் இன்னுயிரை ஈந்தவர்கள் அவுலியாக்கள், வலிமார்கள், இறைநேசர்கள் என்றெல்லாம் அழைக்கப் பட்டார்கள். அவர்களுள் தலையாயவராகத் திகழ்ந்தவர் இறைநேசர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கித் தீன் என்று அழைக்கப்படும் இஸ்லாத்துக்குப் புத்துயிரூட்டிய பெருந்தகை முகைதீன் ஆண்டவர் அப்துல் காதர் ஜெயிலானி (ரஹ்) என்பார் ஆவார். அவரை, 'பகுதாதில் வாழும் எங்கள் பார் போற்றும் செல்வமே, பண்பான தீனை வளர்த்த கௌதுல் அஃலமே, தீனை வளர்த்த பண்பான கௌதுல் அஃலமே' என்று விளித்துப் பாடி இப்பாடலில் அபிவையார் அவருடைய பெருமைகளைப் பேசுகின்றார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள ஆற்றங்கரைப் பள்ளியில் அடக்கமாகியுள்ள செய்யதுஅலி பாத்திமா நாச்சியாரைப் புகழ்ந்து, 'ஆற்றங்கரைப் பள்ளி வாழும் செய்யது அலி பாத்திமா, அல்லாஹ்வின் அருள் நிறைந்த செய்யது அலி பாத்திமா, ஏற்றமான தீன் வளர்த்த செய்யது அலி பாத்திமா, எல்லோரும் போற்றும் எங்கள் செய்யது அலி பாத்திமா' என்ற பாடலையும் கேரள மாநிலத் தலைநகரான திருவனந்தபுரக் கடற்கரையில் அடக்கமாகியுள்ள பீமா அம்மையாரைப் புகழ்ந்து 'மங்கையர் திலகம் சங்கை மிகுந்த மணி முத்து பீமா சுடர் விளக்கு, பொங்கிடும் மங்கலம் தங்கியே வாழ்ந்த புண்ணிய பீமா ஒளி விளக்கு, கண்ணிய ஈமான் மணி விளக்கு, தீன் கண்ணியம் காத்த சுடர் விளக்கு, அலைகள் மோதும் கடலின் ஓரம் ஆட்சி செய்யும் அம்மா, கலைகள் ஞானம் நிலையாய்க் கண்ட கருணை நிறைந்த பீமா' எனும் பாடலையும் பாடியுள்ளார்.

'இஸ்லாம் எனும் மாளிகைக்கு ஐந்து தூண்கள், புனித கலிமாவுடன் தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ்ஜு' என இஸலாத்தின் ஐம்பெருங் கடமைகளை உணர்த்தும் கவிஞர், 'ஹஜ்ஜுப் பெருநாள் வந்த சரித்திரம் கேளுங்கள், அங்கு இபுராஹிம் நபி செய்த தியாகத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று ஹஜ்ஜுப் பெருநாளின் பின்னணியினையும் வரலாற்றையும் எடுத்துக் காட்டுகிறார். 'இப்பாடல் கேட்போரனைவருக்கும் மக்கமாநகரையும் மதினா மாநகரையும் வலம் வந்த உணர்வினைத் தருகிறது.

'எல்லோரும் ஹஜ்ஜு செய்யலாம் வல்லோனின் காஃபாவைக் காணலாம், வண்ணமுடன் வாழலாம், எண்ணமுடன் சேரலாம், திண்ணமுடன் இறைவனிடம் கைகள் ஏந்தலாம், தொழுது துஆ கேட்கலாம்','பாவங்கள் போக்கிடும் தாபங்கள் தீர்த்திடும் பயகம்பர் வாழும் மதினா, புனித பயகம்பர் வாழும் மதினா, கண்ணான மதினாவைச் சொன்னாலும் வாய் மணக்கும், பொன்னான நபிநாதர் புகழ்பாட வாய் இனிக்கும்' எனும் பாடல்கள் பயகம்பர் வாழும் மதினா மாநகருக்குப் போக வேண்டும் என்கின்ற உணர்வினைத் தருகின்றன.

இன்னொரு பாடல், 'ரமலான் புனித ரமலான், இதயம் எல்லாம் கனிந்து கனிந்து இறை உணர்வில் சிறந்த மாதம், ரமலான் புனித ரமலான், ஈகைக் குணமும் இரக்க மனமும் மலர்ந்த மாதம், நல்ல தியாக உணர்வும் நியாய குணமும் சிறந்த மாதம், வாகை சூடும் குர்ஆனைத் தந்த மாதம், இந்த வையகமே வியக்கும் நோன்பு வந்த மாதம், பசி என்பதை யாவருக்கும் உணர்த்தும் மாதம், நல்ல பண்புடனே ஜக்காத்தை வழங்கும் மாதம், வாரி வழங்கும் மாதம்' என நோன்பின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது. 'முப்பது நாளின் அற்புத நோன்பைத் தப்பாமல் நோற்றிடுவோம் அது எப்போதும் நம்மை ஈமானின் பக்கம் இருக்கச் செய்திடுமே, அருள் சுரக்கச் செய்திடுமே' எனும் பாடல் நோன்பின் மாண்பினை உணர்த்துகிறது.

மக்கள் நபிவழியில் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நியதிகளையும் வாழ்வியல் நடைமுறைகளையும் அபிவையார் நயமாக எடுத்துரைக்கிறார். 'பிஸ்மில்லாஹ் என்ற தூய சொற்கொண்டு நாளும் பேசத் துவங்கினால் பெருகும் நன்மை கற்கண்டு, விசுவாசத்தின் விளக்கம் யாவும் அதில் உண்டு, தினம் வெற்றிமேல் வெற்றி விளைந்து வாழ்வில் வளம் உண்டு' எனும் பாடல் எந்த ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போதும் அச்செயலை இறைவனின் திருநாமத்தைக் கொண்டு தொடங்க வேண்டும் எனும் இஸ்லாமிய வாழ்வியல் நெறியை எடுத்துக்காட்டுகிறது. மேலும் பாடல் முழுவதும் உண்டு எனும் சொல் நாற்பத்து இரண்டு முறை கவிஞரால் கையாளப்பட்டுள்ளது. இது கேட்போரை வியப்புடன் கேட்க வைக்கும் திறனதாக இருக்கிறது.

'கல்வியைப் போல் ஒரு செல்வம் இல்லை, கல்வி கற்காமல் இருந்தால் காலமெல்லாம் தொல்லை, சீனம் சென்றேனும் கல்வி கற்றிட வேண்டும், இது செம்மல் நபிநாயகம் மொழி அறிந்திட வேண்டும், கல்வி இரு கண்களாகும் புரிந்திட வேண்டும், அதைக் காலத்தோடு கற்று நீயும் தெளிந்திட வேண்டும், ஞானம் கற்றிடு இந்த ஞானம் சிறந்திடு, உண்மை பேசும் உயர்ந்த பண்பு கல்வி தந்திடும், உனக்கு உற்ற நல்ல மதிப்பினையே பெற்றுத் தந்திடும், எல்லாமே கல்வியிலே அடக்கமாகுமே, என்றென்றும் உனக்கு வழித் துணையாகுமே, கல்வி கற்றிடு வெற்றிக் கனியைப் பெற்றிடு' எனும் பாடல் இஸ்லாம் கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை விளம்புவதுடன் இஸ்லாத்தின் முற்போக்குச் சிந்தனைக்குச் சான்றாகவும் விளங்குகிறது.

ஒற்றுமை என்னும் கயிற்றினை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று வலியுறுத்தும் நபிமொழியினை அடியொற்றிச் சமயப் பொறையினை வலியுறுத்தி எழுதப்பட்டுள்ள, 'ஒற்றுமையாய் நாம் வாழனும் தீய வேற்றுமைகள் இங்கே தீரணும் , இந்து முஸ்லீம் கிறிஸ்தவர்கள் எல்லோரும் இணைந்தே வாழ வேண்டும் எந்நாளும், மனித நேயமே வாழ்வின் ஜீவனாகுமே' எனும் பாடல் சர்வ சமய சமரசத்தை வலியுறுத்துவதுடன் மதம் கடந்த மானுட நேயத்தையும் வலியுறுத்துகிறது. மனிதகுல வளர்ச்சிக்கான இன்றைய தேவையையும் நயமாக எடுத்துக் காட்டுகிறது. இதனையே இன்னொரு பாடலிலும், 'மனிதனாக வாழ வேண்டும் மாண்புடன் தம்பி, புனிதனாக வலம் வர வேண்டும் இறைவனை நம்பி' என அபிவையார் எடுத்துக்காட்டுகிறார். இங்ஙனம் பாடப்பட்டுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் கேட்போருக்கும் படிப்போருக்கும் நிறைபயன் நல்குவன.

●

**பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.**




# 48 ஆவது சென்னை புத்தகக் காட்சி

தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் (BAPASI) சார்பில் 48 ஆவது ஆண்டாக நடக்கப் பெறும் ‘சென்னை புத்தகக் காட்சி’ 2024 டிசம்பர் 27 ஆம் தேதி முதல் ஜனவரி12 ஆம் தேதி வரை 17 நாட்களுக்கு சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ உடற் கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது. மொத்தம் 900 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் முழு வீச்சில் பங்கேற்றுள்ளனர்.

புத்தகக் காட்சி விடுமுறை நாள்களில் காலை 11.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறுகிறது. வேலை நாள்களில் பிற்பகல் 2.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை செயல்படுகிறது. இங்கு வாங்கப்பெறும் அனைத்து நூல்களுக்கும் விலையில் 10% சிறப்புக் கழிவு வழங்கப்படுகிறது.

தினசரி மாலை 6 மணிக்கு சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சிறப்புப் பரிசளிப்பு நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. தொடக்க நாளில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மாண்புமிகு பள்ளிக் கல்வியமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும் சிறப்பு விருத்தினர்களாகப் பங்கேற்றனர். நிறைவு நாள் நிகழ்வில் மாண்புமிகு உச்சநீதி மன்ற நீதிபதி அரங்க மகாதேவன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று நிறைவுரையாற்றுகிறார்.

பபாசியின் தலைவர் திரு சேது சொக்கலிங்கம், செயலாளர் திரு எஸ்.கே.முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் புத்தகக் காட்சி நிகழ்வுகளை ஒருங்கிணைக்கின்றனர்.




# சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – 2025

2025 ஆம் ஆண்டிற்கான சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா வருகிற ஜனவரி 16ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள உலக வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ளது. இது மூன்றாம் ஆண்டு 2023 இல் முதல் முறையாக நடைபெற்றபோது 25 நாடுகளிலிருந்து பன்னாட்டுப் பதிப்பாளர்கள் பங்கேற்றனர். 2024 இல் சுமார் 40 உலகப் பதிப்பாளர்கள் பங்கேற்றனர். 2025 ஆம் ஆண்டிற்கான எதிர்வரும் 3ஆம் ஆண்டுத் திருவிழாவில் சுமார் 50க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பிரசித்திபெற்ற பன்னாட்டுப் புத்தக நிறுவனங்கள் பங்கேற்க உள்ளனர். இந்தியாவின் பிற மாநிலப் பதிப்பாளர்களும் பங்கேற்கின்றனர்.

இது நேரடியாக பொதுமக்களுக்கான வாசகர்களுக்கான புத்தகத் திருவிழா அல்ல. பதிப்பாளர்கள், நூலாசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் இலக்கிய முகவர்கள் பங்கேற்கும் நிகழ்வு. இந்நிகழ்வில் மொழிபெயர்ப்பு, பதிப்புரிமை இந்திருவிழாவில் முக்கியத்துவம் பெறுகிறது.

பதிப்புரிமைப் பரிமாற்றம் பற்றிய உரையாடல்களும், இருதரப்பு ஒப்பந்தங்கள் ஏற்படுதலும் இத்திருவிழாவின் பிரதான அம்சமாகும். இத்திருவிழாவை தமிழ்நாடு அரசே பெரும் பொருட்செலவில் முன்னின்றும் பொறுப்பேற்றும் நடத்துகிறது. தகுதிவாய்ந்த தமிழ்ப் படைப்புகளை உலகிற்கு எடுத்துச் செல்வதும் – உலக அளவிலான தரம்மிக்க பன்மொழிப் படைப்புகளை தமிழுக்குக் கொண்டுவருவதும் இத்திருவிழாவின் மைய நோக்கமாகும்.

இத்திருவிழாவில் பல கருத்தரங்க அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதில் சர்வதேச அளவிலான பதிப்புலக ஆளுமைகள் பிறமொழிப் படைப்பாளிகள் பங்கேற்று கருத்துரை வழங்குகின்றனர். பன்னாட்டுப் பதிப்பாளர்களின் பயணச் செலவுகள், தங்கும் இடம், உணவு உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது.

இந்த ஆண்டு சுமார் ஆயிரம் பதிப்புரிமைப் பரிவர்த்தனை ஒப்பந்தங்களாவது நிறைவேற வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் மதிப்புறு விருந்தினராக இத்தாலி – போலோக்னா குழந்தைகள் பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தேர்வு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள் சிறப்பரங்கங்கள் திருவிழா தேர்வு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள் சிறப்பரங்கங்கள் முக்கியத்துவம் பெறுகிறது.

பொதுநூலகத்துறை இயக்குநரும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநருமான திரு சங்கர் ஐஏஎஸ் அவர்கள் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் இயக்குநராகத் திகழ்கிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் நிறைவுநாள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க உள்ளனர். எழுத்தாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சசிதரூர் நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

# மார்க்சிய லெனினியம் புதிய வெளியீடுகள்


## உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

மார்க்சியம் கற்போம், மார்க்சிடம் கற்போம்

மார்க்சின் மூலதனம் – சிறு நூல்கள் தொடராக




₹ 80/-




₹ 65/-




₹ 60/-

**தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற சொற்கள், துணைத் தலைப்புகள், கூடுதல் விளக்கங்கள்**
**கலைச்சொல் விளக்கப் பட்டியல், பெயர்க் குறிப்பு அகராதி**

லெனினியம் கற்போம், லெனினிடம் கற்போம்!




₹ 100/-

**தமிழ்ச்சூழலுக்கு ஏற்ற அரசியல் சொற்கள், எளிய இக்காலத் தமிழ்நடை,**
**கூடுதல் விளக்கங்கள், பெயர் விளக்கக் குறிப்பு**






# வீராயி காவியமும் தமிழ்ஒளியின் சமூகச் சிந்தனைகளும்

ஜெ.ராஜா

பாரதியாரின் வழித் தோன்றலாகவும், பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கி கவிதைகளைப் படைத்தவர் கவிஞர் தமிழ்ஒளி. கவிதை, கதை, கட்டுரை, இலக்கியத் திறனாய்வு, மேடை நாடகம், குழந்தைப் பாடல்களையும் எழுதியுள்ளார். கவிஞர் தமிழ்ஒளி தமிழ்ச் சமுதாயத்தில் சாதி வேற்றுமையில்லாத, ஏற்றத்தாழ்வற்ற சமூக அமைப்பை நிறுவக் கனவு கண்டார். இந்திய நாட்டிலும் உலகம் முழுவதும் எத்திசையில் எது நடந்தாலும் கொடுமைகளை எதிர்ப்பதிலும் நல்லதை வரவேற்பதிலும் ஆர்வம் காட்டினார். இந்தியச் சமுதாயத்தைக் கட்டிப்போட்டிருக்கும் சாதி மதக் கோட்பாடுகளையும், சுரண்டல் கொள்கைகளையும் ஆணிவேரோடு பிடுங்கி எறியும் வல்லமை தொழிலாளி வர்க்கத்துக்கே உண்டு என்பதை அவர் உணர்ந்திருந்தார். அதனால்தான் தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு பிரிவினரையும் வர்க்க அமைப்புகளில் ஒன்று திரட்டும் பணியைப் படைப்புகளில் பாராட்டினார், துணைநின்றார்.

*வீராயி என்னும் குறுங்காவியத்தை, படிக்காத விளிம்பு நிலை மக்களும், படித்துணர்ந்த பெருமக்களும் என இருவரும் உறவுகொள்ள மனங்கொண்டு எழுதியுள்ளார் தமிழ்ஒளி. இக்காவியம் முதல் 'தலித்' படைப்பு என்று திறனாய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் துயர்போக்குவதே தமிழ் ஒளியின் கொள்கையாகும். வீராயி காவியம் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட பெண்ணை தலைவியாக்கி வருணத்திலும் வர்க்கத்திலும் ஒண்டிக்கொண்டிருக்கும் பறையர் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணைக் காவியநாயகியாக படைத்து சமத்துவத்தை வெளிக்காட்டுகிறார் கவிஞர்.*

*ஐப்பசி மாத அடைமழை வெள்ளத்தில் மருதூர்சேரி முழுமையாய் அழிந்தது. இந்த நேரத்தில் பணம் படைத்தவர்கள் நிலையையும், உழைப்பாளர்களின் இரத்தத்தை உறிஞ்சிய முதலாளிகளின் கொண்டாட்டத்தையும், அடுத்த வேளை உணவுக்கு கண்ணீர் வடிக்கும் ஏழைகளின் நிலையை ஆவணப்படுத்துகிறார் கவிஞர். அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்படும் 'சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்குமிடையே எவ்விதமான சமரசமும் இருக்க முடியாதென்று புதுமையான எழுத்தாளர்கள் நம்புகிறார்கள். சத்தியம், அகிம்சை என்ற வாய்ப்பந்தமெல்லாம், இந்த விஷயத்திலே, முதலாளித்துவச் சுரண்டலின் மிருகத்தனத்தை மூடிமறைப்பதற்கான திரையேயாகும், என்ற புரிதலை இப்புனைவில் காணமுடிகிறது.*

**'மஞ்சத்தில், பஞ்சணையில் நெஞ்சுவக்கக் குந்தி**
**மகிழ்பவர்கள் அடைமழையைப்பொருட்படுத்த வில்லை**
**வெஞ்சுரத்தில் வெள்ளத்தை உண்டாக்குகின்ற**
**வீறுடைய தொழிலாளர் ரத்தத்தின் மேலே**
**கொஞ்சமுமே கூசாமல் உட்கார்ந்துகொண்டு**
**கும்மாளம் அடிப்பவர்கள் மழைக் கஞ்சுவாரோ?'**

*வீராயியும், அவள் தந்தையும் வெள்ளத்தில் மிதந்து வந்த வைக்கோற்போரில் அமர்ந்து தப்பிப்பிழைத்தனர். எனினும், வீராயியின் தந்தை இறந்துபோகிறார். பின் மாரி என்னும் பறையனும் அவன் மகன் வீரண்ணனும் வீராயியை தன் பிள்ளைப்போல் பார்த்துக் கொள்கிறார்கள். வறுமையின் காரணமாக வீராயி புதுப்பட்டி ஜமீந்தாரின் வயலுக்கு நடவு நட செல்கிறாள். பண்ணையார் இவளை எப்படியாவது நம் பிடியில் அடக்கி விடலாம் என்று காலத்தை எதிர்நோக்கி இருந்தான். அதிகாரம், பணம் இருந்தால் கீழ்சாதி மக்கள் எவரும் அவர்களுக்கு மானமரியாதையற்றவர்களாகவும், சுயமரியாதையற்றவர்களாகவும் கருதப்பட்டு அவர்களுக்கே உரிமையானவர்களாக மாற்றப்படுகின்றனர் என்ற புரிதலை கவிஞர் உருவாக்குகிறார். குறிப்பாக பெண்கள் யாவரும் செல்வம் படைத்தவர்களின் இச்சைகளுக்கு கட்டு பட்ட காட்சிப்பொருளாகவே உள்ளனர் மற்றும் பெண்களுக்கு அநீதியும் செய்கின்றனர் என்பதை கவிஞர் சமூக யதார்த்த நடப்பியலை பிரதிபலிக்கிறார். இடதுசாரி அமைப்புகள் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுடைய நலன்கள் கவனிக்கப்பட வேண்டும் என்றும், சமூகத்தில் காணப்படும் நியாயமல்லாத சமத்துவமின்மைகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் என்று கருதுகிற கொள்கையினை தமிழ்ஒளி பின்பற்றி எழுதியுள்ளார்.*

**'தனியாக இவள் கூலி கேட்க வந்தால்**
**கைப்பிடியில் அடக்கிடலாம் என்றே எண்ணிக்**
**கள்ளனவன் தீமையினை வளர்த்தான் நெஞ்சில்**
**இப்புவியில் பயமின்றி ஏழைமக்கள்**
**எவ்வாறு வாழ்வார்கள்?'**

*தங்கையின் கற்பினை சூறையாடிக் கொண்டிருந்த பண்ணையாரை வீரண்ணன் தட்டிக் கேட்டான். அங்கு பெருங் கூச்சல் கேட்டு வந்தவர்கள் வீரண்ணாவை பிடித்தனர்.*

**'தாழ்ந்திருக்கும் நாய்களுக்குச் சலுகை தந்தால்**
**தலை மேலே ஏறிடுவார்'**

*என்று பண்ணையார் தான் செய்த தவறினை பிறர்முன் செய்யாததைப்போலும்,*

*தன் மானத்தைக் காப்பாற்ற போலி பிம்பம் உடையவராகவும் இருப்பதை,*

*மேல் மட்டத்தில் உள்ளவர்களின் குணத்தை கவிஞர் தோலுரிக்கிறார்.*

**'காவல் செயுந்தன்மை யினர்எலும்பு போட்டால்**
**கடிக்கின்ற நாயானார் பணத்தினாலே!?**

*கவிஞனின் வரிகளில் மக்களின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்டவர்களான காவலர்கள் யாவரும் முதலாளிகளின் கைக்கூலிகளாகச் செயல்படுகின்றனர். இவர்கள் அதிகாரத்தில் உள்ளவர்களிடம் கையூட்டு வாங்கிக்கொண்டு வீரண்ணனுக்கு செய்யாத குற்றத்திற்கு இந்த சமூகத்தில் மரண தண்டனையே பெற்றுத் தந்தனர்!*

இங்கு ஏற்படும் சமூக முரணையும் முதலாளித்துவ வர்க்கத்தை கேள்வி கேட்கும் போக்கில் கவிஞர் உரைப்பது,

**'என்னஞாலமடா! ஏழைகளும்**
**இங்கேதான் வாழ்வதற்குச்**
**சின்ன தொருபுகல் உண்டோ? சிறிதேனும்**
**நெஞ்சினிலே இரக்கமுண்டோ?**
**தன்னலமே பெருகிற்றுத்; தரணியிலே**
**மக்களெல்லாம் வறுமை என்னும்**
**இன்னலிலே வதைகின்றார்! பணக்காரர்**
**மிதிக்கின்றார்! கொடுமை என்னே?'**

பாட்டாளி மக்களின் அன்றாட வாழ்வில் சந்திக்கும் இரண்டு சமூக முரணாக வறுமையும், பணக்காரர்களின் கொடுமையையும் எடுத்துரைக்கின்றார் கவிஞர்.

கவிஞரின் கூற்றானது ஜமீன்களும் இனாம்களும், எண்ணற்ற மக்களைச் சொந்த நாட்டை விட்டுத் துரத்தியிருக்கின்றனர். பணக்கார வகுப்பினர் நடத்தும் கொடிய அடக்குமுறை தாளாமல் பிறந்தநாட்டை 'கூற்று' என்று கருதி திரும்பிக் கூட பார்க்காமல் ஓடிவிட்ட ஏழைக் குடும்பங்கள் கணக்கற்றவை என்கிறார்.

வீரண்ணாவின் மரண தண்டனையின் பின் சிதறிய வீராயியின் குடும்பம் வேரையிழந்த மரமாகவும், வேலி இழந்த பயிராகவும், கூரை இழந்த குடிலாகவும் மாறியது. உழைக்க வலுவிருந்தும் தொழில் இல்லாமல் போனது. இவர்கள் நிலையறிந்த கங்காணி, சுமையற்ற தொழிலுண்டு, சுகமான சம்பளமுண்டு என்று ஆசை வார்த்தை கூறுவது என்பது இன்றளவும் ஏழை மக்களின் உழைப்புச் சுரண்டலுக்கு அடிப்படை ஆதாரமாக அமைவதை கவிஞர் உரைக்கிறார்.

**கொள்ளையிட முதலாளி கொண்டதொரு**
**திட்டமிது! முடித்துவைக்க**
**வெள்ளையரின் சலுகையுடன் விடப்பட்ட**
**'கருங்காலி' பேர், 'கங்காணி'**
**நொள்ளை யாராய் நொந்தவராய் நூறுதுயர்க்**
**கொண்டவராய் நுடங்கி வாழும்**
**சொள்ளையராம் ஏழையர்கள் சுடுகாட்டைச்**
**சுவர்க்கமென நம்பிச் சென்றார்!**

தமிழ்நாட்டில் வாழ வழிதெரியாமல் கங்காணியின் மலையையும் கரையச்செய்யும் பேச்சைக் கேட்டு பிழைப்பதற்காக மாரிக்கிழவனும் வீராயும் தென் ஆப்பிரிக்காவுக்கு செல்கின்றனர். அங்கு தேயிலைத் தோட்டத்தில் கடுமையான வேலை செய்யக்கூறி மிகப் பெரிய ஒடுக்கு முறைகளுக்கு ஆள கின்றனர். வேலை செய்யும் போது பாம்பு கடித்து மாரி இறந்து விடுகிறான். வாழவேறு வழியில்லாத வீராயி அங்கு தற்கொலைக்கு முயல்கிறாள், அங்கு இருந்த ஆனந்தன் என்ற இளைஞன் அவளைக் காப்பாற்றி விசாரிக்கும் பொழுது நம் நாட்டின் நிலையானது இவ்வாறாக உள்ளது எனக் கூறுகிறாள் வீராயி!

**'பிறந்த நாட்டினிலே – கொடும்**
**பேய்க எிருக்குதையா!**
**அறமும் இல்லை ஐயா! – என்**
**அண்ணனைக் கொன்றவர்கள்**
**சிறக்கும் அந்நாட்டை – நான்**
**திரும்பிப் பார்ப்பேனோ?**
**உறங்கும் நேரத்திலும்- என**
**துள்ளம் நடுங்குமையா!?**

இது முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் மீது உள்ள ஏழைகளின் குரலாக ஒலிக்கிறது. ஆனந்தன் வாழ்வு தருவதாகக் கூறி வீராயியினை தமிழ் நாட்டிற்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தான். இங்கு காதல் என்பது ஏழை பணக்காரன், உயர்வு தாழ்வு பார்ப்பதில்லை என்பதை உணர்த்துகிறது.

செல்லப்பக் கவுண்டரின் மகனாகிய ஆனந்தன் என்னும் இளைஞன் தன் காதலி வீராயியுடன் கப்பலில் ஏறி தப்பி தன் ஊர் வந்து சேருகின்றான். தந்தையும் பிறகு எந்த குலத்தைச் சார்ந்த பெண்ணென்று பின் விசாரித்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டார். ஆனால் புதுப்பட்டி ஊரைச்சார்ந்த சிலர் கடன் கேட்க குடமருதூர்க்கவுண்டரிடம் வந்தனர். வீராயி அவர்கள் வீட்டில் இருப்பதை கண்டவர்கள்,

**"வழக்கத்தை மாற்றுகிறீர்; இதென்னஐயா?**
**இந்தப் பெண் புதுப்பட்டி மாரி மகள் அன்றோ?**
**இல்லத்துள் பறைச்சியினை எப்படி நீர் சேர்த்தீர்?**
**சொந்தத்தை உம்மோடு நாங்களெலாம் கொள்ளல்**
**தோஷமெனக் கருதுகிறோம்; இக்கணமே நாங்கள்**
**வந்த வழி பார்த்தெங்கள் ஊருக்குச் செல்வோம்!**
**வயிற்றெரிச்சல் இதை சகிக்க எப்படியும் ஒப்போம்!**

கடன் வாங்க வந்தவர்கள் கடன் கூட வாங்காமல், சொந்த சாதியின் பெருமைக்காகவும், பறைச்சி என்று வீராயியினையும், அவள் அந்த வீட்டில் இருப்பது சாதிய தோஷம் என்றும் பிரிவினைகளை அடுக்கி வைப்பது என்பது சாதிய வன்மம் தலை விரித்தாடுவதை கவிஞர் இவ்வாறு விளக்குகிறார்.

'யாமெல்லாம் ஏழ்மையினால் காய்ந்த
பூண்டாக மாறிடுனும் குலத்தன்மை மாறோம்!'

வீராயியை பார்த்து 'ஈனநாய்ப் பறைச்சியினை இங்கே இழுத்து வந்தான்' என்று கூறுவது. ஏழை எளிய மக்களை, தாங்கள் தான் சமூகத்தில் உயர்ந்தவர்களென நினைத்து அவர்கள் பயன்படுத்தும் பிரதான வார்த்தையாக 'நாய், பன்றி, கழுதை' உள்ளது. இவை சமூக இழிவை பிரதிபலிப்பதாக உள்ளது.

அடுக்கடுக்காய் பேசிய வார்த்தையில் நொந்த ஆனந்தன், துடுக்கடக்கப் போகிறேன் மேல்சாதித் திமிரைத் தூரப்போய் வாழ்ந்து கொள்ளலாம் என்ற வார்த்தை இன்றைய இளைஞர்களுக்கு சமத்துவத்தை போதிக்கக் கூடியதாக இருக்கும் என்பதை கவிஞர்,

'சொந்த சாதியை எதிர்த்து சமத்துவத்தை நிலைநாட்ட முடியும்' என நம்பிக்கையடைகிறார்.

'தென்னவனும், பூவையுமே கைகோத்து கொண்டார்!
சிரிக்கின்றார், நடக்கின்றார்; சீர்திருத்தக்காரர்!

என்று கூறி புரட்சியை செய்யத் தொடங்குகின்றனர். இனி யார் அவர்களை தடுக்க முடியும் என்ற எண்ணத்தில் புரட்சிக்காரர்களாக மாறி தங்கள் வாழ்க்கையின் தொடக்கமான திருமணம் செய்யத் தீர்மானிக்கிறார்கள்.

சென்றார்கள் குடிசைக்குள்
ஆனந்த் சொன்னான்:
தெருவினிலே நீநின்று
மேளத்தைக் கொட்டு!
நன்றாகக் கொட்டிடுவாய்:
யாரேனுங்கேட்டால்
நடக்கு தொரு கலியாணம்
வீராயி, என்னும்
வென்றாளும் பெண்ணுக்கும்
ஆனந்தன் தனக்கும்
விமரிசையாய்க் கலியாணம்'

பறையடிப்பவன் பறையடிக்க ஆரம்பித்தான். எதிர் நின்ற சாதி வெறி! மத வெறிகள் எல்லாம் சுக்குநூறாக மாறப்போகிறது' என்று. அங்கு இருந்தவர்களின் காதெல்லாம் கிழியும்படி பறையடித்து விட்டான்.

'கவுண்டருக்கும் பறைச்சிக்கும்
கலியாணம்' என்று!

தன்மகனைத் தேடிக் கொண்டு தன் சாதியினருடன் வந்த கவுண்டர் வீராயியுடன்,

தன் மகன் மணக் கோலத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு அதிர்ந்து அடியாட்களுடன் மிரட்டினார்.

'நிமிர்ந்த வண்ணம் இருக்கின்றான் ஆனந்தன்; இந்தப்
பாரினிலே இது போன்ற அநியாயம் இல்லை
பறக்கிறது காற்றினிலே கவுண்டர் குல மானம்!
வேரினிலே பிடிக்கின்ற புழு விந்தப் பையன்!
விட வேண்டாம் இருவரையும் கொல்லுங்கள்'!

ஒட்டுமொத்த சமூகத்தின் எதிர்ப்புக்கு ஆளாகும் ஆனந்தன் வீரயியை மணமுடிக்க இருவரும் சாதிவெறியர்களால் தாக்கப்படுகின்றனர், ஆனந்தன் அஞ்சாமல் வீராயியை அணைத்த வண்ணம் நின்றான். பின் இருவரும் ஆணவக்கொலை செய்யப்படுகின்றனர்.

தாழ்ந்த குலத்தில் பிறந்த வீராயி வாழ்க்கை முழுவதும் துன்பத்தை ஏற்று வாழ்ந்ததன் காரணம் அவள் கீழ்சாதியில் பிறந்ததா? இப்படிப் பட்டவர்கள் முன்னேற வழி உண்டா? என கேள்விகள் அடுக்கிக்கொண்டே போகும் அளவிற்கு கவிஞர் தன் சிந்தனையைச் சாதியக் கொடுமைகளுக்கு உட்படும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும், அநீதி செய்பவர்களுக்கு எதிராகவும் நின்று காவியத்தை புனைந்திருக்கிறார்.

வீராயி காவியம் தண்ணீர் மழையில் தொடங்கி குருதி மழையில் முடிகிறது. சாதிஒழிப்பு, சமூகநீதி, சமத்துவத்துக்கான குரலாக தமிழ்ஒளியின் வீராயி படைக்கப்பட்டுள்ளது. சிங்கத்துக்கு தலையாகத்தான் இருப்பேன் ஒரு நாளும் வாலாக இருக்கமாட்டேன் என்று வாழ்ந்து காட்டியவர் தமிழ்ஒளி. கருப்பு சட்டையில் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கி சிவப்பு சட்டையில் வாழ்வினை முழுமையடையச் செய்து ஒடுக்கப்பட்ட மக்கள் குரலாக சங்கநாதமாக ஒலித்தவர் தமிழ்ஒளி.

**உதவிய நூல்கள்:**


1. தமிழ்ஒளி காவியங்கள் – புகழ் புத்தகாலயம். வெளியீடு 2003.
2. தமிழ்ஒளி கடிதம்- மாற்றுவெளியீடு - 2008.
3. புனைவின் வரலாறும் வாசிப்பின் அரசியலும், வீ.அரசு, இளவழகன் பதிப்பகம், வெளியீடு 2001.


●


கட்டுரையாளர்: உதவிப்பேராசிரியர், தருமமூர்த்தி
இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி,
இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை.




# சூழலை உட்கிரகிக்கும் தாயுமானவள்

ம.சோனியா

நவீனத் தமிழிலக்கிய எழுத்தாளரான சு.வேணுகோபால் தொடர்ந்து சிறுகதை, நாவல், விமர்சனக் கட்டுரைகளை எழுதிவருபவர். சு.வேணுகோபால் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தாலும், பெரும்பாலும் விவசாயம் சார்ந்ததே எழுதி வருகிறார். தி.ஜானகிராமன், கு.அழகிரிசாமி, ஜெயகாந்தன் ஆகியோரை முன்னோடியாகக்கொண்ட வேணுகோபாலின் முதல் நாவல் 'நுண்வெளி கிரகணங்கள்'. அதனைத் தொடர்ந்து 'நிலமென்னும் நல்லாள்' நாவலும் 'கூந்தப்பனை', 'திசையெல்லாம் நெருஞ்சி', 'பால்கனிகள்', 'ஆட்டம்', 'வலசை' முதலிய குறுநாவல்களும் 'வெண்ணிலை', 'பூமிக்குள் ஓடுகிறது நதி', 'தாயுமானவள்', 'களவு போகும் புரவிகள்', 'உருமால்கட்டு', 'உயிர்ச்சுனை', 'ஒரு துளி துயரம்' முதலிய சிறுகதைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. இதுதவிர 'தமிழ்ச்சிறுகதை பெருவெளி', 'தமிழ்ச்சிறுகதை ஒரு காலத்தின் செழுமை' உள்ளிட்ட விமர்சனக் கட்டுரைகளையும் இலக்கிய உலகிற்கு வழங்கியவர்.

சு.வேணுகோபால் முதன்மையாக அவருடைய சிறுகதைகளுக்காகவே நினைவு கூரப்படுபவர். அவர்தம் கதைகளின் வாயிலாக நடுத்தர மக்களின் வாழ்வியல், கிராமியச்சூழல், விளிம்புநிலை மக்களின் துயரம், விவசாய நசிவு, பாலியல் சிக்கல்கள், குடும்பஉறவுச் சிதைவுகள், சமூக ஏமாற்றம் முதலானவற்றைக் கதைகளில் ஊடாடும் கதைமாந்தர்களைக் கொண்டு காத்திரமாக எடுத்துரைப்பவர். சூழலை உட்கிரகித்துப் படைப்புகளை வெளிக்கொணரும் சு.வேணுகோபாலின் நூல்களுள் 'தாயுமானவள்' என்ற சிறுகதைத் தொகுப்பும் முக்கியமானது. இதில் மொத்தம் பதிமூன்று சிறுகதைகள் உள்ளன.

உயிர்க்கருணையைச் சுட்டும் சிறந்த சிறுகதை 'அழைப்பு'. ஐந்து ஆண்டுகளாக ஏழு வீடு மாறிய நிலையில் சொந்தமாக வீடு வாங்கிக் குடிப்பெயர்ந்த சண்பகத்தின் கணவன் காட்சியிலிருந்து கதை நகர்கிறது. அந்தத் தெருவில் இருக்கும் ஒரு தாய் நாயானது ஒவ்வொரு வீட்டின் கதவையும் திறக்குமாறு அழைத்து அங்கிருக்கும் தன் குட்டிகளை ஒன்றிணைத்துப் பாலூட்டுவதிலிருந்து உயிரியல்பு பேசப்பட்டுள்ளது. இக்காட்சியைத் தினந்தோறும் ஏக்கத்துடன் பார்க்கிறாள் சண்பகத்தின் வீட்டில் குடியிருக்கும் லதா. ஒருநாளில் தாய் நாய் காணாமல் போகும் சூழல் வரும்போதும் அக்குட்டிகளிடையே காணப்பட்ட ஒற்றுமையுணர்வு மூலம் உயிர்களுக்கிடையேயான நுண்ணுணர்வைக் கடத்துகிறார் சு.வேணுகோபால். இறுதியில் தாய் நாயின் பிரிவு லதாவிற்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவே, தன் குழந்தைகளை விட்டுப் பிரிந்து வந்தமைக்கு வருந்தி, திருந்துவதுடன் கதை முடிகிறது. அஃறிணை உயிர்களின் வாழ்க்கையுடன் உயர்திணையை இணைத்துப் பேசும் மரபு நம்முடையது. அந்தத் தொடர்ச்சி அறுபடாமல் இந்தக் கதைவரை நகர்ந்து வந்திருக்கிறது.

'அழைப்பு' கதையின் தொடர்ச்சியாக இதற்கடுத்து இடம்பெறும் 'தாயுமானவள்' கதையை வாசிக்கலாம். நேரடியாகக் கதைக்குள் செல்லாத கதையாசிரியர், இரண்டு காட்சியாகப் பிரித்து கதையை அணுகியுள்ளார். முதலாவதாக, நல்லமுத்துக் கவுண்டர் விளை நிலங்களை அழித்து, தன் மகன்களுக்கு பிளாட் போட முடிவு செய்யும் திட்டத்திலிருந்து விவசாய அழிவைக் காட்சிப்படுத்தியுள்ளார். இரண்டாவதாக, தாய் பிரிந்து சென்ற நிலையிலும் தன் தம்பி, தங்கையை ஒரு தாயுடைய இடத்திலிருந்து வழிநடத்தி தாமதமாகக் கல்லூரிக்குச் செல்லும் மூத்த மகளாகச் செல்வியைக் காட்சிப்படுத்துகிறார். எதிர்பாராவிதமாகப் பிரிந்துசென்ற தன் தாயைச் செல்வி சந்திக்கும் சூழல் வரவே அடக்க முடியா கோபத்துடன், "எம் பிள்ளைகள வளக்க எனக்குத் தெரியும். எப்பிடி வந்தியோ அப்பிடியே போயிடு" என உமிழும் கோப வார்த்தைகளிலிருந்து தாய் இல்லாமல் தவிக்கும் வலியை உணர்த்துகிறார் சு.வேணுகோபால்.

வாழ்க்கையில் மனிதர்களின் மேன்மை வெளிப்படும் தருணங்களைப்போல கீழ்மை வெளிப்படும் தருணங்களையும் அடையாளப்படுத்திக் காட்டுபவர் சு.வேணுகோபால். மது பாட்டில்களைப் பொறுக்கி அன்றாடப் பொழுதினைக் கழிக்கும் சாதாரண மனிதனின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் 'பூமாரியின் இன்றைய பொழுது' என்ற சிறுகதையிலிருந்து இதனை உணரலாம். பாட்டில்களைப் பொறுக்கும்போதே அவற்றைத் தரத்திற்கேற்ப வகைப்படுத்துகிறான் பூமாரி. இப்படியான ஏற்றத்தாழ்வு என்னும் கற்பிதங்களைத் தன் சிறுவயது வாழ்வினூடான அனுபவத்திலிருந்தே பெறுகிறான் என்பதை அதற்கடுத்ததாக விவரிக்கப்படும் அவனது மாமா வீட்டின் நிகழ்வே எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. சமூகத்தில் இன்றும் குடி வெறியர்களால் நடந்தேறும் அகப்புற பாலியல் மீறல்களைப் பூமாரியின் அக்காவிற்கு நடந்த சம்பவத்தின் வாயிலாக அம்பலப்படுத்தியுள்ளார். சில காலங்களுக்குப் பிறகு, நினைவிழந்த நிலையில் ஒற்றை முலையோடு மதுரை வீதியில் தன் அக்காவை காண்கிறான் பூமாரி. அவளோ, "ஒரு முலையை அறுத்திட்டா விட்டுருவேனா, திருகி எறிஞ்சேன்னா ஊரே சாம்பலாகிடும். இப்ப எறியவா பத்தினிடா நான்" என்பதிலிருந்து சிலப்பதிகாரத் தொன்மத்தை நினைவுபடுத்துகிறார் சு.வேணுகோபால். நிகழ்காலத்தைத் தொன்மத்துடன் இணைத்து பெரும் திறப்பை இக்கதையில் உருவாக்கியிருக்கிறார். சாதிய மேலாதிக்கத்தை 'விலகிச்செல்லும் பாதை' கதையிலும் சு.வேணுகோபால் காட்டியுள்ளார். கந்தசாமிக்கும் அவருடைய மகள் ஜோதிக்குமான் போராட்டம்தான் கதை. தன் மகள் ஜோதி காதலிக்கும் இளைஞன் தலித் என்பதால் அவர்களின் காதல் திருமணத்திற்குத் தடையாக நிற்கும் தந்தையை எதிர்த்துப் போராடும் பெண்ணாக ஜோதியைக் காட்டியுள்ளார் சு.வேணுகோபால். கந்தசாமியின் ஏற்றுக்கொள்ளா நிலையிலிருந்து சமூகத்தில் இன்றுவரை மாறாமல் நிலவும் சாதிய நிலையைக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். 'தன்னிலிருந்து விடுதலை அடைகிறவன்தான் மார்க்சியன்' முதலான மார்க்சியக் கருத்துகள் விஸ்வம் ஐயா, மோகன் இடையேயான உரையாடல்வழி கதையில் ஆங்காங்கே ஊடாடவிட்டுள்ளார். பார்வையற்றோரின் வாழ்வியலை கந்தசாமி விஸ்வம் ஐயாவைப்

பார்த்து வியப்பதினூடாக, ‘விஸ்வம் ஐயாவிற்கு காதுகள் கண்களாகிவிட்டன. கண்களுக்கானதையும் காதுகளால் காணப் பழகிவிட்டார்’ எனப் பார்வையற்றோரின் வாழ்வியலை நம்மிடையே அழகாகக் கடத்தியுள்ளார். இறுதியில் மதம் மாறி நடக்கும் திருமண நிகழ்வில் எதிர்பாராவிதமாய் கலந்துகொள்ளும் சூழல் வரவே தன் மகளை நினைத்துப் பார்க்கிறார் கந்தசாமி.

இத்தொகுப்பில் ‘காத்திருப்பு’ என்றொரு கதை உள்ளது. இக்கதையின் ஜெயக்குமார் பேருந்து நிறுத்தத்தில் பேருந்திற்காகக் காத்திருக்கும் தருவாயில் அவன் எதிர்கொள்ளும் மனிதர்கள் பலர்; அவர்களுள் அறிந்தவர்கள் சிலர்; அறியாதவர்கள் சிலர். அறிந்தவர்களாயினும் கண்டும் காணாமல் செல்பவர்கள் சிலர். ‘காத்திருக்கும் நாட்களில்கூட பொழுதுகள் ஒன்றேபோல் தோன்றினாலும் அவை ஒன்றுபோல் அமைவதில்லை. அதே இடத்தில் அதே மனிதர்களைப் பார்க்கும்போதும் அதே விதத்தில் எண்ணங்கள் வருவதில்லை’ என ஜெயக்குமார் எண்ணுகிறான். இத்தகைய மனிதர்களோடு பேருந்தில் பயணம் செய்வதைக் காட்டிலும் தனியாளாக வண்டியில் செல்வதே மேல் என்னும் எண்ணத்தோடு ‘வண்டி வாங்கியே தீர வேண்டும்’ என்ற முடிவை ஜெயக்குமார் எடுப்பதாகவும், காத்திருப்பின் கசப்பான அனுபவத்தை விவரிப்பதாகவும் அமைகிறது ‘காத்திருப்பு’ கதை.

நம்பிக்கைகளையும், கனவுகளையும் வாரி மாயமாக்கிவிட்டுப் பேரச்சத்தையும் பேரவலத்தையும் தருவதுதான் வாழ்க்கை. இவ்வாழ்வியல் தத்துவத்தைக்கொண்ட கதை ‘மறைந்த பின்னும் பறக்கும் பறவை’. வால்பாறையைச் சுற்றிவிட்டு வரும் நண்பர்கள், அதனூடாகக் காட்டப்படும் இயற்கைக் காட்சிகள், பளியர் என்ற இனம் பற்றிய குறிப்பு, அந்த மலைப்பகுதியில் திடீரெனக் கீழே விழுந்து மரணத்தைத் தழுவும் ஏழைத் தந்தையான மணிமாறனின் இம்முடிவிற்கான காரணம் முதலானவற்றை விவரிப்பதாய் அமைகிறது கதை. ஓவியனான மணிமாறனின் கனவுகள் எல்லாம் டிஜிட்டல் பேனர் வருகையால் முறிந்து போதல் மூலம் நவீனமயமாகும் காலச்சூழலால் ஏற்படும் பொருளாதாரப் பின்னடைவுகளைக் கூறுகிறார். சிறுவயதிலே பள்ளிக்குச் செல்லாமல் மாறுவேடம் அணிந்து பிச்சை எடுத்துப் பிழைப்பு நடத்தியமையை மணிமாறனின் நண்பர் கூறுவதன் மூலம் அவர்களது வறுமையின் உச்சத்தைக் காட்டுகிறார் சு.வேணுகோபால். இறுதியில் தன் மகளுக்குக் கொடுத்த வாக்குறுதியினை நிறைவேற்ற முடியாமல் போன விரக்தியே மணிமாறனின் தவறான முடிவிற்குக் காரணமாகிறது என்ற வாசிப்பை இக்கதை ஏற்படுத்துகிறது.


மனித மனத்தின் உச்சங்களையும், வாழ்வின் சரிவுகளையும் தொடர்ந்து கவனப்படுத்துபவர் சு.வேணுகோபால். சரவணன் தன் தந்தைக்குத் தெரியாமல் கடன்வாங்கி, நண்பனின் கல்விக்காக உதவியமையை மையமிட்டக் கதை, ‘கார்காலம்.’ கதையின் ஆரம்பத்தில் காயிலாங்கடை வைப்பதற்காகப் பணம் கடனாக வாங்குவதற்கு அலைந்து திரியும் ஏழைத் தந்தையாக ஜெயராமைக் காட்சிப்படுத்துகிறார். அவரது மகன் சரவணன் சூழலை அறிந்துகொள்ளாது கடன் வாங்கியதாகத் தவறாகப் புரிந்து கொண்டார் ஜெயராம். அதன் காரணமாகத் தன் மகனை கல்லூரிக்குள் வைத்து ஜெயராம் கோபத்தோடு அடித்தும் விடுகிறார். பின்பு நண்பனின் கல்விக்காகச் சரவணன் உதவியமையை அறிந்து ஜெயராம் வருந்துவதாகக் கதை அமைகிறது. இக்கதையில் இன்றைய காலத்து இளைஞர்களின் யோசிக்காமல் உதவும் மனப்பாங்கையும் பெரியவர்களின் தவறான புரிதலையும் இக்கதை விவரிக்கிறது.

சு.வேணுகோபால் வாழ்வின் அவல நிலையை மூர்க்கத்தனத்துடன் எடுத்துக்காட்டுபவர். அம்மாவின் பாலியல் மீறலை நேரில் பார்த்துவிடும் மகனின் மனநிலையும் மகனுக்குத் தெரிந்துவிட்டதை அறிந்த தாயின் மனநிலையும் ‘சொல்ல முடிந்தது’ என்ற கதையினூடாக எழுதியிருக்கிறார் சு.வேணுகோபால். இந்தப் பாணியிலான பல கதைகளை இவர் ஏற்கெனவே எழுதியிருக்கிறார். இதுபோன்ற அற மீறல்களைத் தன் அருமையான மொழியின் வழியாகச் சிறப்பாக வாசிப்பவர்களுக்குக் கொண்டு சேர்த்துவிடும் ஆற்றல் சு.வேணுகோபால் மொழிக்கு உண்டு. அது இந்தக் கதையிலும் நிகழ்ந்திருக்கிறது.

‘தாயுமானவள்’ தொகுப்பு, மனித வாழ்வியலை யதார்த்தப் போக்குடன் அணுகியிருக்கின்றன. சமூகத்தில் மாறிய செயல்பாடுகளையும் இன்றளவும் மாறாமல் நிலவும் போக்குகளையும் சு.வேணுகோபால் கவனத்துடன் வெளிப்படுத்தியிருக்கிறார். நெல்லிலிருக்கும் உமியைப் புடைத்தல் போல மனிதவாழ்வின் சிக்கல்களை இக்கதைத் தொகுப்பு புடைத்துக் காட்டுகின்றது. பல்வேறு சூழல்களில் அன்றாடம் எதிர்கொள்ளும் பலதரப்பட்ட மனிதர்கள் கதைகளில் உலவுவதை வாசிப்பவர்களால் உணர முடியும். வாசிப்போர் தம் வாழ்வின் பல சூழ்நிலைகளுடன் பொருத்திப் பார்க்கும் தன்மையுடன் இக்கதைத் தொகுப்பை அணுகலாம்.

●

**கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வு மாணவி,**
**மாநிலக் கல்லூரி, சென்னை.**




## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஜனவரி மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5822 | 1895 | 5817 | 2974 | 358 | 983 | 318 | 7982 |
| 3620 | 7979 | 5818 | 1128 | 1550 | 984 | 7846 | 1718 |
| 3741 | 3738 | 5820 | 2715 | 1717 | 982 | 5514 | 1719 |
| 3747 | 1894 | 5819 | 1891 | 2669 | 5411 | 5512 | 3745 |
| 1893 | 1897 | 5821 | 2716 | 2796 | 2073 | 5513 | 7983 |
| 1896 | 1913 | 5408 | 5371 | 2570 | 5511 | 3744 | 2075 |
| 5372 | 3737 | 7981 | 3739 | 2571 | 6878 | 8974 | 5823 |
| 7980 | 3736 | 5515 | 3740 | 5409 | 317 | 8975 | 5413 |
| 1892 | 5814 | 5516 | 5373 | 5410 | 316 | 8567 | 7847 |
| 2074 | 5815 | 5517 | 356 | 5410 | 315 | 8569 | 5363 |
| 3742 | 5816 | 8566 | 357 | 5151 | 319 | 5412 | |

தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00. / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஒசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

கட்டுரை



# அம்பறாத்தூணியில் அசைச்சொல்

சி.சங்கீதா
&
முனைவர் பா.இராஜ்குமார்

தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம் அவர்களின் சீடப்பரம்பரையுள் ஒருவர், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வீரநாராயண மங்கலத்தில் பிறந்த நாஞ்சில்நாடன். இவரது இயற்பெயர் க.சுப்பிரமணியம். இன்றும் கவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம் போன்ற களங்களில் தொடர்ந்து இயங்கி வருபவர். இன்றைய தலைமுறைக்கு ஏற்ற முறையில் கம்பன் வழியாகத் தமிழின் மேன்மையை எடுத்துரைக்கும் வல்லமை பெற்றவர்.

கம்பராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பம்பாயில் பணிபுரிந்த காலத்தில் பம்பாய் தமிழ்ச் சங்கத்தினர் தொடங்கிய கம்பராமாயண வகுப்பில், திரு.ரா.பத்மநாபன் அவர்களிடத்தில் கம்பனைக் கற்றுத் தேர்ந்தவர். இவருக்கு கம்பனைக் கற்றுக் கொடுத்த ஆசிரியர் திரு.ரா. பத்மநாபன். இவர் தமிழ்க் கடல், சிவமணி ராய. சொக்கலிங்கம் அவர்களின் தலை மாணாக்கர். இவருக்கு "சூடிய பூ சூடற்க" என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக 2010 ஆம் ஆண்டிற்கான சாகித்திய

அகாதெமி விருது வழங்கப்பட்டது. மேலும் கனடாவின் உயரிய விருதான 'இயல் விருது' 2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

2013-ஆம் ஆண்டு காரைக்குடி கம்பன் விழாவில் நாஞ்சில்நாடன் நிகழ்த்திய ஆய்வுச் சொற்பொழிவு உமா பதிப்பகத்தாரால் "அம்பறாத்தூணி" என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது. கம்பனின் சொற்களை அம்பாகவும், அச்சொற்களை சேமித்து வைக்கும் சொற்கிடங்கினைத் தூணி எனவும் பொருள் கொண்டு "கம்பனின் அம்பறாத்தூணி" என்று பெயரிட்டுள்ளார். இந்நூலில் பதினைந்து தலைப்புகளில் கம்பனைக் கட்டுரை வடிவில் மிகச் செறிவாகப் பதிவு செய்திருக்கிறார். இக்கட்டுரைத் தொகுப்பில் அசைச்சொற்கள் குறித்த நாஞ்சில்நாடனின் பதிவுகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

## இடைச்சொற்கள்

இடைச்சொற்கள் மொழிக்கு முன்னோ, பின்னோ, இடையிலோ வரும் பொழுது பெயரைச் சார்ந்து வரின் அப்பெயரின் பொருளையே தமக்குப் பொருளாகவும், வினையைச் சார்ந்து வந்தால் வினைப்பொருளையே தமக்கும் பொருளாகப் பெற்று வரும். இடைச்சொற்களுக்கென தனிப்பொருள் இல்லை.

சேனாவரையர் 'பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய சொற்களின் முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பாலும் இடையில் வருதலால் இடைச் சொல்லெனப் பெயர் பெற்றது' என இடைச் சொல்லினை விளக்குகிறார்.

தெய்வச்சிலையார், 'இடை என்பது இடம், இடையில் (நடு) ஆகிய இரண்டன் அடியாக இடைச் சொல்லாயிற்று என்று கூறுகிறார். மொழிக்கு முன் வந்தாலும் பின் வந்தாலும் பெரும்பான்மை இடையில் வருதலால் இடைச் சொல்லாயிற்று என்ற சேனாவரையர் கருத்தையே நச்சினார்க்கினியரும் கூறுகிறார்.

## இடைச்சொல் வகைகள்

தொல்காப்பியர் இடைச் சொற்களை ஏழாகப் பகுத்துள்ளார்.

1) சாரியைகள்
2) பாலிட விகுதிகள் மற்றும் காலங்காட்டும் இடைநிலைகள்
3) வேற்றுமை உருபுகள்
4) அசைநிலைச் சொற்கள்
5) இசை நிறைச் சொற்கள்
6) குறிப்பு உணர்த்தும் சொற்கள்
7) உவம உருபுகள்.

## தனித்தன்மை

இடைச்சொல்லிற்கென தனித்தன்மை இல்லாத காரணத்தை ச.வே.சுப்பிரமணியன் தனது தொல்காப்பிய உரைவளக் கோவையில்,"தமக்கென தனித்தன்மை இல்லாச் சொற்களாக அமைவன இடைச் சொற்கள். ஒரு சொல் பல பொருள்களை உணர்த்தலாம். பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்தலாம். ஆனால் அச்சொற்களுக்கெனத் தனித்தன்மை இல்லை. பெயர்ச்சொற்கள் வேற்றுமை யுருபு ஏற்கும். வினைச்சொற்கள் கால இடைநிலையை ஏற்கும். இடைச்சொற்கள் இதுபோன்று வேற்றுமை உருபுகளையோ கால இடைநிலைகளையோ, ஏற்காது. அதனால்தான் அவற்றுக்குத் தனித்தன்மை இல்லை" எனக் குறிப்பிடுகிறார் (சொல்லதிகாரம், இடையியல், 54).

## இயல்புகள்

அனைத்து இலக்கண நூலார் கருத்துப்படி இடைச்சொற்களின் இயல்புகளை நான்காகப் பகுக்கலாம் என வேல்மயில் குறிப்பிட்டுள்ளார் (நன்னூலும் பின்னைய இலக்கண நூல்களும் ப.317).


அவையாவன,

1) "இடைச்சொற்கள் தமக்கு இயல்பில; தனித்து வழங்குவன அல்ல.
2) அவை பெயர் வினைகளின் வழி அவற்றைச் சார்ந்து இயங்குவன.
3) பொருள் வேற்றுமை செய்யும் சொற்களாக அமைவன.
4) இடைச்சொல்லிற்கு பொருள் உண்டு".

இடைச்சொற்கள் இலக்கியத்தில் பெறும் இடத்தை நாஞ்சில் நாடன், "செய்யுளுக்கான ஓசை அமைதிக்காகப் பயன்படுத்தப்படும் சொல்லுக்குப் பல சமயங்களிலும் பொருள் உண்டு. கறிவேப்பிலை சமையலில் கூட்டும் சுவை என்ன? அது சுவை கூட்டுவதில்லை. ஆனால், வாசனை பெருக்கும். வாசனையும் சுவையும் ஒரு அங்கம் தான். எனவே, அசைச்சொல்லுக்கு குறிப்பாகப் பொருள் இல்லை என்று பேசும் நேரத்தில், அது மிகைப்படுத்திக்காட்டும் பாவத்தைப் புறக்கணிக்கலாகாது" (ப.220) என இடைச் சொல்லின் சிறப்பினை நாஞ்சில் நாடன் விளக்கியுள்ளார்.

## அசைச்சொல்லின் பொருள்

அசைச்சொல்லுக்குப் பொருள் உண்டா இல்லையா என்பதில் கருத்து மாறுபாடு நிலவுகிறது. உரையாசிரியர்கள் பலரும் பொருள் இல்லை




கம்பனின் அம்பறாத்தூணி
நாஞ்சில் நாடன்
விஜயா பதிப்பகம் | விலை: ரூ. 250/-

என்ற கருத்துடையவர்களாகவே திகழ்கின்றனர். நச்சினார்க்கினியர் மட்டும் மாறுபட்ட கருத்தை முன் வைக்கிறார்."தமக்கோர் பொருளின்றித் தான்சார்ந்த பெயர்களை அசையப் பண்ணும் நிலைமையாய் வருவன இவை" என்று கூறுகிறார்.

சேனாவரையர், "பொருளுணர்த்தாது பெயரோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின் அசைநிலையாயிற்று" என்கிறார்

நன்னூல் உரைகளும், "அசைநிலை என்பது பொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும், வினைச்சொல்லோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது" என்றே கூறுகிறது.

இவ்வாறு உரையாசிரியர்கள் அசைச்சொற்களுக்குப் பொருள் இல்லை என்று கூறும் கருத்தினை மொழியியல் அறிஞர்கள் மறுத்துள்ளனர். அசைச்சொல்லுக்கும் பொருள் உண்டு என்பதை இசரயேல், நடராசன், தேவநேயப் பாவாணர் முதலியோர் பல்வேறு வகைகளில் நிறுவியுள்ளனர்.

இசரயேல் அசைச்சொற்கள் தரும் பொருளினை அடிப்படையாகக் கொண்டு அவற்றை வகைப்படுத்தி உள்ளார்.

1) கவனத்தை ஈர்ப்பன: ஏ, மற்று, குரை, யா, கா பிற, பிறக்கு, கண்டீரோ, கேட்டை.
2) உணர்ச்சியை வெளிப்படுத்துவன: அந்தில், அரோ,கா ,யா , போ ,ஆக, ஆகல், என்பது, மாது.
3) பொருட் சிறப்பு: (ஏ) ஆர்
4) அன்பேவல்: க, மதி, இகும், ஓ, மா
5) ஐயப்பாட்டைக் குறிப்பது: போலும்
6) பிறப் பொருளது: ஆங்க.

**நாஞ்சிலாரின் விளக்கம்**

“அசைச்சொல் என்பதற்கு சார்ந்து வரும் இடைச்சொல் என்று லெக்சிகன் விளக்கம் அளிக்கிறது. அசைச்சொற்களுக்கு உணர்ச்சிதான் பொருள். உணர்ச்சி ஒன்பான் என்மனார் புலவர். ஒரே அசைச்சொல் இடம் கருதி வேறு வேறு பாவங்களில் பொருள் தரும். ஐயோ என்னும் அசைச்சொல் அவலம் தரும் ஆச்சரியமும் தரும் அம்மா என்னும் அசைச்சொல்லும் அவ்வாறே! இரக்கப் பொருள்படும், சினம் தொனிக்கும், வியப்பு காட்டும்” (ப.219) என அசைச்சொல்லிற்கான பொருளை விளக்கியுள்ளார். எனவே அசைச்சொற்கள் பொருள் உடைத்து என்று நிறுவியதன் மூலம் ‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’ என்ற தொல்காப்பியரின் கூற்று உண்மை என்பதை நாஞ்சில்நாடன் விளக்கியுள்ளார்.

இக்கட்டுரையில் அடா, அரோ, அன்றே, ஆல், அன்றோ, கொல், எல்லே, அம்மா, மன்னோ, ஐயோ, மாதோ போன்ற இடைச்சொற்களை விளக்கியுள்ளார். இவ்விடைச் சொற்களை தொல்காப்பியர் ‘தத்தம் குறிப்பில் பொருள் செய்குந’ என்ற இடைச்சொல் பாகுபாட்டில் ஆறாவது வகையாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையுள் தொல்காப்பியர் இருபத்தாறு இடைச்சொற்களைச் சுட்டியுள்ளார். அவையாவன: மன், தில், கொன், உம், ஓ, ஏ, என, என்று, மற்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல், அம்ம,ஔ, எனா, என்றா, உந்து, ஓடு, அந்தோ, அன்னோ, அன்றே, நன்றே என்பவை ஆகும்.

அசைச்சொற்களை கம்பரின் வழி விளக்க சுந்தரகாண்டம், யுத்த காண்டம், பால காண்டம், அயோத்தியா காண்டம் ஆகிய நான்கு காண்டங்களில் பதினேழுக்கும் மேற்பட்ட படலங்களில் உள்ள பாடல்களைப் பயன்படுத்தி நாஞ்சில்நாடன் அசைச்சொற்களை மிகச்சிறப்பாக விளக்கியுள்ளார்.

## அசைச் சொற்களின் பயன்பாட்டு வடிவம்

இக்கட்டுரையில் கம்பன் பயன்படுத்தியுள்ள அசைச்சொற்களின் சிறப்பினையும் அவற்றின் தற்காலப் பயன்பாட்டு வடிவத்தினையும் நாஞ்சில் நாடன் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

★ "அடா என்பதன் வழியாக அதிசயம், இகழ்ச்சி, இரக்கம் என்ற மூன்றையும் விளக்கலாம்.

★ அடா - வைப் போன்று அடீ என்பதும் இடைச்சொல்லாய் இடம்பெறும் என்பதை, ஆரண்ய காண்டம், சூர்ப்பனகைப் படலம், இலக்குவன் சூர்ப்பனகையின் உறுப்புகளை அறுக்க முனைந்த போது,

**'நில் அடீஇ' என கடகினன்,**
**பெண் என நினைத்தான்;**

என்று பாடல் நீளும். 'நில் அடீஇ' என்பது 'நில் அடி' தான். புலவன் அளபெடை போடுகிறார், ஓசைக்காக (ப.224) என்று விளக்கியுள்ளார் .

★ அரோ என்பது ஓரசைச்சொல். ஓசைக்காகப் பயன்படுத்தப்படுவது. பெரும்பாலும் ஓசை கருதியும் ,வியப்பு கருதியும் பேசும் அசை.

★ அன்றே - ஈரசைச் சொல் . செய்யுள் அசைக்காகவும் உணர்ச்சி கருதியும் கையாளப்படும் அசைச்சொல். இதன் பொருள் -அல்லவா? "It is an interrogative equivalent to an emphatic affirmative என்கிறது லெக்சிகன்" (ப.226).

★ ஆல் என்பது பெரும்பாலும் இலக்கண நிரவலுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது.

★ அன்னோ - வியப்புப் பொருளில் வரும் இரக்கக் குறிப்பு என்றும் சொல்வார்கள்.

★ எல் என்பது விளிச்சொல். எல்லே என்பதை உரையாசிரியர்கள் இரக்கக் குறிப்பிடைச் சொல் என்பார்கள்.

★ ஐயோ இவ்விடைச்சொல் பொதுவாக அவலச்சுவை தரும். "அச்சோ, ஐயோ, என்னே, எற்று, எவன் எனும் சொல் அதிசயம் உற இரங்கல்" என்கிறது சூடாமணி நிகண்டு. ஐயோ என்றால் அதிசயக் குறிப்பு, இரக்கக் குறிப்பு, சோகக் குறிப்பு என்றும் லெக்சிகன் உரை தரும்" (ப.237) ஆனால் கம்பன் அதிசயக் குறிப்பில் ஐயோ என்னும் அசைச்சொல்லைக் கையாளுவதாகத் தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்கியுள்ளார்.

★ மாதோ - பெரும்பாலும் சாந்தமான வியப்புத் தொனிப்பது 'மாதோ' எனும் அசை.

**"இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச்சொல்லே"**
**(தொல்.சொல் .எச்சவியல், 938)**

என்ற இந்நூற்பாவிற்கு ஏற்ப இடைச்சொற்கள் என்பன அனைத்தும் பெயர் வினைகளை அடுத்து நின்று அவற்றின் பொருளை வேறுபடுத்தும் சொற்களே என்கிற கருத்தை சிறப்பாக விளக்கியுள்ளார்.

"அற்புதமான தருணங்களில், கோபம், வியப்பு, அவலம், கருணை என பற்பல பாவங்களை சொல்லில் கொட்டியபின் மேலும் உணர்ச்சி இருக்கும்போது அல்லது இனி மேல் சொல்லால் பயனில்லை என்று அவன் கருதிய போது தன் தோல்வியை வெல்லக் கம்பன் பாவிப்பது அசைச்சொற்கள்" (ப.221) என்று நாஞ்சில்நாடன் கூறுகிறார்.

## நிறைவுரை

"கம்பனின் அம்பறாத் தூணி" என்ற இக்கட்டுரைத் தொகுப்பின் வழி,

★ இடைச்சொற்கள் என்பவை வெற்றுச் சொற்கள் அல்ல.

★ வார்த்தைகள் அற்ற நிலையில் குறைந்த சொற்களில் அதீத உணர்ச்சியை வெளிப்படுத்தும் சொற்கள் என்ற கருத்தை நாஞ்சில்நாடன் நிறுவியுள்ளார்.

## துணை நின்ற நூல்கள்


★ இசரயேல். மோ., தென்மொழிச் சுவடி - ஓலை 1, கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் 1965.

★ சுப்பிரமணியன். ச.வே., தொல்காப்பிய உரைவளக் கோவை, மெய்யப்பன் பதிப்பகம் - சிதம்பரம்

★ நாஞ்சில்நாடன். கம்பனின் அம்பறாத் தூணி, உமா பதிப்பகம், சென்னை, மு.ப. மார்ச் 2013.

★ தமிழண்ணல், தொல்காப்பியம், மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, நான்காம் பதிப்பு, ஜூன் 2014.

★ வேல்மயில்.த., நன்னூலும் பின்னைய இலக்கண நூல்களும், காவ்யா வெளியீடு, சென்னை.


●


**கட்டுரையாளர்**


**சி.சங்கீதா**
முனைவர் பட்ட ஆய்வாளர், பிஷப் ஹீபர் கல்லூரி (த)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி - 620 017

*நெறியாளர்*


முனைவர் பா. இராஜ்குமார்
இணைப்பேராசிரியர் & துறைத் தலைவர்,
பிஷப் ஹீபர் கல்லூரி (த), (பாரதிதாசன்
பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),
திருச்சிராப்பள்ளி.

48வது சென்னை புத்தகக் காட்சியில்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 600/-




₹ 80/-




₹ 120/-




₹ 200/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

Article

# EXPLORING DALIT CONSCIOUSNESS AND RESISTANCE IN MEENA KANDASAMY'S POEM TOUCH




**P.Lakshmanan**
**&**
**Dr.S.Balasundari**

**Introduction**

Meena Kandasamy fights against the atrocities done to the Dalits. Her works focus on issues of caste and gender oppression. Her poems and writings are predominantly centred around feminism and caste reform in the modern-day India. Hailing from a caste-conscious background, her poems reflect a society that grants inhuman sanction to caste discrimination and violence on Dalits. Kandasamy uses her poetry as a weapon of resistance against the system of caste which makes superior people to subjugate the non-dominant castes. This is exemplified in the title of her first collection Touch, which reiterates the inhuman stigmas attached to Dalits especially their very 'touch' being considered as contaminating. Kandasamy's poem Touch expresses her feelings towards the predicament of Dalits by the biased and hypocritical Hindu customs and laughs at the ancient Brahmanical caste hierarchies that points out the binaries of the Dalits. Through the poem, Meena Kandasamy overthrows the world of Indian women's writing by setting a confrontational standard in the world of Dalit literature.

**Dalit Consciousness of MeenaKandasamy's Poem**

Meena Kandasamy's characteristic poems include this one, in which she demystifies constructed ideologies based on sociopolitical ideas and dispels its misconceptions. She continues by explaining how opposition to caste-based hierarchy was all that kept snakes from being branded "vile-creatures," much as the Dalits are expelled from towns and villages and given a separate boarding school. Although the reasons behind the snake's portrayal as a symbol of sin, prejudice, and exclusion are extremely debatable, one can easily compare the snake's situation to that of a Dalit who experiences a similar destiny. The Dalits had to reconstruct their manufactured images and identities as a result of the poem's critical contents. "Becoming a Brahmin" is another of Meena's physical or visual poems that departs from the traditional guidelines for poetry creation. It is written in the form of stages that turn a Shudra into a Brahmin, much like an algorithm or computer program. She mocks the caste-based marriages that were attempted, and largely successful, in eradicating the consequences of caste. She then continues on to the Dalit community, which still needs to shed its caste identities. The second algorithm reads, "Awaiting another Father of the Nation/ to produce this algorithm," suggesting that the "Father of the Nation," Mahatma Gandhi, has not yet produced it. (Touch 42) he quips sarcastically that she satirizes nationalism and nationalist movements by depicting as a disclaimer, conveniently placed inside brackets, "(Inconvenience caused due to inadvertent delay/ is sincerely regretted)" (Touch 42), meaning to convey that there is a long waiting in the process of the change that may or may not occur. This poem pokes fun at every aspect of an intercaste union in an effort to promote the abolition of castes, but the effort was only partially successful. Meena specifically targets the younger members of the upper caste in her poem "Dignity." A man or woman is born into a specific caste according to the good deeds they performed in their previous births, according to the common usage of the word "virtuous" as an adjective to describe people and actions (Sambaiah, 115). This belief is based on religion and caste. Meena writes,

*You are virtuous children*
*of virtuous fathers*
*born in an envious*
*position because of*
*your virtuous deeds. (Touch 43)*

She vehemently criticizes the mindset of the upper caste people's generations, calling in particular how they cling to their caste identity "an incurable sickness of your minds" (Touch 43). But from a Dalit, no pushback can be mounted to prevent them from engaging in this discrimination, which has been fostered to inculcate the same views in next generations. We don't prohibit you from tending centuries' worth of developed superegos, she writes. (Touch 43) In order for these people to benefit from the privilege of belonging to the upper caste that "hierarchy provides," the Dalits have been in a submissive posture. Now, she commands, "don't suppress/ our rightful share of dignity," with understanding. (Touch 43) Since "the appearance/Of the footprint/Of a bird/On water" cannot be used to verify the hierarchy established by the supposedly virtuous activities. (Touch 43) She expresses such distress as she claims that despite the lack of any supporting proof, this has been passed down through the centuries and has successfully altered people's attitudes for a very long time. The poem "Ekalaivan," one of the most significant in the collection, is about the figure Ekalavya, or Ekalaivan (in Tamil), from the Indian epic Mahabharata, which tells the tale of an accomplished archer in antiquity. The account, however, that describes how he was requested to amputate his right thumb in order to pay gurudhakshina (fees given to a teacher), contains evidence of societal prejudice. King Arjuna, his preferred student, was originally rejected by Dronacharya (a teacher in divine weaponry), who called him a Shudra (a member of a low caste), but he made a vow to turn him into the finest archer in the entire world. When Ekalavya demonstrated his proficiency in archery, Dronacharya was distressed and requested Ekalavya's right thumb as the gurudhakshina he needs to pursue archery. Dronacharya's treatment of Ekalavya has drawn a lot of criticism for this story. The narrative illustrates how casteist oppression had been used to impugn the



teacher-student code of ethics. Meena picks up this narrative and flips the Dalit identity hierarchy. She urges Dalits, like Ekalavya, to take a stand against caste marginalization and leave the difficult situation at all costs.

She writes,

*You can do a lot of things*
*With your left hand.*
*Besides, fascist Dronacharyas warrant*
*Left-handed treatment*. (Touch 44)

In an interview with Ujjwal Jana, she discusses her plans to go back in time and give the character of Ekalavya a militant streak.

She says,

... he's [Ekalavya's] actually better than the best when it comes to talent

and hard-work, he doesn't have access to the best resources, his success is envied by caste-Hindu students and 'upper' caste teachers, who have

the power to crush him. (Jana 2)

She makes a comparison to how Dalit pupils are discriminated against and denied access to education in modern educational institutions. "I believe that contemporary Ekalavyas are being forced to pay a bitter guru-dakshina to educational institutions," she asserts. Sadly, I believe that they pay a price that exceeds the value of a thumb (Jana 3). She argues that statistics show there is "a great degree of academic terrorism and it is taking its toll" when Dalits get admitted to higher education institutions. (The poem makes the claim that even after years of repression, the lost spirit can be recovered. Meena writes the poem in an effort to evoke Ekalavya's "militancy and to remind him that there are many ways in which he might get back at the system... It was intended to be a call to action.) It was intended to convey to everyone who had experienced oppression in the classroom that they shouldn't put up with it and should instead rebel (Jana 3). She even brings up the deliberate exclusion of Dalits from schooling. Meena says in her interview, "Choosing between Do Not Enter and Drop Out is difficult.

She also plants seeds of inspiration through the lines in the hearts of Dalits who have fallen victim to the hierarchy.

Also

*You don't need your right thumb,*
*To pull a trigger or hurl a bomb. (Touch 44)*

At a deeper level, the poem "Evil spirits" questions the caste-based laws and the misogyny that still pervades society. In the poem, she expresses her yearning for justice, outrage for violence against women, and passion for change. The patriarchy oppresses Dalit women in ways that go beyond caste. Her usage of the epistrope or epiphora "die" denotes that the results of such behavior result in the demise of these helpless ladies. Additionally, the persistent metaphor of "skin" in the poem connects the experience to casteist attitudes of how women are treated.

She writes,

*leaves their puncture marks, which*
*can be faintly seen on our black skins;*
*skins that bear greater scars,*
*reminders of larger, human cruelty... (Tou*ch 45)

She uses incisive language to discuss how Dalit women are treated, including instances of misogyny as well as caste- or religious-based conditioning. The way a Dalit woman's life is gone, dead, and reduced to merely a "wandering soul" owing to the terrible treatment, followed by the body "rotting away" (45).

However, those who are cruel never have to face death, and nothing can make those from the upper caste stop being cruel. Accordingly, she writes, "... At last, we die./ We die." (Touch 45) The Dalit slums that were destroyed due to numerous politicized reasons are depicted in the poem "Fire" through pictures. The poem describes the sputtering slum fires that obliterate the Dalit dwellings. Even if there are many possible explanations for the tragedy, the Dalit people's lives are put in danger when the slum is burned down. In Touch 46, she penned, "Our huts are burning-/Regular huts in proper rows." The documented narratives address the complaint of the people that they don't do enough to provide justice. She raises concerns about the predisposition of powerful social forces like the media, who were occupied with trying to cover it so that the story would be out the following day.

*few flashy cameras record*
*glimpses of destruction*
*(for tomorrow's paper)... (Touch 46)*

The unsettling struggles of the Dalit people, who are subjected to numerous forms of societal oppression but are hidden by the diversity of their experiences, are vividly depicted in this poem. She captures the voices of the silenced groups in society pleading for assistance.

*In the lines,*
*The feverish cries continue*
*in the same shrilly pitch*
*echo, echo,echo and*
*finally reach...*
*No response. (Touch 46)*

In the last two lines, she refers to the upper class as "those above are (mostly):/ indifferent bastards," expressing her rage at the unequal social order that used Dalits as scapegoats and the administration's blatant ignorance of corruption and money-laundering schemes. (Touch 46)

Meena conveys a powerful sense of loss in the poetry "Fleeting" that is shared by the indigenous people who lack any sense of history. She claims that Dalits have forgotten everything about their history, including the injustice and misery they endured and the long overdue equality and justice that was meant for them. Dalits have been "perhaps destroyed" or denied their past, according to Touch 47. Any attempts to reclaim the past only produced painful memories

She writes,

*Our history is lost,*
*perhaps destroyed.*
*And efforts at recollection*
*Entail in melancholy. (Touch 47)*

The caste continues to exist despite the process of erasing its histories. These were accomplished through the efforts of politically fabricated structures that were designed to only enslave Dalits. These historical tales are sad because they only describe the "bitter past" and how they plan to be marginalized. Meena describes the discomfort as, questions the normative conventions and the historical narratives of a solution. Meena registers the pain as,

*Caste perennially remains*
*a scheming bulldozer*
*Crushing only the Dalits-*
*And renewing, revoking our bitter past.*
*We move about, measuring our ages in sorrows.*
*But when can we get to live our lives in retrospect?*
*(Touch 47)*

Similar to this, Meena exposes the truths about the utterly pointless, terrifying realm known as "religion" in the poem "For sale" and uses her words to slaughter those changes. The poem makes fun of how a wealthy Dalit man is permitted to enter a temple and stand close to the altar blessings from the gods. Compared to Meena's other poems, this one uses a vocabulary that is uncommon or an unidentified dialect. This dialect is more comparable to, and shares parallel occurrences with, the African American Vernacular Dialect (AAVE), sometimes known as the "Ebonics." This could have also been a purposeful attempt by Meena to write about the untouchables in a language of the oppressed in a far-off region who experienced a similarly horrible experience, and in most cases, Meena did succeed in doing this.

Black Americans' life in America can be compared to Dalits' experiences in India. She explains why and how the Dalit man was permitted inside the temple, destroying the long-standing custom that allowing an untouchable inside would

'pollute' the temple and its gods. Due to his current wealth, he is permitted entry when his forefathers were turned away. He goes to the temple, where "his po' ol' folks ain't allowed" (Touch 48), which is code for "his poor old folks" (parents and ancestors) are not accepted. Further details on the Dalit man's activities inside the temple are given, including how "he spent money" to purchase flowers, coconuts, a "standing place" there, and a "special prayer in his name" (Touch 48). He offers the temple priest an additional fifty rupees, and the priest blesses him further. This is a jab at the Brahmins' hypocrisy.

She writes,

*He stand there and stare,*
*Stare hard at the Gwad;*
*His first time in temple. (Touch 48)*

The poem has demolished the stereotype that a Dalit could not enter a temple since doing so would defile the gods. She winks as she says that having money would enable one to purchase a Luxmee idol in addition to more blessings.

She ends the poem by expressing her belief that justice will prevail as long as strong voices continue to unite in order to spread awareness and tear down barriers created by divisive forces. She speaks out against numerous caste and gender discriminations. She questions and challenges the traditional caste system and rigid society that forbid inter-caste relationships, especially between the higher and lower castes, and condemns the mental scars inflicted on Dalits and Dalit women in the name of caste hierarchies. At the same time, she celebrates the growing consciousness to change mindsets. The people concerned in caste boundary violations receive harsh sanctions.

**Conclusion**

Meena Kandasamy works to unearth historical voices that have gone unheard and to retell historical events in a way that attempts to recover the evanescent hints of the countless struggles and throbs in the lives of untouchables and women, who are typically from disadvantaged areas of society and who have had a large portion of their circumstances obscured by the overarching socio-political discourse towards others. Meena therefore intends to "problematize" the absoluteness of history and real stories that serve as examples of the concealed flow of energy. In her fixation on the very diversity of experiences and personalities of others, she refuses to acknowledge and rejects the moDalities and motivations underlying the creation of supreme chronicled facts in order to expose the probable results of various varied histories. Meena forcefully prohibits this power-body link and vehemently denounces the tendency of the dominant social forces to shape the personalities of the disenfranchised masses of the populace, which pushes them to the periphery of the nation and robs them of their essential rights. These socially humiliating activities and the control of these disadvantaged upper class segments drive her to incite them to challenge these social authorities and to express the diversity of their perceptions in order to uncover potential counter historical results.

**References**


- Meena Kandasamy. Touch. Mumbai: Peacock Books. 2006.
- Meena Kandasamy  Ms.Militancy. New Delhi: Navyanna. 2010.
- Davies, C. Boyce. Black Women, Writing, and Identity: Migrations of the Subject.
- London: Routledge, 1994.
- Shailaja,C.L, "Socio-political issues in the Poetry of Meena Kandasamy" Ed. by Roy,
- Vijay. The Social, Cultural and Spiritual Dimensions of Modern Indian Poetry
- in English. UK: Cambridge Scholar Publishing. 2017.
- R.V. Sharon Luther. (2023). Dalit Consciousness in Meena Kandasamy's Touch. Vidhyayana - An International Multidisciplinary Peer-Reviewed E-Journal - ISSN 2454-8596, 8(4). Retrieved from http://www.vidhyayanaejournal.org/journal/article/view/617


●



**P.Lakshmanan,**
Ph.D Research Scholar
The Gandhigram Rural Institute-(DTBU)
Gandhigram , Dindigul.

**Dr.S.Balasundari**
Associate Professor & Head ,
The Gandhigram Rural Institute - (DTBU)
Gandhigram , Dindigul.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 115/-





₹ 550/-





₹ 400/-




₹ 90/-




₹ 220/-




₹ 300/-

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in



Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**


New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

NCBH

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

## முன் வெளியீட்டுத் திட்டம்

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்




**தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு**

| | |
|---|---|
| **2400 பக்கங்கள்**<br>விலை ~~ரூ.3000/-~~<br>முன் வெளியீட்டுத் திட்டத்தில்<br>**ரூ.1500/-** மட்டுமே!<br>(தபால் செலவு உட்பட) | 1/8 டெம்மி அளவு தரமான தாள்<br>கெட்டி அட்டை வடிவமைப்புடன்<br><br>முன்வெளியீட்டுத் திட்டத்தில் பணம் செலுத்திப் பதிவு செய்துகொள்ளலாம் |

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in